கல்கி

KALKI 20.8.2000
ரூ. 5.00



# ரம்பா போனார் லைலா வந்தார்!

# RPG - HMV

## பெருமையுடன் வழங்கும்

# PURE GOLD

(Premium Range of **Sangeetha**)

**உங்களுக்கு மிகவும் பிடித்த அபிமான பக்தி பாடல் தொகுப்புகளை ஒரு தொடரில் அமைத்து, கீழ்க்கண்ட தொழில் நுட்ப மேம்பாட்டுடன் புதுப்பித்து வழங்குகிறோம்.**

- பிரபல்மான என்றென்றும் இனிய பக்தி இசைத் தொகுப்புகள்
- டிஜிட்டல் முறையில் புதுப்பிக்கப்பட்டு மறுபதிவு செய்யப்பட்டவை
- 60 நிமிடத்துடன் தெவிட்டாத செவி விருந்து
- தரமான உதிரிப் பொருட்களை கொண்ட கேசட்டுகள் மற்றும் உயர்தர ஒலிநாடா
- உயர்தர பேக்கிங் மற்றும் கவர்ச்சியான தோற்றம்
- ஒட்டு மொத்தமாக பார்த்தால் சர்வதேச பொருள்தரம் கொண்ட ஒலிநாடா
- இன்றே வாங்கி, கேட்டு மகிழவும் !




## எல்லா கடைகளிலும் கிடைக்கும்

RPG HMV

# "கூட்டணிக் கட்சிகள் குனியச் சொன்னால் பா.ஜ.க. தவழ்கிறது!"



மடுவன்கரையில் ஒரு சமுதாய நலக் கூடம். பட்ஜெட் நாற்பது லட்சம். சைதாப் பேட்டையில் பெண்கள் பள்ளிக் கூடத்துக்கு இருபத்தைந்து லட்சத்தில் கூடுதல் வகுப் பறைகள். சேலத்துக்கு அருகில் ஒரு கிராமத்தில் பெண்கள் பள்ளிக்கு வகுப்பறைகள். (பதினாலு லட்சம்) இப் படி மானாமதுரை, விருதுநகர், ஊத்துக்குளி, நாமக்கல் என்று பல ஊர்களிலும் பள்ளிக் கூடங்களுக்குக் கட் டடங்கள் அனைத்துக் கும் ஏற்பாடு செய்திருப் பவர் சோ!

ராஜ்ய சபா எம்.பி. என்கிற முறையில், தொகுதி மேம்பாட்டுக்கு ஒதுக்கப் படும் நிதியிலிருந்துதான், இந்த திட்டங்கள் எல்லாம். தமி ழகத்தில் பல பகுதிகளி லிருந்தும், இவருக்கு வந்த கோரிக்கை களின் அடிப்படை யில் இவை தேர்ந் தெடுக்கப்பட்டி ருக்கிறதாம்.

**''எம்.பி. என்ற முறையில் உங்கள் அனுபவம் எப்படி இருக்கிறது?''**

"துக்ளக்கில் பெரும்பாலான விஷயங் களை நானே எழுதிகிறேனில்லையா! அத னால் பத்திரிகை வேலையையும் கவனித்துக் கொண்டு பாராளுமன்றத்துக்கும் போய் வருவது கஷ்டமாக இருக்கிறது. டெல்லி யிலேயே தங்கியிருக்க முடியுமானால், இன்னும் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்று நினைக்கிறேன். பாராளுமன்றம் நடக்கிறபோதுகூட, பத்திரிகை வேலையை கவனிப்பதற்காக வாராவாரம் சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது இதனால் கேள்வி நேரத்தில் பங்கேற்பதில் சிரமம் ஏற் படுகிறது. வாய்மொழி பதில் கோரப்படும் கேள்விகள், அவையில் எடுத்துக் கொள் ளப்படும்போது கேள்வி கேட்ட எம்.பி. அவையில் இருந்தால்தான் பதில் கிடைக்கும். அதற்காக, கேள்வி எழுப்பிவிட்டு, பதில் எப்போது கிடைக் கும் என்று தெரியாமல், சென்னையில் வேலை இருக்கும்போது, அங்கே உட்கார்ந்திருக்கவும் முடியவில்லை. கொஞ்சம் குழப் பமாகத்தான் இருக்கிறது. ஆனால் இதற்காக யாரையும் குறை சொல்ல முடி யாது. இருந்தாலும், இன்னும் சிறப்பாகச் செயல்பட என்ன வழி என்று யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்"

**''ராஜ்ய சபையில் என்னென்ன விஷயங்கள் குறித்து இதுவரை நீங்கள் பேசியிருக்கிறீர்கள்?''**

"ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது பேசி னேன். உணவுமான்யம் பற்றி அப்போது குறிப்பிட்டேன். அமெரிக்கா போல, ஹெல்த் இன்ஷூரன்ஸ் திட்டங்கள் இங்கே

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



**"எங்க வீட்டு ஃபோனை என் பசங்க தான் அதிகமா யூஸ் பண்றாங்க."**

**"நீங்க அதிர்ஷ்டசாலி சார்... எங்க வீட்டு ஃபோனை பக்கத்து வீட்டுப் பசங்கதான் அதிகமா யூஸ் பண்றாங்க...!"**

**— சீர்காழி வி. ரேவதி**

---

இல்லாத சூழ்நிலையில், மக்களின் அடிப்படைத் தேவையான உணவுக்கு மானியம் வழங்க வேண்டியது அவசியம் என்று பேசினேன். ஏழை மாணவர்களுக்கு இலவசமாக ஹாஸ்டல் இணைந்த பள்ளிகள் துவக்கி, தரமான கல்வி கற்பிப்பது பற்றிப் பேசினேன். காஷ்மீர் விஷயத்தில், நமது ராணுவத்தினர் நடவடிக்கையில் ஈடுபடுகிறபோது, சில தவறுகள் நிகழலாம். ஆனால், அதற்காக, ராணுவத்தினர் மட மாரலைஸ் ஆகும்படி நடவடிக்கை எடுக்காதீர்கள் என்று குறிப்பிட்டேன். கிரிக்கெட் பெட்டிங் பற்றிய விவாதத்தின்போது பேசினேன்... என்ன.. அரசியல் கட்சிகள் என்றால், அதிக நேரம் ஒதுக்குகிறார்கள். தனி நபர்கள் பேச, நிறைய வாய்ப்புகள் கிடைப்பது இல்லை... காவிரித் தண்ணீர் கொடுப்பதில் பிரச்னை, கிருஷ்ணா தண்ணீர் கிடைப்பதில் பிரச்னை... இப்படி, ஒரு மாநிலத்தின் அத்தியாவசியத் தேவையான தண்ணீரைக் கொடுக்க அண்டை மாநிலங்கள் அடம்பிடித்துக் கொண்டிருக்க, தேசிய ஒருமைப்பாடு பற்றி நாம் வாய் கிழியப் பேசிக்கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம். இதை பார்த்துக் கொண்டு, மத்திய அரசு சும்மா இருப்பது சரியில்லை என்றும் பேசினேன்."

***"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராளுமன்றத்துக்கு வரும் எம்.பி.கள், அதற்கேற்ற முறையில் நடந்து கொள்ளுகிறார்களா?"***

"பரவாயில்லை. எல்லா சமயங்களிலும் மோசமாக நடந்து கொள்ளுவதில்லை"

***"டெல்லியில் வீடு கொடுத்துவிட்டார்களா? டெல்லி வாழ்க்கை எப்படி உள்ளது?"***

"ம். ஒரு ஃப்ளாட் கொடுத்திருக்கிறார்கள். டெல்லி வாழ்க்கை... நான் இரண்டு, மூன்று நாள்தானே அங்கே இருக்கிறேன்? வீட்டில் இருக்கும் நேரத்தில் படிக்கிறேன். துக்ளக் வேலையை டெல்லிக்கு எடுத்துக் கொண்டு போய் பண்ணிக் கொண்டிருக்கிறேன்."

***"சாப்பாட்டில் பிரச்னை இல்லையா?"***

"ஊகூம். ஒரு தமிழர் சமைத்து அனுப்பி வைத்து விடுகிறார்."

***"கிரிக்கெட் சூதாட்டப் பிரச்னை பற்றி உங்கள் கருத்து என்ன?"***

"ரொம்ப மோசம். இந்தப் பிரச்னை வெளிப்பட்ட போது, இவ்வளவு, பரவலாக, ஆழமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. விசாரணை நடக்கிறது. ஆனால் சட்டத்தில் நிறைய ஓட்டைகள். எவ்வளவு தூரம் குற்றவாளிகள் பிடிபடுவார்கள்? தண்டனை பெறுவார்கள் என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று. குற்றம் நிரூபிக்கப்பட்டால், சம்பந்தப்பட்டவர்களுக்கு, அபராதம் போல ஏதாவது தண்டனை கொடுப்பதுதான் உசிதம். ஆட அனுமதி மறுத்துவிட்டால், யாரை வைத்துக் கொண்டு இந்தியா கிரிக்கெட் ஆட முடியும்?"

***"வாஜ்பாய் அரசுக்கு அவ்வப்போது தலைவலிகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆட்சி ஐந்து வருடம் நீடிக்குமா?"***

"எவ்வளவு பிரச்னை வந்தால் என்ன? இவர்கள்தான் பணிந்து போவதற்குத் தயாராக இருக்கிறார்களே. எமர்ஜென்ஸி பற்றி அத்வானி ஒருமுறை, 'பத்திரிகையாளர்களுக்குத் துணிச்சல் இல்லை. இந்திரா காந்தி குனிய சொன்னால் பத்திரிகையாளர்கள் தவழ்கின்றனர்' என்றார். அதேபோல் கூட்டணி கட்சிகள் குனியச் சொன்னால்பா.ஜ.க. தரையில் விழுந்து, தவழ ஆரம்பித்து விடுகிறது"

***"வீரப்பன் டிராமா தொடர்கதையாக நீளுகிறதே! முடிவு என்ன?"***

"இரண்டு மாநில அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட விஷயம். பெரிய பரப்பளவு கொண்ட காடு. லோக்கல் மக்களின் ஆதரவு இருக்கிறது என்று எவ்வளவுதான் சொன்னாலும், வீரப்பனைப் பிடிக்க முடியாது போனாலும், இந்தப் பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைப்பது என்பது முடியாத விஷயமில்லை.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**



• ஜூஹி சாவ்லா

**வ**ரி ஏய்ப்பை ஒரு கலையாகவே பலர் கற்றிருக்கும் நம் நாட்டில், எந்தெந்த பெருந்தலைவர் வீட்டில் ரெய்டு நடந்தது... எந்தெந்த நட்சத்திரங்கள் எவ்வளவு கோடிகள் வருமான வரி பாக்கி வைத்திருக்கிறார்கள்... சொந்த வருமானத்திற்கா, மேட்ச் ஃபிக்ஸிங் வருமானத்திற்கா என்பதெல்லாம் நமக்குப் பரிச்சயமானவை. இவர்களுக்கு மத்தியில் ஒழுங்காக வருமான வரி கட்டுபவர்கள் இருக்கிறார்கள் என்பதே ஒரு ஷாக்.

70,000 கோடி வருமான வரி செலுத்தும் மும்பையில் 'உத்தமர்கள்' எவ்வளவு தெரியுமா? 149 பேர்தான்! மனம் படபடக்க, "ஸம்மான் பத்ர" பெற்றிருக்கும் நேர்மையாளர்களின் பட்டியலை நோட்டமிட்டால்... கோவிந்தா, ஜூஹி சாவ்லா, ஓம்பூரி, தர்மேந்திரா, சச்சின் டெண்டுல்கர்... என்ற நட்சத்திரக் குவியல்களுக்கிடையே வெங்கடேஸ்வரன்! அட, தமிழர் என்ற உற்சாகத்தைக் காட்டிலும், வக்கீல் என்ற அடைமொழி அதிகமாக அசத்த, பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்டிருக்க வேண்டியவர், இப்படி உண்மை விளம்பியான காரணம் கேட்க, அவரது நரிமன்பாயிண்ட் ஆபிசுக்குப் படை எடுத்தோம்.



• ஸம்மான் பத்திரம் பெறும் வெங்கடேஷ்வரன்

# 'வரிந்து கட்டிப் பாராட்டுவோமா?

"பொதுவாகவே நம்மிடையே சந்தேகக் கண்ணோட்டம் அதிகம்; வெளிநாட்டிலிருந்து திரும்பும்போது, நம்மை மடக்கிக் கேள்விகள் கேட்பார்கள். நம்பிக்கையின்மை என்பது நம்மைப் பிடித்தாட்டும் பெரிய பேய். இதனால்தான் அயல் நாட்டவர்கள் இந்தியர்களை முழுமையாக நம்புவதில்லை. இதெல்லாம் எனக்கு எரிச்சலூட்டிக்கொண்டே இருக்கும். நேர்மையாக நடந்து கொண்டு என்ன பயன்? என்ற வருத்தம் மேலிடும். இருந்தாலும், கடந்த 30 வருடங்களாக நான் என் வருமான வரி அனைத்தையும் ஒழுங்காகக் கட்டி, ரீஃபண்டும் வாங்கி வரும் மடையன்" என்று சிரித்துக் கொண்டே ஆரம்பித்தார்.

"ஏய்ப்பவர்களையும் ஏமாற்றுபவர்களையும் பற்றி ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, நேர்மையானவர்களைத் தேடிப் பிடித்து அவர்களை வெளிச்சமிட்டால், ஒருக்கால் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும் என நினைப்பவர்களுக்கு அது ஊக்க போனஸாக அமையும் என்ற நல்லெண்ணம் வருமான வரித் துறைக்கு உதித்தது. மனிதர்கள் மீது நாம் நம்பிக்கை வைத்தால், அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக மாறி விடுவார்கள் என்ற அற்புதமான மனவியல் தத்துவத்தின் பிரதிபலிப்புதான் இது" என்கிறார்.

அது சரி... விருது என்றால் ஏதாவது பண முடிப்பு... காசோலை... வகையறாவா...?

"ஊஹூம். வெறும் 'பத்திரம்'தான். அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டால் அடுத்த மூன்று வருடங்களில், நாம் உலகத்தின் எந்த பாகத்துக்குச் செல்ல வேண்டுமென்றாலும் சரி... எதையாவது விற்க வேண்டும் வாங்க வேண்டுமென்றாலும் சரி... ஒரு தொந்தரவிருக்காது. இந்தச் சலுகைதான், ஸம்மான் பத்திரத்தில் கிடைக்கும் சிறு லாபம்" என்று முடித்தார்.

— ஜெயஸ்ரீ ராஜ்

# புலிகளின் காதலர்!

காடு. குட்டி யானையுடன் கொஞ்சிக் கொண்டு வருகின்றன இரண்டு பெரிய யானைகள். குட்டியின் தும்பிக்கையைப் பிடித்து ஆட்டி (குழந்தைகளின் மூக்கைப் பிடித்து செல்லமாக நாம் ஆட்டுவது மாதிரி) ஜாலியாய் வரும் அந்த யானைகள் திடீரென்று அதிர்ச்சி அடைகின்றன. குட்டியை கால்களுக்கு இடையே விட்டு மறைத்தபடி ஒரு காலைத் தூக்கி ஓங்கித் தரையில் தேய்க்கிறது ஒரு யானை. பிறகு மெதுவாகப் பின்னோக்கி அடி வைக்கின்றன யானைகள். எதிரில் கூர்மையான பற்கள் விரிய உறுமும் புலி! இப்போது புலி யானைகளின் மீது பாயப் போகிறது. கடித்துக் குதறப் போகிறது. மீண்டும் புலியின் உறுமல். பதுங்குகிறது புலி. இதோ பாய்ந்...

– 'டொக்' கென்று நம் முதுகை ஒரு கரம் தொட, திடுக்கிட்டுத் திரும்பினால்...

''டீ.வியில இப்பப் பார்த்திட்டிருக்கீங்களே இந்தக் காட்சியை நான்தான் ஷூட் பண்ணினேன்'' என்று புன்னகை செய்தபடி அல்போன்ஸ் ராய்!




அல்போன்ஸ்ராய் – வைல்ட் லைஃப் சினிமோட்டோகிராபர். பதினைந்து வருடங்களாக இந்தியா மட்டுமின்றி பல்வேறு நாட்டுக் காடுகளில் விலங்குகளின் வாழ்க்கையை கேமராவுக்குள் பதிவு செய்யும் இவர் புலிகளின் காதலர்! பி.பி.சி, என்ஜிசி, பிபிஎஸ் (பப்ளிக் பிராட்காஸ்ட் சிஸ்டம்) உள்பட பல்வேறு சர்வதேச சேனல்களில் இவரது படப்பதிவுகள் ஒளிபரப்பாகியுள்ளன.

சென்னையில் வசிக்கிறார் இந்தத் திருநெல்வேலிக்காரர்.

''எப்படி சார் இவ்வளவு தத்ரூபமா எடுத்தீங்க...?'' என்றால் 'தொழில்' என்கிறார்.

''இந்த ஒரு டாகுமெண்டரி எடுக்கறதுக்கு இருநூற்று ஐம்பது நாள் ஆகியிருக்குன்னா நம்பறீங்களா? இவ்வளவு நாளான்னு மலைச்சுப் போயிடாதீங்க. சில



டாகுமெண்டரிகளுக்கு மூன்றரை வருடமெல்லாம் செலவழிச்சிருக்கேன். சயின்ட்டிஸ்ட் சரவணகுமார், என் அசிஸ்டண்ட் தேவராஜ், நான், மூணு பேரும்தான் டீம். நாங்கதான் காட்டுக்குள்ள போவோம். இன்னின்ன காய்கள், பழங்கள், காய்க்கிற நேரம், இன்னின்ன விலங்குகள் இந்தப் பகுதிக்கு வரும்ங்கறது சரவணகுமாருக்கு அத்துப்படி. அவர் உதவியோட கேமராவைத் தூக்கிட்டுப் போவோம்.

"காலையிலிருந்து மாலை வெளிச்சம் மங்குகிற வரை காட்டுக்குள்ளதான் வாசம். அப்ப வர்ற விலங்குகளை ஷூட் பண்ணுவோம். 'ஷூட்'னா வந்தது எடுத்தோம், போனோம்னு இல்லாம ஒரு ஸ்டோரியாவே அதை எடுக்கணும். அப்பதான் அதுக்கு உயிர் இருக்கும்" என்று பேசிக்கொண்டே சென்றவர், "நான் எடுத்த இந்த டாகுமெண்டரியைப் பாருங்கனேன்" என்று ஆனைமலையில் எடுக்கப்பட்ட படத்தை டெக்கில் போட்டுக் காண்பித்தார்.

மூன்று புலிகள்... ஒன்றோடு ஒன்று விளையாடியபடி வருகின்றன. யானையின் பிளிறல் தூரத்தில் கேட்கிறது. புலிகள் உஷார் ஆகின்றன. நின்று திரும்புகிறது யானை. முகங்களில் விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி. மீண்டும் யானையின் பிளிறல்., புலிகள் பின்னோக்கிச் (?) செல்கின்றன. கேமரா திரும்புகிறது. யானையின் மெகா சைஸ் கால் மட்டும் டீ.வி திரை முழுவதும் தெரிகிறது. அதன் கால் சேற்றுப் பகுதியில் பதிந்து எழும்போது ஸ்லோமோஷனில் ஜில்லென்று மேலேறித் தெறிக்கின்றன தண்ணீர்த் துளிகள். கால் பதிந்த இடத்தில் குழி ஏற்பட்டு அருகிலிருந்த தண்ணீர் அதில் நிரம்புகிறது. எங்கிருந்தோ வந்த தவளை டொபுக்கென்று அதில் குதிக்கிறது. கேமரா மீண்டும் திரும்புகிறது. மரம். மரங்கொத்தி அதைக் கொத்துகிறது.

- இப்படி செல்கிறது அந்த டாகுமெண்டரி.

"எதை எடுக்கிறோமோ அது தொடர்பான மற்றதையும் காண்பிக்கணும். இதுக்காக கொஞ்சமல்ல ரொம்பவே ரிஸ்க் எடுக்க வேண்டியிருக்கும். இந்த நேரத்துல புலி வரும்னு எதிர்பார்த்து காத்துட்டிருப்போம். அப்ப பார்த்து யானைக்கூட்டம் வரும். இப்படி நிறைய நடக்கும். இதுக்காகவெல்லாம் டென்ஷன் ஆகாம பொறுமை காக்கணும். அதுதான் இந்தத் தொழில்ல முக்கியம்" என்று சொல்லும் அல்போன்ஸ் ராய்; 'தி லாஸ்ட் சிவிலிசேஷன்' என்ற டைட்டிலில் 'திபெத்' பற்றி எடுத்த டாகுமெண்டரிக்காக எமி அவார்டைப் பெற்றிருக்கிறார். சினிமாவுக்கு ஆஸ்கர் மாதிரி, வீடியோ படத்துக்கு எமி அவார்டாம்!

தந்தை யோகேஸ்வரமூர்த்திதான் வைல்ட் லைஃப் கேமராமேனாவதற்கு இன்ஸ்பிரேஷன் என்கிறார். சின்ன வயதிலேயே களக்காடு, முண்டந்துறை வனப்பகுதிகளில் கேமராவைத் தூக்கிக் கொண்டு அலைந்ததை நினைவு கூரும் அல்போன்ஸ், சென்னை ஃபிலிம் இன்ஸ்டிட்யூட்டில் நடிகர் நாசர், ரவி யாதவ் ஆகியோருடன் படித்தவர்.

காடுகளில் விலங்குகளால் தமக்கு ஏற்பட்ட கொடூரமான அனுபவத்தையும் சொன்னார் அல்போன்ஸ்ராய்.

கோகுலம்
செப்டெம்பர் 2000

● ஆளப்பிறந்தவன்!
– விறுவிறுப்பான புதிய படக்கதை ஆரம்பம்

● என் குழந்தைப் பருவம்!
– கவிஞர் வைரமுத்து



● சிலந்தி வலை பின்னுவது ஏன்?
– சுவையான தகவல்கள்

● கனவில் உருவங்கள் தோன்றுவது எப்படி?



ரூ. 6/- மட்டுமே

முழுமையான சிறுவர் மாத இதழ்

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!


"பீகார்ல காடுகளை அழிச்சுட்டாங்க. அங்கிருந்த யானைகள் எல்லாம் மேற்கு வங்கக் காடுகளுக்கு வந்து பசிக் கொடுமையில் வயற்காட்டை அழிச்சிட்டிருந்தது. இதை ஷூட் பண்ணலாம்னு ஒரு நாள் இரவு அந்தப் பகுதி கிராமத்து மக்களோட போனோம். யானை வந்தது. மக்கள் எல்லாம் தீப்பந்தம் கொளுத்திட்டு யானையை விரட்டினால், அது எங்களை நோக்கி ஓடி வருது. எல்லாரும் ஓடிட்டாங்க. யானை எதிர்ல வருவது, மக்கள் ஓடறது எல்லாத்தையும் நான் ஷூட் பண்ணினேன். இப்ப என் எதிர்ல யானை. நானும் கேமராவும் மட்டும் தான். நான் ஷூட் பண்ணிட்டே மெதுவா பின்னால அடி எடுத்து வைக்கிறேன். பின் பக்கம் ஒரு குளம். தண்ணீர். அதுக்கு மேலே போக முடியாது. எனக்கு நீச்சலும் தெரியாது. ஓடிப் போனவங்க எல்லாரும் அங்க போய்த் தலையை எண்ணிப் பார்த்திருக்காங்க – நான் மிஸ்ஸிங்! திரும்ப எல்லாரும் ஓடி வர்றாங்க. "அல்போன்ஸ் ஆர் யூ ஸேஃப்"னு கத்திட்டே வர்றாங்க. என்னால பேசக்கூட முடியலை. அப்புறம் அரை மணி நேரத்துக்குப் பிறகு 'பிழைச்சுப் போ'ங்கற மாதிரியானை திரும்பிப் போயிட்டுது. இது மாதிரி உயிருக்கு ஆபத்தான சம்பவங்கள் நிறைய நடந்திருக்கு" என்கிறார்.

அல்போன்ஸின் மனைவி ராதாவும் டாகுமெண்டரி தயாரிப்பாளர்தான். பெண்ணுரிமை, அறிவொளி இயக்கம் தொடர்பான டாகுமெண்டரிகளுக்காக அவார்டு வாங்கியிருக்கிறார் இவர்.

வைல்ட் லைஃப் டாகுமெண்டரியே காற்றை நம்பித்தான் இருக்கிறதாம்! விலங்குகள் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வரும்போது காற்று கொஞ்சம் வேகமாக அடித்து விட்டால்கூட ஏதோ ஆபத்து என திரும்பிச் சென்று விடுமாம். கேமராவில் 'ஜூம்' எல்லாம் ரெடி பண்ணிக் காத்திருந்தால் காற்று வந்து காலை வாரி விடும் என்று சொல்லும் அல்போன்ஸுக்கு ஒரு வருத்தம் இருக்கிறது.

"இந்தியாவில் பெரிய பெரிய காடுகள் எல்லாம் இருக்கு. இங்க இருக்கிற விலங்குகளையும் அதோட வாழ்க்கையையும் எடுத்துட்டுப் போய் எங்கயோ இருக்கிற அமெரிக்கர்களும் பிற நாட்டுக்காரங்களும்தான் பார்த்து ரசிக்கிறாங்க. இந்தியர்கள் பார்க்கிறாங்களான்னே தெரியலை. வைல்ட் லைஃப் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே அவசியம் வளரணும்" என்கிறார் கொஞ்சம் வருத்தத்துடன்!

— செ. ஏக்நாத்

படங்கள்: ஜரிஸ்

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

# பவர்ஃபைனான்ஸ்

## தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

## டெபாசிட் திரட்டும் முகாம்

**சேலம்**

### ஸ்ரீ வாசவி வசந்த மண்டபம்

37, முதல் அக்ரஹாரம், சேலம்-635 001.

தொலைபேசி : 265460

**நாள் : 23 & 24 ஆகஸ்ட், 2000**

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

**கரூர்**

### நாரதகான சபா

1, காந்தி சாலை (தெற்கு)

பழைய பேருந்து நிலையம் அருகில், கரூர்-639002

தொலைபேசி : 60678

**நாள் : 25 ஆகஸ்ட், 2000**

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

# 12.12%

36 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மாதாந்திர வட்டி 12.00%. 12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%.
24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%

# 16.34%

60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டுவட்டி ஆண்டிற்கு 12.00%)

**உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்**

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :*

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)**

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

---

[illegible] தேதியிட்ட [illegible] இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

"Also available on the Internet" www.tn.gov.in www.chennaionline.com www.aaraamthinai.com www.southindia.com


# குறைந்த செலவில்

நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த சுசிலாவுக்குச் சிறுநீரகங்கள் பழுதாகி, இரண்டு வருடமாக டயாலிஸிஸ் செய்துகொள்ளுகிறார். கீழ் மத்திய தரக்குடும்பத்தைச் சேர்ந்தவர் இவர்.

கே.கே.நகர் ஜான்சி மூன்று மாதங்களாக டயாலிஸிஸ் செய்து கொள்ளுகிறார். இவரும் கீழ் மத்திய தரக் குடும்பம்தான்.

சுசிலாவையும் ஜான்சியையும் போல நூற்றுக்கணக்கான டயாலிஸிஸ் நிலை நோயாளிகளுக்கு ஆறுதல் அளிக்கிற ஒரே அமைப்பு: TANKER FOUNDATION. தமிழ்நாடு கிட்னி ரீசர்ச் ஃபவுண்டேஷன் என்பதன் சுருக்கம்.

• டயாலிஸிஸ் சென்டரில்...



"என் மாமியார் டயபடிஸ் நோயாளி. கூடவே சிறுநீரகக் கோளாறு காரணமாக டயாலிஸிஸ் செய்து கொள்ள வேண்டிய நிலைமையில்தான் லண்டனிலிருந்து சென்னை வந்தார். அப்போதுதான் டயாலிஸிஸ் செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் நோயாளிகளின் கஷ்டங்களை என்னால் உணர முடிந்தது. அதிலும், வாரம் இரண்டு தடவை டயாலிஸிஸ் செய்து கொள்ள வேண்டும் என்கிறபோது, பொருளாதார ரீதியாக மத்திய தரக் குடும்பங்கள் படும் அவஸ்தை மிகக் கொடுமையானது!" என்றார் டாங்கர் ஃபவுண்டேஷனின் மானேஜிங் டிரஸ்டி லதா குமாரசாமி.

இப்படிப்பட்ட நோயாளிகளுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கம் கொண்ட நாலைந்து பேர் சேர்ந்தால்தானே ஓர் அமைப்பை உருவாக்க முடியும்?

இங்கிலாந்திலும், குவைத்திலும், கனடாவிலும் பணியாற்றி இப்போது ராமச்சந்திரா மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் ஜியார்ஜி அப்ரகாம்.

சினிமா நடிகரும், தயாரிப்பாளருமான பாலாஜியின் மகன் சுரேஷ் பாலாஜி,

நடிகை ரேவதி, எஸ்ஸார் நிதி நிறுவன இயக்குநர் வெங்கடேசன்.

அபான் குருப் நிறுவனங்களின் அதிகாரி ரென்னி ஆப்ரகாம், எல்லோரும் கரம் கொடுக்க உருவானது இவ்வமைப்பு!

ரானே, லார்சன் ட்யூப்ரோ நிறுவனம், பாரத ஸ்டேட் வங்கி, சிண்டிகேட் வங்கி, அபான் குருப் நிறுவனம், ஐசிஐசிஐ என்று நிறுவனங்கள் டயாலிஸிஸ் கருவிகள் வாங்க நிதியுதவி செய்தன. தவிர, லயன்ஸ், இன்னர் வீல் போன்ற சமூக நல அமைப்புகள் அவ்வப்போது நிதி அளித்து ஊக்குவித்தன.

"94-95 ஆரம்பத்தில், எங்களுக்கு இடம் இல்லாததால் தமிழ்நாடு ஹாஸ்பிடலில், குறைந்த செலவில் டயாலிஸிஸ் வசதி அளித்து வந்தோம். டாக்டர் ஜியார்ஜியின் மாமனார் கே.வி. ஜார்ஜ், மறைந்த தமது மகள் ரேகா நினைவாக, தமது வீட்டின் மாடியை டயாலிஸிஸ் சென்டர் அமைத்துக் கொள்ள நன்கொடையாக வழங்கினார். இங்கே இப்போது ஆறு டயாலிஸிஸ் இயந்திரங்கள் வைத்திருக்கிறோம்"

766, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ரேகா நினைவு டாங்கர் ஃபவுண்டேஷன்

# டயாலிஸிஸ்!

டயாலிஸிஸ் சென்டருக்கு நாம் போன போது நான்கு பேருக்கு டயாலிஸிஸ் சிகிச்சை நடந்து கொண்டிருந்தது.

"குணராஜ், லக்ஷ்மண், சிஸ்டர் பரிமளா, சிஸ்டர் ராஜேசுவரி எல்லோரும் டயாலிஸிஸ் அளிப்பதில் முறையான பயிற்சி பெற்றவர்கள். பல வருட அனுபவம் பெற்றவர்கள்'' என்றார் மையத்தைக் காலை முதல் மாலை வரை பொறுப்பாகக் கவனித்து வரும் நிர்வாகி சதாசிவம்.

''ஆரம்பத்தில் 450 ரூபாய் கட்டணம் வசூலித்து வந்தோம். இப்போது 600 ரூபாய் வாங்குகிறோம். இதில் டயலைசர் மற்றும் ட்யூப் சில மருந்துகள் செலவும் அடங்கும்!'' என்றார் சதாசிவம். இதையே வேறு இடங்களில் செய்து கொண்டால் எண்ணூறு ரூபாய்க்கு செலவாகும்.

சில நன்கொடையாளர்கள், தாங்கள் குறிப்பிடும் தினத்தன்று, டயாலிஸிஸ் செய்து கொள்ளுவோருக்குக் குறைந்த கட்டணம் வசூலிக்கச் சொல்லி, நன்கொடை கொடுப்பது உண்டாம். சிலர் முழு இலவச டயாலிஸிஸ் செய்து கொள்ள நன்கொடை வழங்குவதும் உண்டாம்.

"எங்களுக்கு நன்கொடைகள் அதிகமாக வரும் பட்சத்தில் கட்டணத்தை இன்னும் குறைத்து, மேலும் பலருக்கும் உதவ முடியும்!" என்கிறார் லதா குமாரசாமி.

அறுநூறு ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வசூலிக்கும் டாங்கர் ஃபவுண்டேஷனின் சேவையும், பணியும் பலருக்கு நிச்சயம் ஆறுதல் அளிக்கும்.

"இதைத் தவிர சிலருக்கு அவ்வப்போது வெளியூர்களில் டயாலிஸிஸ் செய்து கொள்ளவும், சிறுநீரக சிகிச்சை மேற்கொள்ளவும் எங்களால் இயன்ற நிதி உதவி அளிக்கிறோம்!" என்றார் லதா குமாரசாமி. (பொள்ளாச்சியிலிருந்து தமது மனைவியின் சிகிச்சைக்காக வந்தவரிடம் செக் கொடுப்பதைப் பார்த்தோம்.)



* சதாசிவம்



* ஜியார்ஜி அப்ரஹாம்



* லதா குமாரசாமி

''சுற்று வட்டாரத்திலும், கிராமப்புறங்களிலும் பலருக்கு டயாலிஸிஸ் தேவைப்படுகிறது. அவர்களால் நகரத்துக்கு வந்து சிகிச்சை பெற வசதி ஏதும் இல்லை. அவர்களுக்கு உதவ, பாரத ஸ்டேட் பாங்க் மொபைல் டயாலிஸிஸ் யூனிட் வாங்கித் தந்திருக்கிறது. விரைவிலேயே அது செயல்படத் துவங்கும்!'' என்கிறார்.

பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை, சிறுநீரகக் கோளாறு நோய்கள் பற்றிய, பொது மக்களுக்கானச் சொற்பொழிவுகள் ஆராய்ச்சி மாணவருக்கு நிதியுதவி என்று இவர்கள் பணி மேலும் விரிவடைந்து கொண்டிருக்கிறது.

படங்கள், கட்டுரை:
**சாருகேசி**

# எரிவாயு ஏகாம்பரம்!



''அவரை கட்சில 'எரிவாயு ஏகாம்பரம்'னு சொல்றாங்களே...ஏன்?''
''நிறைய பேருக்கு கேஸ் இணைப்பு வாங்கித் தந்திருக்காரே!''
– அம்பை தேவா

''என்னப்பா இது. வழக்கமா நல்ல டீ குடுப்பே, இன்னிக்கு நல்லாவே இல்லையே...''
''என்ன சார் செய்றது. புளியங் கொட்டை கலந்த டீத்தூளை எல்லாம் பறிமுதல் பண்ணிட் டாங்களே!''
– எஸ். மோகன்





''சோமு பெரிய ரேஸ் பைத்தியமாமே?''
''அதை ஏன் கேக்கறே! ஏதோ கற்பனைக் குதிரைன்னு சொல்றாங்களே! அது எந்த ரேஸிலே ஓடுதுன்னு கேக்கறான்!''
– மெலட்டூர் விசுவநாதன்

''நேத்திக்குத்தான் நல்லபடியா தார் ரோடு போட்டாங்க; இன்னிக்கு அதையே கொத்த றாங்களே, மின்வாரியமா, மெட்ரோ வாட்டரா?''
''ரெண்டுமில்லே, பக்கத்துத் தெருவில போடவேண்டிய தார்ரோட்டைத் தவறுதலா இங்கே போட்டுட்டாங்களாம், அதனால...''
– பர்வதவர்த்தினி



## Indian Institute of Management & Technology

25, Mada Church Road, Mandaveli,
Chennai - 600 028.INDIA Ph : 4956036
Fax : 495 2692. e.mail:icolam@hotmail.com

*in association with*

## ALL INDIA COUNCIL FOR MANAGEMENT STUDIES

No. 29, Lazarus Church Road, R.A. Puram,
Chennai - 600 028. INDIA Phone: 4956833
Fax: 493 3259. e-mail:aiicas@hotmail.com

IIMAT andAICOMAS jointly offers the following **One Year** and **Six Months** Diploma Courses by correspondence

### ONE YEAR DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* MARKETING MANAGEMENT
* TOTAL QUALITY MGMT. & ISO 9000 / QS 9000
* MATERIALS MANAGEMENT
* EXPORT & IMPORT MGMT.
* HOTEL MANAGEMENT
* CATERING MANAGEMENT
* BANKING & INSURANCE MANAGEMENT
* TRAVEL & TOURISM MGMT.

**Eligibility:** No formal qualification (Open Education System). **For Application and Prospectus send Rs. 10/- Postal stamp** to any one of the above Institute.-

### SIX MONTHS DIPLOMA COURSES

* BUSINESS MANAGEMENT
* BUSINESS ADMINISTRATION
* OFFICE ADMINISTRATION
* SALES & MARKETING
* FINANCIAL MANAGEMENT
* INDUSTRIAL RELATIONS & PERSONNEL MGMT.
* HUMAN RESOURCES DEVELOPMENT
* LABOUR LAWS
* EXPORT AND IMPORT MGMT.
* FOREIGN TRADE MGMT.
* MATERIALS MANAGEMENT
* PRODUCTION MANAGEMENT
* FOOD & BEVERAGE MGMT.
* FOOD PRODUCTION MGMT.
* COMPUTERS IN OFFICE MGMT.
* COMPUTER APPLICATION
* HOTEL MANAGEMENT
* BANKING MANAGEMENT
* INDUSTRIAL SAFETY
* QUALITY CONTROL & ISO 9000
* ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
* ADVERTISING & PUBLIC RELATIONS
* INTERNATIONAL BUSINESS TECH.
* BUSINESS INFORMATION SYSTEM
* MANAGEMENT INFORMATION SYSTEM
* HEALTH & HOSPITAL MANAGEMENT
* TEACHER TRAINING EDUCATION
* EDUCATIONAL MANAGEMENT
* RESEARCH & DEVELOPMENT
* TOTAL QUALITY MGMT. & ISO 9000
* NETWORKING & INTERNET APPLICATION
* QUALITY ASSURANCE & QS 9000/ISO 9000
* SOFTWARE CAPABILITY MATURITY MODEL (guidelines for improving software process)
* INTERNATIONAL AIRLINES MANAGEMENT (Affiliated/Recognised by Westwind Aviation Academy, Arizona, USA)

**We also conduct Post-Graduate Diplomas. (Duration - 18 months). Kindly write to any one of the above institute for more information.**

# கச்சேரி கேட்க கத்துக்கங்க!

**"பா** பா பா பி பீ பி பு கா கா கி கி கூ......"- பாடகர் டி.எம். கிருஷ்ணா ஆலாபனை பண்ணிக் காண்பித்தார்! நல்ல வேளையாக அது பத்து வினாடி சாம்பிள் தான்!

"இதுவும் சங்கராபரணம் ராகம் தான். ஆனால் கேட்க நன்றாகவா இருக்கிறது? 'ததரின னொ...' என்பது காதுக்கு இதமான ஒலி அமைப்பு- அதனால் அதைப் பயன்படுத்தி ராக ஆலாபனை செய்கிறோம்...'' -விளக்கம் தொடர்ந்தது.

'ததரினன பாட்டா நமக்கு வேண்டாம்பா!' என்று பயந்தும் புரியாமலும் ஒதுங்கிய பலரை அழைத்து, ஒரு நாள் முழுதும் கச்சேரி கேட்கக் கற்றுக் கொடுத்தது மூவர் அணி- விஜய் சிவா, பாம்பே ஜெய்ஸ்ரீ, டி.எம். கிருஷ்ணா- மூவருமே பள்ளிகளில் இது போன்ற நிகழ்ச்சிகள் வழங்கி அனுபவப் பட்டவர்கள். கோவை 'ஆலாபனா' அமைப்பு கேட்டுக் கொண்டதன் பேரில் அங்கே ரெஸிடன்ஸி ஹோட்டலில் ஆறு மணி நேரம் பேசியும் பாடியும் விளையாடியும் சுமார் 150 பேரைக் கவனிக்கச் செய்தார்கள்.



• பங்கேற்றவர்கள்

கோபாலகிருஷ்ணன், சித்தார்த் என்று இரண்டு பொடியன்கள், ஒரு கேடரிங் டெக்னாலஜி மாணவர், பொறியியல் கல்லூரியிலிருந்து இருவர், திருப்பூரில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் வைத்திய நாதன், ஈரோடிலிருந்து இளம் மருத்துவர் டாக்டர் உமா, கல்லூரி மாணவிகள் நந்தினி, வித்யா, சுஜனா, 'முப்பத்தொம்பது வருஷமா மியூசிக் அகடமி போறேன்' என்ற பெரியவர் நாராயணசாமி, பல பளபள மாமிகள், தொழில் துறை பெரும் புள்ளிகள், கம்பெனி நிர்வாகிகள் என்று அவியலாக ஒரு கூட்டம். அத்தனை பேரும் முந்நூறு ரூபாய் கட்டணம் செலுத்தி, இறுதி வரை பங்கேற்று மகிழ்ந்திருக்கிறார்கள்.

லேப் டாப் ஒரு புறம் டேப் ரிகார்டர் ஒரு புறம் வைத்துக் கொண்டு கிருஷ்ணா அஷ்டாவதானம் செய்ய, ஒரு ஹரிகதை விற்பன்னரைப் போல் விஜய் சிவா விஷயத்துடன் நகைச்சுவையையும் கலந்து தர, பாம்பே ஜெய்ஸ்ரீ... அவர் பேசியதே பாடுவது போலல்லவா இருந்தது! – இந்த 'மேஜிக் ஷோ'வுக்குப் பக்க பலம், பக்கவாத்தியம் வாசித்த ஸ்ரீராம் குமார், (வயலின்) அருண் பிரகாஷ் (மிருதங்கம்).

ஒரு ராகத்தை ஒரு முறை கேட்டால் எப்படி ஞாபகம் வைத்துக் கொள்வதாம்...? "ஒரு மனிதரை ஒருமுறை பார்த்தால் நினைவு வைத்துக் கொள்ள முடிகிறதா...? அது சந்தர்ப்ப சூழ்நிலையையும் நமது மனோநிலையையும் பொறுத்திருக்கிறது இல்லையா...? ஆனால் பலமுறை பார்த்துப் பழகிய முகமானால் ஞாபகத்திலிருந்து விலகுவதில்லை. அதே மாதிரிதான் கேட்டுப் பழகப் பழக ராகமும் அடையாளம் கண்டுபிடிப்பது சுலபமாகும்..."

அடிப்படைகளை விளக்குவதோடு நில்லாமல் இப்படி பல விதங்களில் நம் பிக்கையூட்டி மேடை ரகசியங்களை பகிர்ந்து கொண்டு 'அபயமளித்தது'தான் நிகழ்ச்சியின் சிறப்பு.


கர்நாடக சங்கீதம் நம்மைப் போன்ற சராசரி மக்களால் உருவாக்கப்பட்டு, வளர்க் கப்பட்ட கலை. அதை மேடையில் பாடு வோரும் எல்லோரையும்போல் சராசரி வாழ்க்கை நடத்துவோர்தான், என்பதை வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் உணர்த் தினார்கள் குழுவினர்.



• டிஎம். கிருஷ்ணா



• பாம்பே ஜெய்ஸ்ரீ



• விஜய் சிவா

இடையிடையே கேள்வி நேரம், டம்ப்ஷராட்ஸ், என்று போட்டிகள் வைத்து பரிசாக கிருஷ்ணா ஸ்வீட்ஸ் பொட்டலம்!

கச்சேரிஅமைப்பை விளக்கிக் கொண்டே வருகையில், ''ராக மாலிகை என்றால் பல ராகங்களாலான கதம்ப மாலை'' என்று ஜெய்ஸ்ரீ கூறிவிட்டு, உதாரணமாக 'சின்னஞ்சிறு கிளியே...' பாட ஆரம்பிக்க, மற்ற இரு வரும் சேர்ந்து கொண்டு உல கத்தின் அத்தனை குழந்தைகளையும் கொண்டாடினார்கள்!

'பெற்ற தாய்தனை மக மறந்தாலும்...' என்று பார்வையாளர்களுள் ஒருவர் கவிதை ஒப்பிக்க, அதை அடுத்த நொடியே விருத்த மாகப் பாடிக் காட்டினார் விஜய் சிவா.

மேலை இசையின் 'மைனர் ஸ்கேல்' தான் கர்நாடக சங்கீதத்தின் நடபைரவி என் பதைக் காட்ட 'mother of mine' பாட்டைப் பாடினார்கள்.

சினிமா பாடல்களில் கர்நாடக இசையின் இடம் குறித்து டிஎம். கிருஷ்ணா ஒரு மினி பிஎச்டி அளவுக்கு விஷயதானம் செய்தார்.

கச்சேரி கேட்கக் கற்றுக் கொடுத்ததால் மட்டுமே இந்த நிகழ்ச்சி பெருமையுற வில்லை; அதை கற்பனையுணர்வோடும் கலை நயத்தோடும் கற்றுக் கொடுக்கும் சுவடு தெரியாமல் நட்புணர்வோடும் செய்ததால் வெற்றி பெற்றது. சாட்சி: நிகழ்ச்சியின் இறுதியில் காதில் விழுந்த பேச்சு.

"நேரம் போனது தெரியாமல் ரசித்தேன். கோயமுத்தூர்ல கர்நாடக சங்கீதம் கேட்க ஆர்வம் உள்ளவர்கள் நிறைய பேர் இருப்பார்கள் போலிருக் கிறது. ஒரு ஆடிடோரியம் கட் டிடலாமே - நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்''–




• கொஞ்சம் விளையாட்டு...

ஆலாபனா அமைப்பாளர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தவர் ப்ரீமியர் மில்லின் சிஎம்டி ஜகதீஷ் சந்திரன்.

ஆலாபனா ஆரம்பித்து மூன்று மாதம் தான் ஆகிறதாம். பிள்ளையார் சுழி போட்ட வர் 'ஏர்செல்' முரளி. உறுப்பினர்கள் இருந் தால் போதாது; ரசிகர்கள் எண்ணிக்கையும் பெருக வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு சபா ஒரு முழு நாள் நிகழ்ச்சியை நடத்தி யிருப்பது இதுவே முதல் தடவை என்கிறார்கள்.

**- சாருகேசி**

படங்கள்: **அகிலாஸ், கோவை**

# உச்சாணிக் கொம்பில் ஒரு மூட்டை சிமெண்ட்!

• புகழேந்தி



• வெங்கட்ராமணி



தமிழகத்தில் சமீபத்திய சிமெண்ட் விலைகளின் திடீர் கிடுகிடு உயர்வு, பலரையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. மார்ச் - ஏப்ரலில் ஒரு மூட்டை நூற்றிப் பத்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த சிமெண்ட் வாரந்தோறும் பத்து ரூபாய் வீதம் விலையேறி ஜூலை மாத இறுதியில் நூற்றி எழுபது ரூபாய்க்கு எகிறி நின்றது!

ஏனிந்த விலையேற்றம்? திருச்சி மாவட்ட அடுக்குமாடிக் கட்டட ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தைச் சேர்ந்த பொறியாளர் எம்.வி. மருதாச்சலம் சொல்கிறார் :

''இரண்டு மூன்று மாதங்களாகவே இந்த விலையேற்றம் மிகக் கடுமையாகி விட்டது. இதனால் கட்டடத் தொழில் பாதித்துள்ளது. எதிர்ப்பைத் தெரிவிப்பதற்குக் கடந்த மாதம் ஒரு பத்து நாள் வேலை நிறுத்தம் கூட செய்து பார்த்தாகி விட்டது. சிமெண்ட் ஆலை நிர்வாகமும், அரசாங்கமும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. கட்டடம் கட்டும்போது இரண்டு சதுர அடிக்கு ஒரு மூட்டை சிமெண்ட் தேவைப்படும். ஆயிரம் சதுர அடி கட்டடத்திற்கு ஐந்நூறு மூட்டை செலவாகும். ஒரு மூட்டைக்கு முன்பைவிட அறுபது ரூபாய் விலை ஏறி விட்டது. இதனால் நடுத்தர வர்க்கத்தினருக்குத்தான் பெரும் அவதி! புதிதாக வீடு கட்டுபவர்களும் சரி, பழைய கட்டடத்தைப் புதுப்பிக்க முயல்பவர்களும் சரி - இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்!''

அகில இந்திய கட்டுனர் சங்கத்தின் சிமெண்ட் கமிட்டிக்கு மாநில அளவில் தலைவராகச் செயல்படும் என். வெங்கட்ரமணி, ''1986க்கு முன்னர் உற்பத்தி குறைவாகவும் சிமெண்ட் பற்றாக்குறையாகவும் இருந்த காலத்தில் அரசின் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்குள் சிமெண்ட் எல்லோருக்கும் கிடைத்தது. 'டி-கன்ட்ரோல்' வந்த பிறகு கட்டுப்பாடற்ற விலையேற்றத்துக்குப் பறந்து போய் விட்டது. ஒரு மூட்டை சிமெண்ட் கேரளாவில் ரூபாய் 140, கர்நாடகாவில் ரூபாய் 130, ஆந்திராவில் ரூபாய் 100க்கு இப்பொழுதும் கிடைத்து வருகிறது. ஆனால், தமிழகத்தில் திருச்சி பகுதிகளில் ரூபாய் 170க்கும், அதே பிராண்ட் சிமெண்ட் சென்னையில் ரூபாய் 150க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திருச்சி பகுதிகளில் தயாரிக்கப்படும் சிமெண்ட் முன்னூறு கிலோ மீட்டருக்கு

அப்பால் சென்னைக்கும் (லாரி வாடகையாக ஒரு மூட்டைக்கு சுமார் இருபது ரூபாய் கொடுத்து!) கொண்டு செல்லப்பட்டு, மேலும் இருபது ரூபாய் குறைத்து விற்பனை செய்து வருகிற விநோதம்தான் என்னவென்று தெரியவில்லை. உடனடியாக இதில் அரசாங்கம் தலையிட்டு சிமெண்ட் விலையைக் குறைத்து தமிழகம் முழுவதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்!'' என்கிறார்.

''பொது மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கட்டடத் தொழிலும் பாதித்துள்ளது. திருச்சி மாநகர் மற்றும் சுற்றுப்புறங்களில் மட்டும் சுமார் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடத் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இந்த விலையேற்றம் குறித்து பத்திரிகைகளில் செய்திகளும், கண்டனங்களும் வெளிவந்தாலும் சிமெண்ட் ஆலை நிர்வாகங்கள் விலையேற்றத்திற்கு இதுவரை எந்தவொரு காரணமும் தெரிவிக்கவில்லை. தமிழக அரசு இதை ஒரு பிரச்னையாகக் கூட எடுத்துக்கொள்ளவில்லை. உற்பத்திச் செலவு, வரி வகைகள், மின்சாரக் கட்டணம், மற்றும் எல்லா விதமான நிர்வாகச் செலவினங்களைச் சேர்த்துக் கணக்கிட்டாலும் ஒரு மூட்டை சிமெண்ட்டின் அடக்க விலை எண்பது ரூபாய்க்கு மேல் வருவதற்கு வாய்ப்பில்லை. நூறு சதவீதத்துக்கும் மேல் லாபம் பார்க்கும் இந்த விலையேற்றத்தின் முழுப் பயனும் சிமெண்ட் ஆலை அதிபர்களையே போய்ச் சேருகிறது!'' என்று குமுறுகிறார் புகழேந்தி. அனைத்திந்திய கட்டுநர் சங்கத்தின் திருச்சி மாவட்டச் செயலாளர்.





• மருதாச்சலம்

சிமெண்ட் டீலர்கள் சிலரையும் சந்தித்தோம். தங்களது பெயரோ நிறுவனத்தின் பெயரோ குறிப்பிடக்கூடாது எனச் சொல்லி விட்டார்கள்.

இந்த விலையேற்றம் குறித்துக் கருத்து தெரிவிப்பவரின் டீலர்ஷிப் உரிமத்தை ரத்து செய்து விடுவோமென ஒரு வாய்மொழி உத்தரவு சிமெண்ட் ஆலைகளின் நிர்வாகத் தரப்பிலிருந்து வந்துள்ளதால் பேசாமல் இருக்கிறார்கள் சிமெண்ட் டீலர்கள். ஜூலை மாதத்தில் 170 ரூபாய்க்கு விற்கப்படும் சிமெண்ட் ஆகஸ்டிலிருந்து 185 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டுமென்ற அதிரடி உத்தரவு ஒன்றும் தற்போது வந்துள்ளதாக கூறுகிறார்கள் அவர்கள்.

''கட்டுமான சங்கங்கள், கட்டடத் தொழிலாளர்கள், பத்திரிகைகள், அரசியல் கட்சிகள் போன்றவை சீறிப் பாய்ந்து வரும் சிமெண்ட் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. ஆனால், இது விஷயமாக தமிழக அரசு பாராமுகமாகவே இருந்து வருவது ஏனென்பதுதான் மிகப் பெரிய மர்மமாக இருக்கின்றது!''

திருச்சி பகுதியிலேயே உற்பத்தியாகும் சிமெண்ட், சென்னையை விடத் திருச்சியில் ஏன் அதிக அளவில் விற்கிறது என்று 'ராம்கோ' சிமெண்ட்ஸின் திருச்சி மேலாளரைச் சந்தித்துக் கேட்ட போது, பதிலேதும் சொல்ல மறுத்து விட்டார்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

# தன்னாட்சி பெற்றோம்



# தன்னிறைவு அடைவோம்

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, இச்சுதந்திர நன்னாளில் நாடு மேலும் வளம் பெற வாழ்த்துகிறது.

கடன் மற்றும் சேமிப்பு வசதிகள், கணினி மயமாக்குதல், மேன்மேலும் கிளைகளைத் திறப்பது மற்றும் பற்பல சேவைகளின் மூலம் TMB சுதந்திர இந்திய மக்கள் நிலைமையில் தன்னிறைவு பெற அயராது உழைத்து வருகிறது.

எங்களது வாடிக்கையாளர்களுக்கு எங்கள் மனமார்ந்த சுதந்திர தின வாழ்த்துக்கள்!

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்**

57, வி.ஈ. ரோடு, தூத்துக்குடி – 628 002

**விரைவான வளர்ச்சிப் பாதையில்**






2000 ஆகஸ்ட் 20
விக்ரம ஆவணி 4
மலர் : 59
இதழ் : 3

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



# மூக்கை நுழைக்கிறாரா முஷாரஃப்?

ஹிஸ்புல் முஜாஹிதீனின் 'போர் நிறுத்த' அறிவிப்பு அல்பாயுளில் முடிவுற்றது. அதன் வாழ்வு சரியாக இரண்டு வாரங்கள்தான்! போர் நிறுத்தம் வாபஸான கையோடு ஹிஸ்புல் தலைவர்கள் மந்திரம் போட்டதுபோல் தலைமறைவாகிவிட்டார்கள். பாதுகாப்புக் காரணங்கள் கருதி காஷ்மீரில் இந்திய ராணுவம் சராசரி மக்களைப் பிடித்துச் சோதனை போட்டுக்கொண்டிருக்கிறது!

பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதற்கு பாகிஸ்தான்தான் காரணம் என்பது இந்திய அரசின் குற்றச்சாட்டு.

ஹிஸ்புலுடன் பேச்சுவார்த்தைக்கு அமரும் சமயத்தில், ஜம்மு - காஷ்மீர் பகுதியில், வன்முறையைத் தூண்டி பாக். அரசு வேடிக்கை பார்த்தது என்றும் அந்த இரு தரப்புப் பேச்சுவார்த்தையில், மூன்றாவது நபராக பாகிஸ்தான் சம்பந்தமில்லாமல் மூக்கை நுழைத்து, காரியத்தைக் கெடுத்தது என்றும் நமது அரசுத் தரப்பில் சொல்லப்பட்டு வருகிறது.

பாகிஸ்தானில் நடப்பது ராணுவ யதேச்சாதிகார ஆட்சி என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆனால் அந்த அரசின் பூரண ஆசியுடனும் உதவியுடனும்தான்



காஷ்மீரில் கூலிப்படையினர் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது நிரூபணமான உண்மை.


இவ்வாறு இருக்கும்போது, 'ஹிஸ்புல் முஜாஹிதீனுடன் பேசுவோம்; ஆனால் பாகிஸ்தானுடன் பேச மாட்டோம்' என்று கூறுவது அர்த்தமில்லாமலிருக்கிறது. எய்தவர்களை விட்டு விட்டு, அம்பைப் பிடித்து வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தும் கதை இது!

பாகிஸ்தானில் நடக்கிற ராணுவ - யதேச்சாதிகார ஆட்சி, நமது ஜனநாயகக் கொள்கைகளுக்கு விரோதமானதுதான்; ஆனால் அங்கு வேரூன்றிவிட்ட ஆட்சிமுறையாக அது இன்று அமைந்துள்ளது. இச் சூழ்நிலையில், 'கொள்கையளவில் முரண்படுவோருடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம்' என்கிற நிலையை நாம் மேற்கொள்வதில் பயனில்லை. யதார்த்த அணுகுமுறையுடன் பிரச்னையை எதிர்கொள்ள வேண்டும்.

இப்போதுகூட, 'இந்தியா முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டு, ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தின்படி காஷ்மீரில் கருத்துக்கணிப்பு நடத்த முன் வருமானால், மீண்டும் அமைதிப் பாதைக்குத் திரும்ப நாங்கள் தயார்' என்கிறது முஜாஹிதீன் அமைப்பு.

இதை எடை போட்டுப் பார்த்து முடிவெடுக்கும் பக்குவம் மட்டும் மத்திய அரசுக்கு இருக்குமானால் காஷ்மீர்ப் பிரச்னைக்கு விரைவான தீர்வு பிறக்கும்.

கருத்துக் கணிப்பு என்று நடக்குமானால் காஷ்மீருக்கு மாநில சுயாட்சி அல்லது கிட்டத்தட்ட சுதந்தர அந்தஸ்து வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம் என்பதே




அரசின் அச்சமாக இருந்து வருகிறது.

இந்த பயம் அவசியமற்றது. இந்தியாவின் இறையாண்மைக்கு பங்கமில்லாத வகையில் இதைச் செய்வது அசாத்தியமல்ல. அதேசமயம், இந்திய ஜனநாயக அரசு காஷ்மீருக்கு வழங்கக்கூடிய கூடுதல் அதிகாரங்களைப் போல் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர்ப் பகுதிக்குக் கிடைப்பது சாத்தியமேயில்லை. ராணுவ யதேச்சாதிகார முஷாரஃப் அரசு, பாக். ஆக்கிரமித்துள்ள காஷ்மீர்ப் பகுதிக்கு மட்டும் ஜனநாயக உரிமைகளை அளித்து விடப் போவதில்லை. இதன் மூலமே பாகிஸ்தான் அரசின் சுயரூபம் பட்டவர்த்தனமாக வெளிப்படும். இத்தகைய சூழலில், தீவிரவாதத்தில் ஈடுபடும் கூலிப்படை அமைப்புகளின் நோக்கும் போக்கும் திசை மாறும்.

இவ்வளவையும் உத்தேசித்து, ஹிஸ்புல் முஜாஹிதீனின் நிபந்தனைகளை ஏற்க அரசியல் ராஜதந்திர அடிப்படையில் மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கலாம்.

இவ்வாறு முடிவெடுத்திருந்தால் எதிர்க்கட்சியினர் குடி முழுகி விட்டாற்போல் கூச்சலிட்டு ரகளை செய்திருப்பார்கள். ஆட்சியில் நடக்கும் எதையும் எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே எதிர்த்திருப்பார்கள். எனவே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் உள்துறை அமைச்சர் தனித்தனியே சந்தித்து செயல்திட்டத்தை விவரமாக விளக்கி அவர்களது நம்பிக்கையைப் பெற்ற பின் செயல்பட்டிருக் கலாம்.

காஷ்மீரில் அமைதி திரும்பவும் மக்கள் நல்வாழ்வு பெறவும் கிடைத்த ஓர் அருமையான வாய்ப்பு கை நழுவ விடப்பட்டுள்ளது.

**கானா காஸட், கர்நாடிக் மியூசிக் காஸட், பாப் காஸட் எல்லாம் விற்பனையில் சக்கைப்போடு போடுகின்றன. வீரப்பன் காஸட்டுகளுக்கும் அந்த அதிர்ஷ்டம் இருக்கிறது போலத் தெரிகிறது. வீரப்பனுக்கு காஸட் மூலம் ராயல்டி தொகை கோடிக்கணக்கில் வர வாய்ப்பு இருக்கிறது. மாதத்துக்கு ஓர் ஆளைப் பிடித்துக் காட்டுக்குள் வைத்துக் கொண்டால்தான் வெளியிடுகிற காஸட்களில் சுவாரசியம் இருக்கும். இது விஷயமாக 'நக்கீரன்' கோபால் வீரப்பனுடன் பேசுவதைக் கற்பனையில் எண்ணிப் பார்த்தோம்.**

**கோபால்** : இனிமே துப்பாக்கியைத் தூக்கிப் போட்டுட்டு நீங்க குறைஞ்சபட்சம் அறுபது நிமிடமாவது காஸட்டுல பேசணும். இப்போ மாதிரி அஞ்சு நிமிஷம், ஆறு நிமிஷம்லாம் பேசினாப் போதாது.

**வீரப்பன்** : அறுபது நிமிஷத்துக்கெல்லாம் நான் என்னத்தையா பேசுவேன்? அஞ்சு, ஆறு நிமிஷம்தான் பேச முடியும்.

**கோபால்** : பாக்கி நிமிஷத்துக்கு ஏதானும் பாட்டுப் பாடுங்க. தெம்மாங்கு, காவடிச் சிந்து.

**வீரப்பன்** : அட, நான் பாடினா எவன்யா கேப்பான்?

**கோபால்** : அதான் தப்பு. நீங்க என்ன காஸட் அனுப்பினாலும் அதைக் கேக்கறதுல இப்ப மக்கள் ஆர்வமா இருக்காங்க.

**வீரப்பன்** : நான் பாடினா சகிக்காதேய்யா!

**கோபால்** : கவலைபடாதீங்க. இந்த வருஷம் மியூசிக் அகடமில எனக்குத்தான் சங்கீத கலாநிதி பட்டம் தரணும்னா பாடப் போறீங்க? அட, அப்படிக் கூடக் கேக்கலாம் போல இருக்கே? ஒண்ணு பண்ணுங்க...

**வீரப்பன்** : சொல்லுங்க, பண்ணிரலாம்.

**கோபால்** : யாராவது ஒரு சங்கீத வித்வானைப் பிடிச்சுட்டு வந்துருங்க. அவரை ரிலீஸ் பண்ணணும்னா சங்கீத கலாநிதி விருது உங்களுக்குக் கொடுக்கணும்னு கண்டிஷன் போட்ருங்க.

**வீரப்பன்** : அட போய்யா, எனக்கு அந்த விருது கொடுத்து நான் என்ன கச்சேரியா பண்ணப் போறேன்? அதுவும் இல்லாம, அந்தப் பாட்டுக்காரர் காட்டுலயே இருக்கறது நல்லதுதான்னு அவங்க கண்டுக்காம உட்டுட்டாங்கன்னா?

**கோபால்** : அப்ப வேற ஒண்ணு பண்ணுங்க. மியூசிக் அகடமி தலைவரைத் தள்ளிட்டு வந்திருங்க. அப்றம் சங்கீத கலாநிதி பட்டம் உங்களுக்குத்தான். உங்க பாட்டு காஸட் எல்லாம் ஓகோன்னு விக்கும். 'சங்கீத கலாநிதி' வீரப்பன் பாடிய பாடல்கள்னு ஆல் இந்தியா ரேடியோலகூட அப்பப்ப வைப்பான். சந்தனக் கடத்தல் வீரப்பன்கிற பேரே மறைஞ்சிடும்.

**வீரப்பன்** : அட, போய்யா! எல்லாத்தையும் உட்டுட்டு இதுக்கா ஓர் ஆளைப்பிடிச்சுட்டு வர முடியும்?

**கோபால்** : பின்னே எப்படி உங்க பாட்டு காஸட் விக்கும்? இல்லே, கானா பாட்டு பாடுங்க அம்பது நிமிஷம். மீதி பத்து நிமிஷம் பேசுங்க. கேசட் விக்கணும்ல?

**வீரப்பன்** : நான்தான் கலைஞர் கிட்ட காஸட் அனுப்பிச்சு, கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணாட்ட கொடுக்கச் சொல்லிடறேனே? அவங்களாண்டயே இதைப் பத்தாயிரம் காபி எடுத்து, ரெண்டை நீங்க வெச்சுக்கிட்டு மீதியை வித்து எனக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்புங்கன்னு சொல்லிடறேன். மறுத்தாங்கன்னா அப்பப்ப ராஜ்குமார், ரஜினின்னு யாரையாச்சும் புடிச்சுக்கிட்டு வந்து காட்டுல வச்சுக்கிடறேன்.



**கோபால்** : அதுவும் நல்ல ஐடியாதான். ஆனா காஸட் எல்லாத்துக்கும் ரூவா மொத்தமா முன்னாடியே கொடுத்துடச் சொல்லுங்க.

**வீரப்பன்** : நீங்க அப்ப ஒரு உதவி பண்ணணும். இந்தப் பாட்டுக்காரங்க இருக்காங்க இல்லியா? அவங்களை ஆளுக்கு ஒரு காஸட்டுல என்னத்தையானும் பாடித் தரச் சொல்லுங்க. கடைசில கொஞ்சம் பேசிடறேன்.

**கோபால்** : நல்ல ஐடி

# விற்பனைக்கு வருது வீரப்பன் காஸெட்!



யாங்க. அதோட இன்னொரு ஐடியாவும் இருக்குது. காஸெட்டுல ஏதாவது ஒண்ணுல ஒரு நட்சத்திரக் குறி போடறது. யாருக்கு அது கிடைக்குதோ அவங்க காட்டுல உங்ககூட ஒரு வாரம் தங்கிட்டுப் போகலாம்னு விளம்பரம் பண்ணிடுவோம்.

**வீரப்பன் :** அது வம்பு தம்பி, வேணாம். எவனாவது போலீஸ்காரன் கையில அது போச்சுன்னா அவன் நேரா இங்க வந்துருவான். அடுத்த தபா யாரையாவனும் பிடிச்சிட்டு வரதா இருந்தா அத்வானி, வாஜ்பாய் மாதிரி ஆளுங்களைக் கொண்டுட்டு வரலாம்னு இருக்கேன்.

**கோபால் :** செய்யுங்க. ஆனா லாலு பிரசாத் யாதவ்னு ஒரு ஆள் இருக்காரு. அவர மட்டும் கொண்டாராதீங்க. அவர் இங்க வந்து உங்ககிட்ட இருக்கறதை எல்லாம் புடுங்கிக்கிட்டு, இந்தக் காட்டையே வெலை பேசி வித்துட்டுப் போயிடுவாரு. ஆனா வாஜ்பாய், அத்வானின்னு சொன்னீங்களே, அப்ப நல்ல கண்டிஷன் எல்லாம் போடலாம். ரிசர்வ் பாங்குல இருக்கிற நோட்டெல்லாம் உங்ககிட்ட கொண்டாந்து குடுத்துடணும். நீங்க நாட்டுல எங்க போகணும்னாலும் ஒரு தனி ப்ளேன் தந்துடணும். மவுண்ட் ரோடுல உங்களுக்குச் சிலை வைக்கணும் - 150 அடி உசரத்துலனு கண்டிஷன் போடலாம்.

**வீரப்பன் :** அதென்ன 150 அடி உசரம்?

**கோபால் :** நீங்க 150 யானையைக் கொன்னுருப்பீங்க இல்லே? 150 ஆளுங்களைக் கொன்னுருப்பீங்க இல்லே?

**வீரப்பன் :** பாத்தியா, பாத்தியா, அடி மடிலேயே கையப் போடுறியே? சிலை இருக்கட்டும். இனியாச்சும் சுதந்தரமா வெளியே நடமாடணும்ங்க.

**கோபால் :** ஒரு நல்ல சான்ஸ் வந்தது. உட்டுட்டீங்களே? பிரசிடெண்ட் கிளின்டன் ஐதராபாத் வந்திருந்தாரே? கிட்நாப் செய்யாம அசால்ட்டா உட்டுட்டீங்களே? நாயுடுவுக்கு காஸெட் அனுப்பிச்சு வேடிக்கை காமிச்சிருக்கலாம்ல?

**வீரப்பன் :** அதெல்லாம் பிரச்னை ஆயிடும். அமெரிக்காக்காரன்கிட்ட எதுக்கு வம்பு?

**கோபால் :** அடடா, வீரப்பனா இப்படிப் பேசறது? சரி விடுங்க. காஸெட் பத்திப் பேசுங்க. வீரப்பன் காஸெட்னா பிச்சுக்கிட்டுப் போகும். மாசத்துக்கு ஒரு ஆளைப் பிடிச்சுட்டு வாங்க. அப்பத்தான் வெரைட்டி இருக்கும்.

**வீரப்பன் :** நீங்களும் மாசா மாசம் இங்க வந்து போகும்படி இருக்கும்.

**கோபால் :** ஐயோ, நான் பத்திரிகை பார்ப்பேனா, உங்ககிட்ட வந்து பேசிட்டிருப்பேனா?

**வீரப்பன் :** உங்க பத்திரிகை ஆபீசை இந்தக் காட்டுக்குப் பக்கத்துல கொண்டாந்துடுங்க. அடிக்கடி சந்திச்சுக்கிடலாம்.

**கோபால் :** ஐயோ, ஆளை வுடுங்க!

*(கோபால் தலைதெறிக்க ஓடுகிறார். வீரப்பன், வில்லன் வீரப்பா சிரிப்புச் சிரிக்கிறார்.)*

— **சாருகேசி**

# VIKASH INDUSTRIES

**INDUSTRIAL AREA, GOTAN - 342902**
**DISTT: NAGAUR - RAJASTHAN**
**PHONE: 01591 - 64670-64710-30310**
**FAX: 01591 - 30110**

Manufacturer & Supplier of

***QUICK LIME***
***HUDRATED LIME***
***LIME KALI***
***NEERU POWDER***
***LIME STONE & ALLIED PRODUCTS***



Hari Sarvothama | Vayu Jeevothama

**ஸ்ரீ சரஸ்வதி டூர்ஸ் & டிராவல்ஸ்**
**2, அகஸ்தியர் தெரு, கிழக்கு தாம்பரம்,**
**சென்னை 600 059 ✆ 2369890 2415417**

**வட இந்திய புனித யாத்திரை**
**செப்டம்பர்/அக்டோபர் 2000 மற்றும் தீபாவளி கங்காஸ்நானம்**

**05.09.2000** இது 21 நாட்கள் கொண்டது. *மதுரா, பிருந்தாவன், ஆக்ரா, புதுடெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், அலகாபாத், காசி, கயா, பூரி, கோணாரக், புவனேஸ்வர், சென்னை* நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் - **6500/-**
**20.10.2000** இது 12 நாட்கள் கொண்டது. *பூரி, கோணார்க், புவனேஸ்வர், கயா, புத்தகயா, காசி, அயோத்தியா, நைமி சாரண்யம், அலகாபாத், சென்னை*
நபர் ஒருவருக்கு கட்டணம் ரூபாய் - **4700/-**

மேலே குறிப்பிட்ட யாத்திரைக்கு டிபன், காபி, இரண்டு வேளை உணவு தங்கும் ஹால் வாடகை - பத்ரி - கேதார். பஸ் கட்டணம் யாவும் கம்பெனியைச் சார்ந்தது. ரயிலில் 60 நாட்களுக்கு முன்பு பதிவு செய்ய வேண்டி இருப்பதால் ரூ 2000/- செலுத்தி முன்கூட்டியே டிக்கெட்டுகள் பதிவு செய்து கொள்ளவும்.

கல்லூரி மாணவர்களுக்காக ஊட்டி, கொடைக்கானல், சிம்லா, குளு, மணாலி, ரோடாங் பாஸ் போன்ற சுற்றுலா யாத்திரைகளையும் நடத்தி வருகிறோம்.

மேலும் விவரங்களுக்கு

1. R. Prasad/R. Prabhakar 2, Agasthiar St, East Tambaram Chennai - 59, Ph: 2369890/2415417
2. P. Umashankari H-82, H.I.G. Block, Ellis Nagar, Madurai - 10, Ph: 601501
3. S. Rajarao 137, Saraswathi Nagar, Vijaya Nagar, Bangalore - 40, Ph: 080 - 3401827

✉ கல்யாணபுரம் ஆராவமுதன் எழுதும் ஸ்ரீ ராம பக்த ஹனுமான் தொடர் ஆரம்பமே விறுவிறுப்பாக, சுவாரஸ்யமாக இருந்தது. ராமனுக்கு மட்டுமல்ல ஹனுமானுக்கும் கூட அவதார புருஷன் என்கிற அடைமொழி பொருந்தும் என்கிற ஆசிரியரின் கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதுதான்.
மொரட்டுப்பாளையம்,
க. நா. இராஜேஸ்வரன்.

✉ கல்கி தலையங்கம் படித்தேன். தவறு செய்தால், பொதுமக்களை பாரபட்சமின்றி கண்டிக்கிற சட்டம், அரசியல்வாதிகளையும், பயமின்றி தண்டிக்க முன்வராதவரை, பால்தாக்கரேக்களுக்கும், ராம்ஜெத்மலானிகளுக்கும் எந்த நாளுமே கொண்டாட்டகாலந்தான் என்பதில் ஐயமில்லை!
கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி.

✉ அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி முதல் பரிசு பெற்ற 'விலை' அற்புதமான கதை. சாமான்ய மனிதன் வாழ்வில் சந்திக்கும் பிரச்னைகளை கதை ஆசிரியர் தெளிவாகக் கூறியிருக்கிறார். இப் பிரச்னைகள் இல்லா வாழ்க்கை எங்கேயிருக்கிறது? மனம் தேடுகிறது.
கூட்டனாச்சம்பட்டி,
எஸ்.பி. சண்முகம்.

✉ "டாட்காம் ஸ்பெஷல் நகைச்சுவை, திரையுலகச் செய்திகள் கலந்து இருந்தமையால் இனிப்பு தடவிய மருந்து போல் ஏற்றுக் கொள்ள முடிந்தது!"
மதுரை -10, வி. சிவா.

✉ அ முதல் ஃ வரை இன்டர்நெட் குறித்து சுவையான செய்தி களைச் சுருக்கமாகத் தந்த கல்கிக்கு நன்றி!
கல்பாக்கம், சி. இரவிச்செல்வன்.

✉ வரலாற்றின் ஏடுகளில் கறை படிந்த கீழ்வெண்மணி சம்பவத்தை மீண்டும் ஒருமுறை புரட்டிப் பார்க்க செய்துவிட்டது "மனசுக்குள் மண்வாசம்."
விசலூர்-1, ஜி.ஜி. கிருஷ்ணன்.

✉ அட்டைப் பட அனுமன் ஓவியம் மிக அருமை. படத்தின் மீது எழுத்து வருவதைத் தவிர்த்திருக்கலாம்.
நெய்வேலி, ஜே. ராஜகோபாலன்.




# இனிப்பு தடவிய மருந்து!

✉ தடய அறிவியல் நிபுணர் டாக்டர் பி. சந்திரசேகரின் 'கிரிமினல்கள் ஜாக்கிரதை' தொடர் எடுத்த எடுப்பிலேயே களை கட்டியதோடு கல்கி வாசகர்களுக்கு 'வடகம்' சேர்த்துத் தயாரிக்கப்பட்ட உணவை பரிமாறியது போன்ற பிரமிப்பை ஊட்டியது. மகிழ்ச்சி!
சென்னை - 23,
கி. ராமதாஸ்.




# ரம்பா போனார் லைலா வந்தார்!

அமர்க்களம் படத்துக்கு முன்பே, இயக்குனர் சரண் ரெடி பண்ணி வைத்திருந்த கதை. சில பிற்சேர்க்கைகளுடன் 'பார்த்தேன் ரசித்தேன்' ஆகியிருக்கிறது. அடிதடி கலாட்டா, அதிரடி காதல் எதுவும் இல்லை. 'இது ஒரு மென்மையான காதல் கதை என்கிறார் சரண்.

● படத்தைத் தயாரித்திருக்கும் செரின் மூவீஸ் (நின்று போன சாவி பத்திரிகையைச் சிறிது காலம் நடத்திய திருவேங்கடம்தான் தயாரிப்பாளர்) ஒரு படம் டைரக்ட் செய்து தரவேண்டும் என்று சரணிடம் கேட்ட போதே, 'பிரசாந்தின் கால்ஷீட் வாங்கி வைத்திருக்கிறோம்' என்று கூறியதால், பிரசாந்த் ஹீரோ ஆகிவிட்டார். மற்றபடி எந்த ஹீரோவுக்கும் பொருந்துகிறமாதிரியான காதல் சப்ஜெக்ட்தான். பிரசாந்த் ஹீரோ என முடிவானபின், அவருக்கென்று ஆக்ஷன் சீன்கள் சில சேர்க்கப்பட்டன வாம்.

● படபடா என்று பொரிந்து தள்ளும் துறுதுறு கேரக்டர் சிம்ரனுக்கு. கதையின்





முடிச்சை இரண்டு நிமிடங்களில் நாலு வரியில் சிம்ரனுக்குச் சொன்னதும், மறு பேச்சின்றி ஒப்புக் கொண்டு விட்டார். "எத்தனை நாள் கால்ஷீட் வேண்டுமானாலும் தரத் தயார்' என்று சிம்ரன் சொன்னாலும், பதினெட்டே நாள் கால்ஷீட் போதும் என்று சொல்லி விட்டாராம் சரண். 'சிம்ரனின் நடிப்புக்குத் தேசிய விருது கொடுக்கலாம். அந்த அளவுக்கு நடித்திருக்கிறார்' என்கிறார் சரண்.

● படத்தின் இன்னொரு ஹீரோயின் லைலா. முதலில் இந்த கேரக்டருக்கு அதிகம் பரிச்சயமில்லாத புதியவர் ஒருவரைப் போடலாம் என்ற எண்ணத்தில் தேடல் தொடங்கியது. சினிமா பத்திரிகையொன்றில் வெளிவந்த சம்யுக்தா வர்மா என்ற மும்பை மாடல் அழகியைப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் அவர்



• அண்ணாசாலையில் வைக்கப்பட்டிருக்கும் விளம்பரம்



திடீரென்று மம்முட்டி, மோகன்லால் ரேஞ்சில் ஒப்பந்தமாகி, பிசி. அடுத்து பிரபலமான வராக இருந்தாலும் பரவாயில்லை என்று ரம்பாவை அணுக, அவர் இந்தக் கேரக்டரில் நடிக்க அதிக ஆர்வம் காட்ட வில்லையாம். கடைசியில் லைலாவை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

● படத்தின் பிரதான அம்சங்களில் ஒன்று மாநகர பேருந்து. சரணின் போன படத்தில் தியேட்டர் பின்னணி. அதற்கு முந்தைய படத்தில் மேன்ஷன். இந்த வரிசையில் இந்தப் படத்தில் மாநகர பஸ்! வழக்கமான பஸ் போல இல்லாமல் ஷூட்டிங்கிற்கென்று சில பிரத்யேக மாற்றங்கள். லைட்டிங் சௌகரியத்துக்காக. ஆனாலும் படம் பார்க்கிறபோது வழக்கமான தோற்றம்தான் இருக்கும். பக்கவாட்டில் கொக்கி மாட்டி, தொங்கியபடி படம்பிடித்தது த்ரில்லிங் அனுபவமாம்.

● பிரசாந்த் படத்தில் சொந்தக் குரலில் ஒரு பாட்டு பாடியிருக்கிறார்!

● கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதல் தடவையாக 'பார்த்தேன் ரசித்தேன்' படப்பிடிப்பு நடந்திருக்கிறது.

● பாட்டுக்கு வெளிநாடு போவது இன்று காலத்தின் கட்டாயமாகி விட்டது. இவர்கள் மலேசியா பக்கம் போய் 99 தீவுகள் கொண்ட தீவுக் கூட்டம் ஒன்றில் ஷூட்டிங் நடத்தியிருக்கிறார்கள். பச்சை, நீல, வெள்ளை நிறக் கடல் அங்கே ஸ்பெஷாலிடி.

● மைசூர் போகத் திட்டமிட்டபோது ஒரே மழை. சரியென்று ஊட்டிக்குப் போனால் அங்கும் மழை துரத்தியிருக்கிறது! ஆனால் தண்ணீர் மட்டம் குறைந்து போன எமரால்டு அணை இவர்கள் கண்ணில்பட, அங்கே படம்பிடித்து விட்டனர். நீர்மட்டம் குறைந்ததன் பயனாக நீருக்குள் மூழ்கியிருந்த பழைய கால சமாசாரங்கள் (கிணறு, சுவர்கள்) வெளியில் தெரிய, அங்கே ஷூட்டிங்!

● இன்று மாணவர்களிடையே பிரபலமாக உள்ள, பொதுமக்களிடையே எரிச்சல் ஏற்படுத்தும் 'பஸ் தின' கொண்டாட்டம் ஒரு பாடல் காட்சியில் இடம் பெற்றுள்ளது.

● காட்சியும், பொது மக்கள் ரியாக்ஷனும் யதார்த்தமாக இருக்க வேண்டும் என்று திடீரென்று பிரசாந்த் காரில் வந்து இறங்கி, பஸ் ஸ்டாப்பில் (ஏற்கெனவே) நிற்கும் வில்லன்களுடன் சண்டையில் இறங்க, பார்த்துக் கொண்டிருந்தவர்கள் முகத்தில், 'இதென்ன கலாட்டா! பிரசாந்த் ஏன் இப்படி நடுத்தெருவில் சண்டை போடுகிறார்?' குழப்பம். அந்த சமயத்தில் சண்டையையும் மக்கள் ரியாக்ஷனையும் சற்றே தள்ளி நின்றிருந்த வேனுக்குள்ளிருந்து ஷூட் பண்ணினார்கள்.

● பிரபல இந்தி பாப் பாடகர் சோனு நிகாம், 'வராக நதி' புகழ் சங்கர் மகாதேவன் இரண்டு பேருடைய பாடல்களும் நிச்சயம் ஹிட்டாகும் என்கிறார் சரண். சில வருடங்களுக்குமுன் வைரமுத்து கூறிய 'தின்னாதே என்னைத் தின்னாதே' என்ற வரி, சரண் மனத்தில் ஆழப்பதிந்துவிட, அதையே ஆரம்பமாய், வைரமுத்துவை வைத்து ஒரு பாடலை எழுதி வாங்கிவிட்டார் டைரக்டர்.

● மொத்தத்தில் முழு குடும்பத்துக்கான டோட்டல் பொழுதுபோக்குப் படம் என்கிறார் டைரக்டர்.

— **கௌதம்**

அட்டையில்: **லைலா**

---

**"தலைவருக்கு இவ்வளவு பயம் கூடாது!"**

**"என்ன சங்கதி?"**

**"காட்டை ஒட்டி இருக்கற அவரோட பண்ணை வீட்டு வாசல்ல 'சந்தன வீரப்பன் வாழ்க' என்று எழுதிப் போட்ருக்கார்!"**

**— அம்பை தேவா**





ஓம்

## LUCKY GANESHA
## அதிர்ஷ்ட பிள்ளையார்

கடம் வித்துவான் டி.எச். 'விக்கு' விநாயகம் கூறுகிறார் "என் மகன் உமா சங்கர் 'லக்கி பிள்ளையார்' ஒன்று கொடுத்தார். இந்த 'லக்கி பிள்ளையார்' வந்ததில் இருந்து எனக்கு ஒரு மாற்றம் கிடைத்தது சௌகரியங்களும் கிடைத்தது. மேலும் திரு. சந்தோஷ் சிவராமிடம் இருந்து ஒரு 'லக்கி பிள்ளையார்' வாங்கி செல்கிறேன். விசேஷமாக இந்த லக்கி பிள்ளையார்' காஞ்சி மடத்திலுள்ள மகா - மகா பெரியவாளின் பரிபூரண ஆசிப் பெற்றது.

" Lucky Ganesha has done and given a big change after I and my wife purchased the idol from Mr. Sivaram. I have also passed the word around to my friends since I would like the same change for good happening to them. - Desmond Rao, Ph: 6289028

The Ganesha that Santosh is best known for is the "Lucky Ganesha". Customers who stroll into his shop in a steady stream. Buy it and walk away with a smile on their faces and a prayer in their hearts. - Mukta Hegde - DECCAN HERALD, Bangalore.

The specially crafted "Lucky Ganesha" has become the mascot of many people around the world, the original one having been blessed by the Paramacharya of the Kanchi Mutt. Believed to bring luck on whoever possesses it. Shivaram is innundated - both in person and 'on line' - with order for this adorable sculpted piece. Pushpa Chari - THE HINDU dated 19th June 2000.

DESIGNED BY Santosh Sivaram

**SANTACLAUS - 88**

No: 10 1ST Floor, ALSA MALL, (Opp: ATLANTIC HOTEL)
149, Montieth Road, Egmore,Chennai - 600 008, Tamilnadu, India
✆ : 91-44-8554247 Fax: 91-44-8554930
Email: luckyganesha@hotmail.com: Web
http://epages. webindia.com/india/luckyganesha

** Our prices for LUCKY GANESHA
small (1.5") - Rs.30/- Medium (2") - Rs.60/-, Big (3") - Rs. 90/-
Courier Charges = 15/- for South India = 25/- for North India
** For your requirements you could send the Money Order or Draft favour "SANTACLAUS - 88"
** For exclusive franchise in your locality, Contact us for mote details.



## கோலம் முதல்

தங்கள்
அன்பு மகள் திருமணத்திற்கு
சுவையான உயர்தர
சாப்பாடு டிபன்
வேளாவேளைக்கு காபி,
வைதீக ஏற்பாடுகள், பூ மாலை,
நாதஸ்வரம், பச்சபுடி சாமான்கள்,
சீர் பக்ஷணங்கள்,
தாம்பூல வகையறா,
நிச்சயதார்த்தம்
பழ தட்டுகள்,

## கட்டு சாதம் வரை

சபைக்கு தேவையான அனைத்தும்
காண்டிராக்ட் முறையில் செய்து தர அணுகவும்

**S.R. RAGAVAN**
**SRI SAI MARRIAGE SERVICES**
No.28, (Old No.35), TAYLORS ESTATE, II ST,
KODAMBAKKAM, CHENNAI 600 024.
Ph: 4840914, Mobile: 98400 40914

email: ragavan@rocketmail.Com

*We undertake Catering for smaller function also*



# REIKI

*Yoga of Healing*
*for Ladies*
*Taught by Ladies*
*Learn* **REIKI**

*Get total Health Happiness and success*

Get the benefits of Health wealth and Happiness
Develop your personal level, famility level, professional level
Heal all problems of physical mental and emotional

*Also learn : Yoga, Kundalini yoga, Single point Meditation, chakras meditation, chrystal meditation & reiki meditation in English, Tamil, Telugu & Hindi.*

Contact : T.S. SWAMINATHAN,
5, Vallalar St., Indian Bank Colony, Padmanaba Nagar Main Road,
Choolaimedu, Chennai - 600 094. Phone : 3722207

# ஸ்ரீராம பக்த ஹனுமான்

3

ராமனிடத்தில் பக்தி கொண்டவர்கள் எத்தனையோ பேர்கள் உள்ளனர். அதேபோல் ராமாயண கதாபாத்திரங்களும் பலபேர் இருக்கிறார்கள். ஆனாலும் ஹனுமான் இவர்கள் அனைவரிலும் சிறந்து முதல் இடத்தை வகிக்கிறார் என்றால் அது ஏன்...? ராமபக்தியின் ஓர் உருவமாகவே திகழ்பவர் ஹனுமான். எங்கெல்லாம் ராமநாமம் ஒலிக்கின்றதோ அங்கெல்லாம் கண்ணீர் மல்க, மெய்சிலிர்த்து, கைகுவித்து நிற்கும் பக்தன். அதனால்தான் ராமாயண பாராயணம் செய்கையில் பாராயணம் செய்பவர் முன் ஒரு மணையைப் போட்டு வைப்பது வழக்கம். ஏனெனில் நம் கண்ணுக்குப் புலப்படாமல் சூக்ஷ்ம ரூபத்துடன் அங்கு ஹனுமான் அமர்ந்து ராம கதையைச் செவியாரப் பருகுவதாக நம்பிக்கை.

ஒரு தூதனாக, ஒரு வீரனாக, ஒரு மந்திரியாக, இப்படிப் பல கோணங்களில் பேசப்படும் ஹனுமாரை, தனது 'சங்கல்ப சூர்யோதயம்' என்ற நாடகத்தில் ஸ்ரீ வேதாந்த தேசிகன் ஒரு பரமாசார்யனாகவே உருவகப்படுத்துகிறார்.

'ஹனுமத் ஸமேன குருணா
ப்ரக்யாபிதார்த: புமான்'
என்பது ஸ்ரீதேசிகனின் வார்த்தை. அதில் அவர் காட்டும் ஒரு நயமான கருத்தைப் பாருங்கள்:

"இந்த ஸம்ஸாரம் என்பதுதான் சமுத்திரம். அதில் சரீரம் என்பது இலங்கை. சரீரத்தின் இதயப் பகுதி அசோக வனத்தில் உள்ள சிம்சுபா விருக்ஷம். இதயத்துள்ளே இருக்கும் ஆத்மாதான் அந்த மரத்தடியில் உள்ள சீதை. பத்து இந்திரியங்கள் பத்து தலை ராவணன். அந்த இந்திரியங்களை அழித்து ஜீவனை

• • •

**ஹனுமானின் ராமபக்தி எல்லையற்றது. உவமைக்கு அப்பாற்பட்டது. அப்பழுக்கற்றது. பயனைக் கருதாது உளமாற ராமனிடம் பக்தி கொண்ட உத்தமன் ஹனுமான் என்பதே அவரிடம் உள்ள மிகப் பெரிய சிறப்பு.**

• • •

பரமாத்மாவான ராமனிடம் சேர்க்கும் ஆசார்யன் ஹனுமான் என ஒரு பரந்யாஸத்தை நம் கண்முன் காட்டியருளுகிறார் சுவாமி தேசிகன்.

இந்த ஞான மார்க்க விளக்கம் இருக்கட்டும். பக்தி மார்க்கத்துக்கு வாருங்கள்...

எல்லாவற்றையும்விட ஹனுமான் சிறந்த ராமபக்தன் என்பதுதானே பெருமைக்குரிய விஷயம். ஏனெனில் ஹனுமானின் ராமபக்தி எல்லையற்றது. உவமைக்கு அப்பாற்பட்டது. அப்பழுக்கற்றது. பயனைக் கருதாது உளமாற ராமனிடம் பக்தி கொண்ட உத்தமன் ஹனுமான் என்பதே அவரிடம் உள்ள மிகப் பெரிய சிறப்பு. அதற்குச் சான்றாக ஒரு காட்சி:

பதினோறாயிரம் ஆண்டுகள்


கல்யாணபுரம் ஆராவமுதன்

ண்ணுலகில் வாழ்ந்து, இறுதியில் ன்னுடை சோதிக்கு எழுந்தருளு ான் சக்ரவர்த்தித் திருமகனான மன். சரயூ நதியில் இறங்கி வைகுந்தம் ல்லும்போது அனைவரையும் தன் டன் அழைத்துச் செல்கிறான் என்று ழகாக வர்ணிக்கப்படுகிறது.

*''அன்று சராசரங்களை வைகுந்தத் த்தி''*

என்கிறார் குலசேகராழ்வார்.

அப்படி எல்லோரும் ராம டன் செல்லத் தயாரான ாது, அதில் விருப்ப ன்றி இருந்தவர் ஹனு



மான் ஒருவரே.

ராமர், ஹனுமாரை நோக்கி, ''மாருதி! நீ வைகுந்தம் வரவில்லையா?'' என்று கேட்க, அதற்கு ஹனுமான் ''வைகுந்தத்தில் அப்படி என்ன இருக்கிறது?'' என்று எதிர்கேள்வி கேட்டாராம்!

ராமன் சொன்னார்: ''வைகுந்தத்தில் அமிர்தம் இருக்கிறது, ஆனந்தம்

இருக்கிறது. நரை, ஜரை, ஆதி, வியாதி பயம் இல்லை..."

அப்போது ஹனுமான் கேட்டார்: "ராமா! வைகுந்தத்தில் ராம நாமம் உண்டா?"

ராமநாமம் மண்ணுலகில்தான் இருக்கிறது வைகுந்தத்தில் இல்லை என ராமன் கூறியது கேட்ட ஹனுமான் "ராம நாமம் இல்லாத அந்த வைகுந்தம் எனக்கு வேண்டாம்" இங்கேயே இருந்து கொண்டு ராம நாமத்தைச் சொல்லிண்டு இருக்கிறேன்" என்றார்.

ராமரும் "சரி, ராமாயணமும் எனது பெயரும் மண்ணுலகில் உள்ளவரை நீ சிரஞ்சீவியாக வாழ்வாயாக" என ஆசி கூறிச் சென்றார். அத்தகைய அசஞ்சலமான ராமபக்தியில் திளைத்தவர் ஹனுமான்.

அதனால்தான் ஹனுமானைத் திருவடி என்றே அழைப்பது வழக்கம்.

ஏனெனில் ராமபிரானின் திருவடிகளை அனவரதம் பணிந்து, இதயத்தில் தாங்கி, ராமநாமத்தை எப்போதும் ஜபித்துக் கொண்டு இருக்கும் பக்தன்.

"திருவடி ஆஞ்சநேயன்" என்று அவனைக் கூற வேண்டுமே தவிர சிறிய திருவடி என அழைப்பது தவறு. திருவடி என்றாலே ஹனுமான்தான்.

கம்பனும் ராமபட்டாபிஷேகத்தை வர்ணிக்கையில்

"அடியிணை அனுமன் தாங்க" எனக் கூறுவதைக் கவனியுங்கள்!

அப்படி ராமபக்தியில் உயர்ந்து விசுவரூபம் கொண்டு விளங்கும் ஹனுமாருக்குத்தான் எத்தனை பெயர்கள்? ஆஞ்சநேயர், வாயுகுமாரர், வாதாத்மஜர், மாருதி, ராமதூதர் - இப்படிப் பல பெயர்கள். இவற்றை உச்சரிக்கும் போதே கரம் கூப்பி ராமனை ஸ்மரித்துக் கொண்டிருக்கும் உருவம்தானே நினைவுக்கு வருகிறது... ராமனைப் பாடிய மஹான்கள் அனைவரும் ராமபக்தனான ஹனுமானையும் சேர்த்துப் போற்றத் தவறவில்லை.

"தில்லை நகர் திருச்சித்திரகூடந்தன்னுள்
திறல் விளங்கும் மாருதியோடு
அமர்ந்தான் தன்னை"

என அருளுகிறார் குலசேகராழ்வார்.

சித்ரகூடத்து ராமனுடன் மாருதியையும் குறிப்பிட்டார்!

"முன்பொலா இராவணன் தன்
முதுமதின் இலங்கை வேபித்து
அன்பினால் அனுமன் வந்தாங்கு
அடியிணை பணிய நின்றார்க்கு"

எனப் பாடுகிறார் திருமங்கையாழ்வார்.

– அனுமன் அன்பினால் பணிந்த ராமனின் இணையடிகளை நானும் பணிகிறேன் என்கிறார்.

ஸத்குரு தியாகராஜரோ
'பாஹி ராம தூத'
'கிதார்த்தமு'
போன்ற க்ருதிகளில் ஹனுமானின் பெருமையை வாயாரப் பாடுகிறார்.

'ராமபிரானை எனது உள்ளத்தில் பெருகும் அன்பு என்ற ஞான நீரால் நீராட்டுகிறேன்' என்கிறார். 'பகவத்கீதையின் அர்த்தமும் சங்கீதத்தின் ஆனந்தமும் ஹனுமானுக்குத்தான் நன்றாகத் தெரியும்' என்கிறார்.

முத்துஸ்வாமி தீக்ஷிதரும்
'வீரஹனுமதே நமோ நமோ'
'பவனாத்மஜம்'
'பவனாத்மஜாகச்ச'
போன்ற க்ருதிகளில் ஹனுமானைப் புகழ்கிறார்.

'வீரனான ஹனுமானே! வாயுகுமாரனே! உனக்கு வணக்கம். நீ ராமபிரானின் திருவடியாகவே திகழ்கிறாய். கோரமான ராக்ஷஸர்களை அழித்தவனே, எல்லாவித கலைகளையும் அளிப்பதில் வல்லவனே, என்றெல்லாம் பலவாறு

**"முதலாளி... சாப்பிடப் போனா கடையை ஏன் பூட்டுறீங்க? நான் பார்த்துக்கறேனே..."**

**"நான் முன்ன வேலை செஞ்ச கடையில ஓனர் என்னைத்தான் பாத்துக்கச் சொல்லிவிட்டுப் போயிடுவாரு. என்னையும் அவர் மாதிரி ஏமாறச் சொல்றியா?"** — **தஞ்சை தாமு**



போற்றுகிறார் முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

**சு**வாமி தேசிகனின் ஆசார்ய தத்துவத்துக்கு மீண்டும் வருவோம். என்ன கற்றுத் தருகிறார் நமக்கு அந்த ஆசார்யர்?

இந்த்ரிய நிக்ரஹத்தைக் கற்றுத் தருகிறார். ஜீவாத்மாவான நமக்கு, பரமாத்மாவிடம் சேரும் மார்க்கத்தைக் காட்டுகிறார்.

சீதையை முதன்முதலில் அசோகவனத்தில் பார்க்கும்போது ஆஞ்சநேயர் மனத்தில் எண்ணங்கள் ஓடுகின்றன. அவள் பாதுகாப்பாய் இருப்பதைப் பார்த்து நினைத்துக் கொள்கிறான். 'தர்மமே உருவெடுத்து பிராட்டியைக் காத்ததோ அல்லது ஜனகரது நல்வினைப் பயன்தான் சீதையின் கற்பு நெறியைக் காத்ததோ?...' என்றெல்லாம் எண்ணுகிறான்.

ராமனையே நினைத்து வருந்தி, உடல் இளைத்து, கண்ணீருடனும் பெருமூச்சுடனும் இருக்கும் கற்புக்கரசியான சீதையைக் கண்ட மாத்திரத்தில் ஹனுமானின் மனம் ராமனிடம்தான் செல்கிறது! (ஜகாம மனஸா ராமம்)

கம்பன் காப்பியத்திலோ ராமனின் வீரத்தைக் காட்டிலும் சீதையின் நெஞ்சுறுதியும் அவள் பதிவ்ரதை தர்மத்தின் பலமும் மேம்பட்டு விளங்குவதாக ஹனுமான் காண்கிறான்! சீதையின் கற்பு ராமனுக்காகவா? ஜனக குலத்தின் பெருமைக்காகவா? அவளது சொந்த ஆத்மதிருப்திக்காகவா என்று அந்த இடத்திலே ஹனுமான் தனக்குள்ளேயே ஒரு பட்டிமன்றம் நடத்திப் பார்க்கிறான்.

கடைசியாக அவன் என்ன முடிவுக்கு வருகிறான் பாருங்கள்: 'சீதைக்கு தர்மத்தின் பாலிருந்த விச்வாசம், அவள் கற்புக்கு அளித்த முக்கியத்துவம் யாவுமே அவளது ஆத்ம கௌரவத்துக்காகவேதான் – அதனால்தான் ராவணனது படை புலமோ ஐச்வர்யமோ, மிரட்டலோ ஏதுவுமே அவளை வீழ்த்தவில்லை. அந்த ஆத்மகௌரவத்துக்கு முன் அவையெல்லாம் எம்மாத்திரம்!' என்று முடிவுக்கு வருகிறான்.

இந்த்ரியங்கள் பத்து தலை ராவணன் என்று சுவாமி தேசிகன் சொல்லியிருக்கிறாரல்லவா? ஆத்மசக்திக்கு முன்னால் அவை பொசுங்கிப் போய்விடும் என்பதை ஹனுமானின் இந்தப் பட்டி மன்றத் தீர்ப்பு எத்தனை அழகாகக் காட்டித் தருகிறது!

(வளரும்)

## அருள்வாக்கு

**ஒ**ரு விறகுக் கட்டு இருந்து, அதைச் சுற்றிப் போட்ட கயிற்றுக்கட்டு முடிச்சு அவிழ்க்க முடியாமல் ஆனால் என்ன செய்வார்கள் தெரியுமா? கட்டு தளர்வதற்கு முதலில் கட்டிய கயிற்றைவிட இறுக்கமாக அதை இன்னொரு கட்டுப் போட்ட மாதிரி சுற்றிச் நெருக்கிப் பிடித்துக் கொள்வார்கள். 'கட்டுப் போட்ட மாதிரி' தானே ஒழிய, முடிச்சுப் போட்டுக் கட்டியே விட மாட்டார்கள். இந்த இறுக்கத்தில் முதலில் முடிச்சுப் போட்டுக் கட்டின கட்டு லூஸாகி விடும். அதை எடுத்துப் போட்டுவிடலாம். அப்புறம், கட்டின மாதிரி,



ஆனால் கட்டியே விடாமல் சுற்றியிருக்கிற இன்னொரு கயிற்றையும் எடுத்துவிட்டால் விறகுகள் கட்டற்று விடுபட்டு விடும். இதே மாதிரி பல தினுஸான கார்யங்களால் மணி முடிச்சாகக் கட்டுப் போட்டுக் கொண்டு ஸம்ஸார பந்தத்தில் கிடக்கிற நாமும் அதிலிருந்து விடுபட, "சாஸ்த்ர கர்மா" என்று கட்டு மாதிரி உள்ளதைப் போட்டுக் கொள்ள வேண்டும். கன்னாபின்னா கட்டாக இல்லாமல் சாஸ்த்ர மூலமாக ரிஷிகள் ஒவ்வொருவருக்கும் ஸ்வதர்ம ரூபமாக அநேக கார்யங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ரிஷிகளின் மூலமாக ஈச்வரனே போட்ட ரூல்கள் இவை. நம் ஸ்வந்த ஆசையின் மேலே கன்னாபின்னா என்று காரியங்கள் பண்ணிப் பண்ணி முடிச்சாகப் போட்டுக் கொண்டிருக்கிற கட்டு தளர்வதற்கு இந்த ஸ்வதர்ம கர்மக் கட்டுதான் உதவிபுரிவது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

# "நீதிமன்றம் கொடுத்திருக்கும் விருது!"



• விழாவில்...

**த**மிழக அரசின் திரைப்பட விருது வழங்கும் விழா வள்ளுவர்கோட்டத்தில். வந்திருந்த அத்தனை பேரின் பார்வையும் ரோஜாவின் பேரில் தான். விருதை முடக்க வேண்டும் என்ற வழக்கை வென்றல்லவா வந்திருந்தார்!

முதல்வர் பேசும்போது, "இது தமிழக அரசு தரும் விருது மட்டுமல்ல; நீதிமன்றம் கொடுத்திருக்கும் விருதும்கூட! ஆகவே நீதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர் இந்த விருதைப் பெறுவதற்கு" என்று சொன்னதும் ஆயிரம் வால்ட் பிரகாசம் ரோஜா முகத்தில்.

கார்த்திக் பற்றிக் குறிப்பிட்ட முதல்வர், "கார்த்திக் நடித்த ஏராளமான படங்களைப் பார்த்திருக்கிறேன். இவ்வளவு ஆற்றல் படைத்த இந்த நடிகன் இன்னும் ஏற வேண்டிய உச்சியிலே ஏறவில்லையே என்று நான் ஏங்கியதுண்டு" என்றதும் கார்த்திக் முகத்தில் என்ன ஒரு உணர்ச்சி! (இனிமேலாவது நல்லக் கதையை செலக்ட் பண்ணுங்கண்ணே!)

"இனிமேல் முதல் பரிசுக்குரிய படத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசுக்குரிய படத்துக்கு ஒரு லட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசுக்குரிய படத்துக்கு 75 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று முத்தாய்ப்போடு முதல்வர் அறிவித்ததும் அரங்கம் கைத்தட்டலில் அதிர்ந்தது.

"**எ**ன் எதிர்காலமே கேள்விக்குறியாக, படுத்த படுக்கையாக இருந்தேன். நடிக்க அட்வான்ஸ் கொடுத்தவர்கள் என் நிலையைப் பார்த்துவிட்டு அட்வான்ஸைத் திருப்பி வாங்கிப் போனார்கள். ஆனால் டைரக்டர் கே.எஸ். ரவிக்குமார் மட்டும்தான் 'நீங்கள் குணமடைந்த பின் வாருங்கள்; நீங்கள்தான் என் படத்தின் நாயகன்' என்றார். அவர் மட்டுமில்லை என்றால் இன்று நான் உங்கள் முன் நின்று பேசியிருக்க முடியாது' இப்படி உருக்கமாகப் பேசி ஒரு சோக சூழ்நிலையை உருவாக்கியவர் சரத்குமார்!

**சி**றந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருது பெற்ற மாஸ்டர் மகேந்திரன், முதல்வரிடமிருந்து விருதை பெறும் போது 'பச்சக்' என்று முதல்வருக்கு முத்தம் கொடுக்க முதல்வர் சிரித்துக்கொண்டார். செக்யூர்ட்டிகள்தான் 'திடுக்'கென அதிர்ந்தனர்!

**மா**நில அரசின் சார்பில், குறைந்த பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட தரமான படங்கள் பதினைந்துக்குத் தலா ஐந்து லட்சம் மானியம் தரப்பட்டது. இதற்கு விண்ணப்பித்த படங்கள் இருபத்து மூன்று. விடுபட்ட எட்டு படங்களுக்கும் மானியம் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார் விஜயகாந்த். ஆனால், நீதிபதி குழுவினர் தேர்ந்தெடுத்த படங்களுக்கு மட்டுமே மானியம். அவர்கள் தேர்வில் நாம் தலையிட முடியாது என முதல்வர் நாகரிகமாய் பதிலளித்து விட்டதைத்தான் விழா முடிந்த பின்பு சினிமாக்காரர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

— மானஸா

படம்: யோகா

கிரிமினல்கள் ஜாக்கிரதை - 3

# அண்ணா அடைந்த அதிர்ச்சி!

## தடய அறிவியல் நிபுணர்

## பி. சந்திரசேகரன்



"ஹலோ சந்திரசேகரன்- முதல்வர் அவர்களுக்கு காந்த சிகிச்சை (Magnet Therapy) கொடுக்க இருக்கிறார்கள். தாடையை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தபோது அனைத்த குண்டின் சிதறிய சில பாகங்கள் உள்ளே பதிந்திருப்பது தெரிய வந்தது. இந்த குண்டுச் சிதறல்களில் இரும்பு உலோகம் இருக்கிறதா என்று டாக்டர்கள் அறிய விரும்புகிறார்கள்" என்றார் செயலர்.

டாக்டர்களுடைய கவலைக்கான காரணம் எனக்குப் புரிந்தது. குண்டுச் சிதறல்களில் இரும்பு இருந்தால் Magnet Therapy கொடுக்கும்போது அவை எசகுபிசகாக இடம் பெயர்ந்து உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடும். நான் செயலரிடம் "குண்டுச் சிதறல்களில் இரும்பு உலோகம் கிடையாது" என்று சொன்ன பிறகே சிகிச்சை அளிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் தடய அறிவியல் துறை வளர ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர் எம்.ஜி.ஆர். சோதனைச் சாலைக்கு வேண்டிய உபகரணங்கள், ஆய்வுக்கு வேண்டிய சகல உதவிகள் என்று அரசின் முழு ஆதரவும் தடய அறிவியல் துறைக்கு இருந்தது. அதன் தலைவராக இருந்த எனக்குத் தாராளமாக நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களும் வழங்கப்பட்டன.

வேறு பல துறைகளில் மேற்கொள்ளப்பட்ட சில சோதனைகள் தடய அறிவியல் துறைக்கு மாற்றப்பட்டன. உதாரணமாகச் சொன்னால், மதுவிலக்கு ஆயத்தீர்வுத் துறையில் மது வகைகள் சோதிக்கப்பட்டு அவற்றில் இருந்த ஆல்கஹால் அளவுக்கு ஏற்ப தீர்வை விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்தத் துறையில் ஏகப்பட்ட ஊழல்! மதுபான உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்பில் ஆல்கஹால் சதவீதத்தை குறைத்துக் காண்பித்து தீர்வையை ஏய்த்து வந்தார்கள்! இதற்கு அலுவலகர்கள் உதவியாக இருந்தார்கள்.


தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவெங்கும் இந்தத் துறையில் இப்படித்தான் நடக்கும். எனவே எம்.ஜி.ஆர்., மதுவிலக்குத் துறை மேற்கொண்டு வந்த இந்த சோதனைப் பணியை எங்கள் சோதனைச் சாலைக்கு மாற்றி விட்டார். மதுவிலக்கில் எம்.ஜி.ஆருக்குத் தீவிர நம்பிக்கை உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதைக் கண்டிப்பாக அமுல் படுத்தும்போது கள்ளச்சாராயம் ஊடுருவுவது மட்டுமல்லாமல் கள்ளச் சாராயத்தை அருந்தி பலர் இறந்து போகவும் நேரிடுகிறது என்பதை அவர் உணர்ந்தார்.

இது தவிர, மதுவிலக்கைத்

''ஸ்டேஷன் வாசல்ல கபாலி உண்ணா விரதம் இருக்கானாமே... ஏன்?''

''வரலாறு காணாத வகைல நாம உயர்த்தியிருக்கற மாமூல குறைச்சுக்கணுமாம்!''

– அம்பை தேவா



தளர்த்துவதன் மூலம் அரசுக்கு வருமானம் பெருகும் என்று அதிகாரிகள் வேறு அழுத்தம் கொடுத்தார்கள்.

இந்த அடிப்படையில் எம்.ஜி.ஆர். மது பானங்கள் விற்பனை விதிகளைத் தளர்த்திச் சாராயக் கடைகளைக் கொண்டு வந்தார். ஆனால் அதே சமயம் கடைகளில் பிளாஸ்டிக் பாக்கெட்டில் அடைக்கப்பட்டு விற்கப்படும் சாராயம் மக்களிடம் சேரும்போது விஷத்தன்மை வாய்ந்ததாக மாறும் ஆபத்து இருக்கிறதா என்றும் எங்களைச் சோதனை செய்து பார்க்கச் சொன்னார்.

நாங்கள் எங்கள் சோதனைச் சாலையில் ஆந்திராவிலிருந்து கடத்தப்பட்டுவரும் சாராயப் பாக்கெட்டுகளைப் பகுத்தாய்ந்து, தரம் மற்றும் விஷத்தன்மை ஆகிய கூறுகளைப் பற்றி விவரங்கள் எடுத்து வைத்திருந்தோம். அந்தத் தகவல்களையும் தமிழ்நாட்டில் தயாராகும் பாக்கெட் சாராயத்தின் தரம், விஷத் தன்மை உள்ளதாக மாறும் ஆபத்து இல்லை என்பதையும் அறிந்து, முதல்வரின் பார்வைக்கு முழு விவரங்களையும் சமர்ப்பித்தோம். வழக்கப்படி முதல்வரின் பாராட்டு கிடைத்தது.

கிர்க்கியில் பயின்ற துப்பாக்கி, தோட்டா நுட்பங்கள், எம்.ஜி.ஆர்-ராதா அவர்கள் வழக்கில் மட்டுமல்லாமல் வேறு பல வழக்குகளிலும் உண்மையைக் கண்டு பிடிக்க உதவின. எனக்கு குறிப்பாக ஞாபகம் வருவது வையம்பட்டி வழக்கு.

திண்டுக்கல் அருகில் வையம்பட்டி ஒரு கிராமம். அங்கு இரண்டு பெரிய பணக்காரர்கள். ஒரு பணக்காரர் தம் மனைவி, மற்றொரு பணக்காரரோடு தொடர்பு வைத்திருக்கிறார் என்று சந்தேகப்பட, அந்தச் சந்தேகமே இருவரிடையே பல்வேறு சண்டைகளுக்கு அடிப்படையானது. இரு பணக்காரர்களும் எலியும் பூனையுமானார்கள்.

ஒரு நாள்–

சந்தேகப் பேர்வழியின் மனைவி மார்பில் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து போனார். உடனே கணவர் தமக்குப் பிடிக்காத அந்தப் பணக்காரர் தான் ஜன்னல் வழியாகத் தன் மனைவியைச் சுட்டு கொலை செய்துவிட்டதாக புகார் தர, போலீசும் அந்தப் பணக்காரரைக் கைது செய்து விட்டது.

அந்த மனிதர் 'நான் நிரபராதி' என்று எவ்வளவோ புலம்பியும் போலீஸ் அவரை விடுவதாக இல்லை.

போலீஸ் தீவிரமாக விசாரித்தும் தேடியும் கூட, சுடப் பயன்படுத்திய துப்பாக்கியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. விவகாரம் எங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

தம்பதிகள் படுத்திருந்த அறையில், ஜன்னலிலிருந்து அவர்கள் படுத்திருந்த இடம் எவ்வளவு தூரம்? உடம்பில் குண்டு பாய்ந்த இடத்தைப் பற்றிய போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் என்ன என்று ஆராய்ந்தேன்.

போஸ்ட் மார்ட்டம் அறிக்கையில், உடலில் குண்டு பாய்ந்த இடத்தைப் பற்றி குறிப்பிடும்போது அந்தத் துளையைச் சுற்றி புகை படிந்திருந்ததைப் போன்று கறுப்பு வட்டம் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தத் தோல் பகுதியை மட்டும் உடலிலிருந்து வெட்டி எடுத்து அனுப்பச் சொன்னேன். அந்தத் தோல் பகுதியைச் சோதனை செய்தபோது, துப்பாக்கி ரவைக்குள் இருக்கும் வெடி மருந்தால் உண்டான கருமை என்று புரிந்து விட்டது. துப்பாக்கி குழலிலிருந்து குண்டு சீறிக் கொண்டு வரும்போது குறிப்பிட்ட தூரம் ரவையுடன் சேர்ந்து, உந்து சக்தியைக் கொடுத்த வெடி மருந்தும் எரிந்தபடி வரும். தூரம் கொஞ்சம் அதிகமாக இருந்தால் இலக்கை அடையும் முன் நெருப்பு அணைந்து போய் குண்டு மட்டும் பாயும். ஆனால் இலக்கு மிக அருகில் இருக்கும்போது குண்டு உள்ளே சென்றவுடன் துளையைச் சுற்றித் தீப்பிழம்பு கருமையாய்ப் படிந்து விடும்.

எனக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. மிக அருகிலிருந்து அந்தப் பெண்மணி சுடப்பட்டிருக்கிறார். ஜன்னலுக்கும் கட்டிலுக்குமான தூரத்தைக் காட்டிலும் மிகக் குறைந்த தூரம்!

சந்தேக ஊசி கணவன் மீது நின்றது. போலீஸ் 'தக்கபடி' விசாரித்தது. உண்மை வெளிவந்து விட்டது. சந்தேகப் பேர்வழியான கணவன் தன் துப்பாக்கியால் அவளைத் தூக்கத்திலேயே தீர்த்துக் கட்டியிருந்தான்!

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் நிரபராதியான மற்றொரு பணக்காரன் விடுதலை செய்யப்பட்டதுதான். ஆயிரம் குற்றவாளிகள் தப்பிப்போகலாம்; ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பது நீதித்துறையின் ஆத்திச் சூடியாயிற்றே!

எதையுமே உடனடியாக நம்பிவிடக் கூடாது என்பதுதான் தடய அறிவியலின் அடிப்படை. துருவல் மனப்பான்மைதான் தடய அறிவியலார்க்கு முதலில் தேவை.

இப்படித்தான், தி.மு.க. 1967ல் அண்ணா தலைமையில் ஆட்சிக்கு வந்த நேரம். திடீரென்று ஆங்காங்கே குடிசைகள் பற்றிக் கொண்டு எரிந்தன. அண்ணாவுக்கு மிகவும் கவலையாகப் போய்விட்டது. அரசியல் ரீதியாக பல காரணங்கள் சொல்லப்பட்டன. போலீஸ் தீவிரமாகக் கண்காணித்தும் குடிசைகள் எரியும் மர்மத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது நான் உதவி இயக்குனராக இருந்தேன். குடிசைகள் எரியும் மர்மத்தைக் கண்டுபிடிக்க உதவுமாறு போலீஸ் எங்களைக் கேட்டுக் கொண்டது.

தடய அறிவியல் விஞ்ஞானிகளுக்கு ஸ்பாட் விசிட் என்பது முக்கியமான ஒன்று. குற்றம் நடந்த இடத்தை உடனே சென்று பார்த்து, காரணங்களைக் கண்டறிய ஏதாவது தடயங்கள் கிடைக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். எனவே நான் எரிந்த குடிசைகளைப் பார்க்கக் கிளம்பினேன்.

ஒரே நாளில் 92 இடங்களை நேரில் சென்று பார்த்தோம். என்னுடன் குற்றப் பிரிவு போலீஸ் கண்காணிப்பாளர் ஆர்.எம். கிருஷ்ணசாமியும் வந்தார். கொஞ்சம் கூட ஓய்வு எடுக்காமல், சோறு, தண்ணி இல்லாமல் எரிந்த குடிசைப் பகுதிகளையெல்லாம் சுற்றிப்பார்த்தோம்.

"பார்த்துக்கோங்க... சந்திரசேகரன்... முதல்வர் ரொம்ப கவலையாக இருக்கிறார். மக்கள் மிகவும் பீதியாக இருக்கிறார்கள். எரிவதற்குக் காரணம் பாஸ்பரஸ்தான் என்று சொல்கிறார்கள். அதற்கான தடயம் ஏதாவது கிடைத்ததா என்று கவலையுடன் கேட்டார் கிருஷ்ணசாமி.

"இப்படி நடந்ததற்கு முதல்வரும் ஒரு காரணம்தான்" என்றேன் நான்.

"என்னது?" என்று பதறினார் கிருஷ்ணசாமி.

"என்னை முதல்வரிடம் அழைத்துக் கொண்டு போங்கள்; அவரிடமே சொல்கிறேன்" என்றேன்.

கோட்டைக்குச் சென்றோம். நாங்கள் வந்திருக்கிறோம் என்றவுடன் உடனே உள்ளே கூப்பிட்டார் அண்ணா. நான் 'வணக்கம் அண்ணா' என்றபடி உள்ளே நுழைந்தேன். கிருஷ்ணசாமிக்கு ஆச்சர்யம், அதிர்ச்சி! முதல்வரை இவ்வளவு உரிமையோடு கூப்பிடுகிறாரே என்று வியப்பு!




அண்ணாவும் என்னைப் பார்த்தவுடன் "வா... வா... என்ன பாத்தே... சொல்லு..." என்று சகஜமாகப் பேசத் துவங்கினார்.

"எரிந்த பகுதியில் குடிசை, குடிசையாக நுழைந்து பார்த்தேன் அண்ணா. குடிசைகள் எரிப்பு தினமும் தொடர்வதற்கு நீங்கள்தான் காரணம் அண்ணா? என்றேன்.

"என்ன சொல்ற நீ... என்ன சொல்ற?" என்றபடி பதற்றப்பட்டார் இளகிய மனம் கொண்ட முதல்வர் அண்ணா!

(தொடரும்)

கூசியது. திரும்பிப் போய்விடலாமா? நினைப்பைச் செயல்படுத்த முடியாமல் அவரைப் பிணைத்திருந்த கயிறுகள் உள்ளே தள்ளின.

மூர்த்தி சார், பார்த்தும் பார்க்காமலும் ஏன் மாடி ஏறிப் போனார்? தான் பணம் கேட்க வருவது தெரிந்துமா!

வாசல்கேட்டைத் திறக்கும்போதே மூர்த்திசார் வந்தார். தமிழய்யா உள்ளே வருவது தெரிந்தும் மடமடவென்று மேலே படி ஏறிப்போனார். நிஜமாலும் பார்க்கவில்லையா! அலட்சியமா?

தமிழய்யா கூடத்தான் மூர்த்தி சார் வேலை பார்க்கிறார். கணக்கு ஆசிரியர். போனவாரமே மூர்த்தி சாரிடம் பணம் கேட்டிருந்தார். இதோ அதோ என்று இழுத்தடித்து, இன்று வரச் சொல்லியிருந்தார். வந்தபோது, ஏன் காணாதது போல் போனார்?

தமிழய்யா குழப்பத்தோடு உள்ளே நுழைந்தார். வாசலில் விதவிதமாய் செருப்புகள் கிடந்தன. டியூஷன் படிக்கும் குழந்தைகளின் செருப்பு.

ஞாயிற்றுக் கிழமையிலும் டியூஷனா?

மூர்த்தி சாரைப் போல் தானும் கணக்கு படித்திருக்கலாம். டியூஷன் எடுத்தே வீடு, வாசல் கட்டி, மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்திருக்கலாம். இப்படிப் பெண்களுக்கு சீர், செனத்தி செய்ய கடன் கேட்டுக் கெஞ்ச வேண்டியதில்லை.

வீடு கீழே அமைதியாக இருந்தது.

"மூர்த்தி சார்!"– கூப்பிட்டார்.

"யாரு?"– ஒரு பெண் எட்டிப்பார்த்தது.

"மூர்த்தி சார் இல்லையா?"

"மேலே டியூஷன் சொல்லித் தரார்."

"அவரு சம்சாரம்?"

"அந்தம்மாவும் டியூஷன் எடுக்கறாங்க."

அதிர்ஷ்டம்! வாழ்க்கையை எப்படி எல்லாம் திட்டம் போட்டு அமைத்துக் கொள்கிறார்கள். தம்மை மாதிரியா? தோல்வியே வாழ்க்கையாக!

"என்ன வேணும்?"

"சார் வரச் சொல்லியிருந்தார்."

"நீங்க யாரு?"

"தமிழய்யான்னு சொல்லுங்க."

"இப்படி உட்காருங்க"– அவள் சோபாவைக் காட்டினாள். தண்ணீர் தந்தாள். மேலே விஷயம் சொல்ல, படி ஏறிப் போனாள்.

கீழ் வீடு நேர்த்தியாக இருந்தது. கலர் டி.வி. வீடியோ, டேப், ஷோகேஸ். சுவரெல்லாம் பெயிண்ட் அடித்து, தரை மொசெய்க் மின்னியது.

தமிழய்யாவுக்கும் இப்படி பளபளவென்று வீடு கட்ட ஆசைதான். ஆனால் சொந்தவீட்டை விற்றுத்தான் இரண்டாவது பெண்ணுக்குக் கல்யாணம் செய்தார். மூன்றாவது பெண் படிக்கிறாள்.

அடுத்த வருஷம் ரிடையர் ஆகிறார். அதில் வரும் பணத்தைத்தான் மூன்றாவது பெண் கல்யாணத்திற்கு நம்பிக் கொண்டிருக்கிறார்.

இடையில் எதிர்பாராத, செலவுகள் வந்தால் மூர்த்தி சார்தான் ஆபத்பாந்தவன். அனாதையின் ரட்சகன்.

மூர்த்தி சார், அவரது மனைவி இருவருமே சம்பாதிக்கிறார்கள். டியூஷன் எடுக்கிறார்கள். ஒரே பையன். வட்டிக்கு பணம் தந்து வட்டியும் அசலுமாய் வாங்கிக் கொள்வார் மூர்த்திசார்.

தமிழய்யாவின் முதல்பெண் பிரசவத்

றிற்கு வந்து, ஆண் குழந்தை பெற்றிருக்கிறாள். தேடக் கிடைக்காத செல்வம். மாமியார் வீட்டில் குழந்தைக்கு இடுப்பு அரணாக் கொடி, கால் கொலுசு, தங்கச் செயின் போடச் சொல்லி உத்தரவு.

மூர்த்தி சாரிடம் பணம் கேட்டே ஒருவாரம் ஆகிறது. நடையாய் நடக்கிறார். இன்று வா, நாளைவா என்கிறாரே தவிர, பணம் பெயர்ந்த பாடில்லை.

கிடைக்காதோ?

நினைப்பே பகீர் என்றது.

''தமிழய்யாவா... வாங்க... வாங்க.''– மூர்த்திசார் இறங்கி வந்தார்.

"என்ன விஷயம்?"– எதிரில் உட்கார்ந்தார்.

"என்ன மூர்த்தி"– தமிழய்யா அதிர்ந்தார். ''நீங்க தானே வரச் சொன்னீங்க, பணம் தரேன்னு?''

''ஓ! ஸாரிங்க மறந்தே போச்சு.''

தமிழய்யா மையமாகப் புன்னகை செய்தார்.

''எவ்வளவு கேட்டீங்க?''

"பத்தாயிரம்."

"ம்......ம்"– மூர்த்திசார் யோசித்தார்.



தமிழய்யா நெருப்புக் குழிக்குள் இறங்கினார். பாதம் எரிந்தது. வயிற்றுக்குள் அமிலம் சுரந்தது.

"அவ்வளவு பணம் இப்ப இல்லையே!"

"என்ன மூர்த்தி இப்படிச் சொல்றீங்க. கடைசி நேரம்."

''என்னங்கய்யா செய்யறது? டியூஷன் புள்ளைங்க பீஸ் தரணும். கேட்டா இதோ தரேன். அதோ தரேன்னு சால்ஜாப்பு.''

ஜி.ஏ.பிரபா

''இப்படி சொல்லக்கூடாது மூர்த்தி. பார்த்து ஏதானும் ஏற்பாடு பண்ணுங்க''– தமிழய்யா கெஞ்சினார்.

''உங்களைப் பாத்தா பாவமாத்தான் இருக்கு.'' சேவிங்க்ஸ் எதுவும் இல்லையா?''

''எங்க மூர்த்தி! மூணும் பொண்ணுக. இருக்கறதை எல்லாம் வழிச்சு போட்டுதான் ரெண்டை கரையேத்தினேன். மூணாவதுக்கு ரிடையர் ஆகி வர பணம்தான்.''

''அப்புறம் பென்ஷன்தானே?''

''ம்......ம்''

''ரெண்டு பொண்ணு பொறந்தப்பவே

நிப்பாட்டியிருக்கணும்."

கூசிப்போனது உடம்பு. பணம் தருவதால் அட்வைஸ் செய்கிறானோ! ரொம்ப கலப மான விஷயம். காக்கைக்குத் தெரியுமா எருதின் வலி?

"நமக்கு இல்லைன்னு நாலு காசானும் பேங்க்ல இருக்கணும்."

"இருக்கணும் தான். எங்க முடியுது."

"என்கிட்ட இப்ப அவ்வளவு இல்லையே!"

"அப்படிச் சொல்லாதிங்க மூர்த்தி. எப்படி யாச்சும் பாத்துப் பண்ணுங்க."

"எப்படியாச்சும்னா எப்படி? நா நோட்டு அடிக்கிற பிரஸ்ஸா வச்சிருக்கேன்?"- மூர்த்தி சார் சிரித்தார்.

சடாரென்று தன்மானத்தில் அடிவாங்கினார் தமிழய்யா. உயிர் நடுங்கியது. ஊசி குத்தியது போல் நடுங்கினார்.

அவரது முகம் மூர்த்தி சாரை இளக வைத்தது.

"என்கிட்ட அஞ்சாயிரம் வேணா இருக்கு. நம்ம கெமிஸ்ட்ரி சார்கிட்ட பணம் இருக்கு. ஆனா மூணுருவா வட்டி. என்னன்றீங்க?"

"............"

"யோசிங்க. சரின்னா, நான் போய் வாங்கி யாறேன்"- மூர்த்தி சார் எழுந்தார். "மேல கிளாஸ் இருக்கு. வரட்டா?"

தமிழய்யா அங்கேயே உட்கார்ந்திருந்தார். மூர்த்திசாரின் பேச்சும், செய்கையும் நிலைகுலைய வைத்தன. எத்தனை அவமானம்! காத்திருந்து, கேவலப்படுத்துகிறானே. சும்மாவா கேட்கிறேன். வட்டியும், அசலுமாய்த் திருப்பித் தருவேனே!

சடாரென்று எழுந்தார். விடுவிடுவென்று படி இறங்கி வாசலுக்கு வந்தார். வெளித் திண்ணையில் பக்கத்து வீட்டுப் பையன் சப்தம் போட்டுப் படித்துக் கொண்டிருந்தான்.

"தமிழர் பண் பாட்டில் தலை சிறந்தது மானம். தமிழர் மானம் இழந்து உயிர் வாழ விரும்ப மாட்டார். குடிக்க நீர் கேட்டு, தாமதித்து ஏளனத்தோடு சிறைக் காவலன் தந்த நீரைக் கையாலும் தொடாமல் உயிர் நீத்த கணைக்கால் இரும் பொறையின் மாண்பு நாம் அறிந்த ஒன்றே. மானத்தைவிட உயிர் பெரிதில்லையே!"

தமிழய்யா நின்றார்.

மானத்தை விட உயிர் பெரிதில்லை. நினைத்தார். குழம்பினார்.

'வெல்வது வேண்டின் வெகுளி விடல்'- தனக்குள் சொல்லிக் கொண்டு பையனை நெருங்கினார்.

பையன் நிமிர்ந்து பார்த்தான்.

"தமிழர் பண்பாடா படிக்கிறே தம்பி!"

"ஆமாங்க."

"கொஞ்சம் மெல்லமா படி தம்பி. சத்தமா படிச்சா தலை வலிக்குது"- என்றவர், மீண்டும் உள்ளே வந்து மூர்த்திசாருக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார். ●

## இது விளையாட்டுக்கு...




த்ரில் டைரடர்...! கதாநாயகனுடன் நாமும் பள்ளத்தில் குதித்து, ஆற்றில் எதிர்நீச்சல் அடித்து, சறுக்கி விழுந்து, விரையும் காரில் நாமும் விரைந்து, அத்தனை சாகசங்களிலும் பங்கு கொள்ளும் அனுபவத்தைப் பெறலாம். நாம் அமரும் இருக்கைகள் கம்ப்யூட்டர் இணைப்பு மூலம் இயக்கப்பட்டு, திரையில் காணும் காட்சிக்கு ஏற்ப இந்த அனுபவத்தை அளிக்கின்றன!

இப்படியொரு கேளிக்கை வசதியைத் தொடங்கியிருப்பவர் த.மா.கா. பிரமுகர் ஜே.சி.டி. பிரபாகரன். துவக்கி வைத்தவர் மூப்பனார். இதய நோயாளிகளுக்குத் தடை செய்யப்பட்ட இந்த 'விளையாட்டை' 'சாம்பிள்' பார்த்தே தீருவேன் என்று அமர்ந்து அனுபவித்தார் தலைவர். அரசியல் மேடு பள்ளங்களைச் சமாளிப்போருக்கு இந்த விளையாட்டு எம்மாத்திரம்!

– கௌசி

படம்: ராஜன்

# பிதர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



இத்துடன்
கிராண்ட் ஸ்வீட்ஸ்
வாங்கி
நல்லோர்களுக்கு
விநியோகம் செய்யவும்

**தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்**

நெ. 24, 2வது
மெயின் ரோடு
காந்தி நகர்
அடையாறு
சென்னை - 20
போன் : 4915662
4914213

***திருமண வைபவங்களுக்கு:***

*சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவைச் செய்துத் தரப்படும்.*

"உடனடியாக வீடு கட்டவோ அல்லது விரைவான முதலீட்டு லாபமோ
எப்படியானாலும் இது ஒரு புத்திசாலித்தனமான முதலீடு"

## நல்ல வீட்டு மனையை நழுவ விடாதீர்கள்

# சிந்து நகர் - சென்னை - 600 056.

சவிதா டென்டல் காலேஜ் அருகில் - **CMDA** அப்ரூவ்டு மனைகள். (ரெ. 65/99.)


அமைந்துள்ள இடம் ☑ மாநகருக்கு அருகில் ☑ பாதுகாப்பு ☑ முதலீடு செய்யும்
பணத்துக்கு தகுந்த மதிப்பு ☑ வேகமாக உயரும் நில மதிப்பு ☑

மனையை பார்வையிட இலவச வாகன வசதி தினமும்
காலை 7.00 மணி, 11.00 மணி மற்றும் மாலை 3.00 மணி

**சிறப்பு அம்சங்கள் :** • உடனே வீடு கட்டலாம் / அருகில் வீடுகள். • கோயம்பேட்டிலிருந்து 10 நிமிட பயணம். • அண்ணா நகரிலிருந்து 15 நிமிட பயணம். • சமமான மூன்று வழிப் பாதைகள். கிண்டி, செயின்ட் தாமஸ் மவுண்ட், போரூர் 100 அடி சாலை அரும்பாக்கம் கோயம்பேடு மதுரவாயல் 100 அடி சாலை அம்பத்தூர் ஆவடி 60 அடி சாலை. • சென்னை பெங்களூர் (NH4) தேசிய நெடுஞ்சாலை. • கோயம்பேட்டில் அமைந்துவரும் பிரம்மாண்ட பஸ் நிலையம் • தாம்பரம் வானகரம் புறவழிச் சாலை. • மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தாராளமான பஸ் வசதி • மெடிக்கல், டென்டல், இஞ்சினியரிங் கேட்டரிங் ஆர்ட்ஸ் கல்லூரிகள் மிக அருகில் • சுவையான / மிகுதியான நிலத்தடிநீர். • சுத்தமான பத்திரம் / நம்பகமான நிறுவனம் • உடனடி பத்திரப் பதிவு.

## 5 வருட மனை பாதுகாப்பு சேவை.

**PH: 4357721 / 31 / Tel Fax : 4353183 CELL: 98400 44018**



## BLB Estates (P) Ltd.

S3, "Ramana Flats" 27, Rathna Nagar, Off ; Anna Salai,
Teynampet, Chennai - 18. (Behind Apollo Cancer Hospital)

**வர்த்தகத்தில் நேர்மை : பணியில் பொறுப்பு**

## "5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



*Lakshmi Iyer*

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது, இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)** இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி திறகவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பசும்பசை (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பசும்பசை (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டிஸ், ஸ்பாண்டிலைட்டிஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.

★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க
இப்போதே
தொடர்பு கொள்க.
தொலைபேசி
**0413-346683**

காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

**MARC** ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்
32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, சுபார்ச்சுன் பேக்கரி எதிரில்)
**Fax : 91 - 0413 - 346683**




இருபத்து ஒன்றாம் அத்தியாயம்

## உயிர் ஊசலாடியது!

ஒரு கண நேரம் ஒரு யுகமாகத் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்கள் சில உண்டு. அவற்றில் ஒன்று இப்போது வானதிக்கு நேர்ந்தது. அவள் கண்ணை மூடிக்கொண்டு, துர்க்கா பரமேசுவரியைப் பிரார்த்தனை செய்துகொண்டு, ஓட்டுக்கூரை ஓடத்தில் சுழன்று சென்ற நேரம் சில வினாடிகள்தான் இருக்கும். ஆயினும் அவை சில யுகங்களாகவே அவளுக்குத் தோன்றியது. பின்னர் ஏற்பட்ட ஒரு பெரிய அதிர்ச்சி அவளுடைய தேகத்தையெல்லாம் குலுக்கிப் போட்டபோது அவளுடைய கண்களும் திறந்துகொண்டன. கூரை ஓடம் ஆற்றங்கரை மரத்தின் பேரில் மோதியதனால் அந்த அதிர்ச்சி உண்டாயிற்று என்பதை அவள் அறிந்தாள். அதனால் அந்தக் கூரை சுக்கல் சுக்கலானபோது அதிர்ஷ்டவசமாக வானதியின் பாதி உடம்பு, வளைந்திருந்த மரக்கிளையில் சிக்கிக்கொண்டிருந்தது. அதனால் அவள் மரத்தின் வேர்களில் மோதப்படாமல் தப்பினாள். தனது நிலைமையை ஒருவாறு உணர்ந்து மரக்கிளைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். வெள்ளத்தின் சுழல் அவளுடைய கால்களைப் பிடித்து அதிவேகமாக இழுத்துக்கொண்டிருந்தது. அந்த வேகத்தினால் கால்கள் பிய்த்துக்கொண்டு

**அமரர் கல்கி**

போய் விடும் போலிருந்தது. அவள் உடுத்தியிருந்த சேலையும் அவளை இழுத்து வெள்ளத்தில் விட்டு விட முயன்றதாகத் தோன்றியது.

வானதிக்கு அச்சமயம் அதிசயமான மனோதிடமும் தைரியமும் எங்கிருந்தோ வந்திருந்தன. பல்லைக் கடித்துக்கொண்டு தன் முழு பலத்தையும் கொண்டு எழுப்பி மரக்கிளையின் மேலே தாவி ஏறினாள். வளைந்து ஊசலாடிய மெல்லிய கிளைகளுக்கு மேலே இரண்டு கவடுகளாகப் பிரிந்த ஒரு பெரிய கிளையில் வசதியான இடத்தில் கெட்டியாக உட்கார்ந்து கொண்டாள். சேலைத் தலைப்புகளை முறுக்கித் தண்ணீரைப் பிழிந்தாள்.

அப்போது சடபடவென்று தண்ணீர் அடிபடும் சத்தம் கேட்டது. சற்று முன்னால், அவள் கண்ணை மூடிக் கொள்வதற்கு முன்னால், பார்த்த முதலையின் நினைவு வந்தது.

கீழே குனிந்து நாலு பக்கமும் உற்றுப்பார்த்தாள். முதலில், முதலையின் வால் தண்ணீரை அடிக்கும் காட்சி மட்டும் தென்பட்டது. முதலையின் உடம்பில் பெரும் பகுதியை அவள் ஏறி வந்த ஓட்டுக் கூரையின் உடைந்து சிதறிய பகுதிகள் மறைத்துக்கொண்டிருந்தன. சிறிது சிறிதாக முதலை தன் வாலின் உதவி கொண்டும் உடம்பை அசைத்து நெளித்தும் அந்தக் கூரைப் பகுதிகளிலிருந்து முழுதும் விடுவித்துக்கொண்டு வெளி வந்தது. அப்படி வெளிவந்த மகிழ்ச்சியைக் காட்டுவதற்காக முதலை தன் வாயை அகலப் பிளந்தது. வானதியைப் பார்த்து அது "வா! வா! எப்படியும் நீ என் வாயில் விழ வேண்டியதுதான்!" என்று சொல்வது போலிருந்தது.

வானதியும் தான் தப்பிப் பிழைத்த விதத்தை எண்ணிப் பார்த்து உற்சாகம் கொண்டிருந்தாள். "ஓகோ! அப்படியா சொல்கிறாய்? என்னை விழுங்கி விடுவேன் என்றா சொல்கிறாய்? முதலையே! உன் கை வரிசை, வால் வரிசை ஒன்றும் என்னிடம் பலியாது! நீ பல்லைக் காட்டுவதிலும் உபயோகமில்லை. உன் பசிக்கு என்னை நம்பியிராதே! வேறு யாரையாவது பார்த்துக் கொண்டு போ!" என்று வானதி முதலையிடம் பேசினாள். அந்தக் குரலைக் கேட்ட முதலை தன் இரண்டு பயங்கரமான கண்களாலும் அவளை உற்றுப் பார்க்கத் தொடங்கியது.

வானதி "ஓகோ! உன்னுடைய சபலம் உன்னை விடவில்லை போலிருக்கிறது!" என்று கூறி விட்டுச் சுற்று முற்றும் பார்த்தாள். அவளுடைய நிலைமை சற்றுப் பீதி அளிக்கக் கூடியதாகவே தோன்றியது. தண்ணீரின் பக்கம் அந்தப் பெரிய மரத்தின் கிளைகள் வளைந்து தொங்கின. ஆனால் கரையின் பக்கத்தில் அப்படித் தாழ்ந்திருந்த கிளைகளையே காணவில்லை. அடி மரத்தின் வழியாக இறங்கினால், அங்கே வேர்களோடு வேராக முதலை காத்துக் கொண்டிருந்தது. நதியின் பக்கம் வளைந்திருந்த கிளைகளிலிருந்து குதித்தால் மடுவின் சுழல் அவளைச் சுற்றிச் சுழற்றிப் பாதாளத்துக்கு இழுத்துக்கொண்டு போகக் காத்திருந்தது. அந்தப் பெரிய சுழலைச் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால் கூடத் தலை சுற்றும் போலத் தோன்றியது. "கரைப் பக்கம் கிளைகள் உயரமாக இருந்தாலும் பாதகமில்லை; எப்படியோ குதித்துச் சமாளிக்கலாம்" என்று எண்ணி, மரக்கிளைகளின் வழியாக நடந்து மறுபக்கம் போக யத்தனித்து எழுந்தாள்.

ஏற்கெனவே வெகு நேரம் அவளுடைய உடம்பின் கீழ்ப்பகுதி முழுதும் தண்ணீரில் இருந்த படியால் கால்கள் சில்லிட்டுப் போயிருந்தன. எழுந்து நிற்க முயன்ற போது கால்கள் வெடவெடவென்று நடுங்கின. "சீச்சீ! கால்களே! உங்களுக்கு என்ன வந்து விட்டது?" என்று சொல்லிவிட்டு, வானதி மறுபடி உட்கார்ந்துகொண்டாள். யாருக்குப்

பொறுமை அதிகம்? முதலைக்கா, தனக்கா? – என்று சோதித்துப் பார்க்க வேண்டியதுதான் போலும்!

இச்சமயம், கஜேந்திரனின் பிளிறல் சத்தம் கேட்டு வானதி திடுக்கிட்டாள். சற்று முன் நதியைக் குறுக்கே கடந்து கரை ஏறி மேற்கு நோக்கிச் சென்ற யானை திரும்பி வந்து கொண்டிருந்தது. அதேசமயத்தில் ஆற்றின் கரை ஓரமாகப் படகு ஒன்று வருவதையும் கவனித்தாள். அந்தப் படகில் இருவர் இருந்தார்கள். ஆம், ஆம்; அந்த இருவரில் ஒருவன் ஜோதிடரின் சீடன்; இன்னொருத்தி பூங்குழலிதான்! கடைசியில் தன்னைக் காப்பாற்றி அழைத்துப் போக பூங்குழலிதானா வர வேண்டும்?

படகு மரத்தின் அடியில் வந்தது. மரக் கிளை மேல் உட்கார்ந்திருந்த வானதியைப் பூங்குழலி பார்த்து விட்டாள். சிரித்துக்கொண்டே "இளவரசி! நல்ல இடம் பார்த்து ஒளிந்து கொண்டீர்கள். சீக்கிரம் இறங்கி வாருங்கள்! அதோ அந்த யானையின்மேல் வருகிறது யார் தெரியுமா?" என்று கேட்டாள்.

வானதியின் மனத்தில் சட்டென்று உண்மை உதயமாகி விட்டது. ஆனாலும் அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, "தெரியாதே? யார்?" என்று கேட்டாள்.

"தாங்கள் யாரைத் தேடிக் கொண்டு புறப்பட்டீர்களோ, அவர்தான்! இளவரசர்தான்!" என்றாள் பூங்குழலி.

வானதி அடங்கா வியப்புடன் யானையின் மேல் வருகிறவரைச் சில கண நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். அவர் அருகில் வரும் சமயத்தில் தான் மரக் கிளையின் மேல் உட்கார்ந்திருப்பது மிக்க அசம்பாவிதம் என்று தோன்றியது. பூங்குழலியின் யோசனைப்படி அவளுடைய படகில் இறங்கிவிட வேண்டியதுதான் என்று எண்ணிக் கீழே பார்த்தாள்.

அச்சமயம் படகு வெள்ளத்தின் வேகத்தினால் மரத்தடியில் நிற்க முடியாமல் நகர்ந்து செல்



வதைக் கண்டாள். படகுடன் போக விரும்பாமல் பூங்குழலி தாவிக் குதித்ததையும் பார்த்தாள்.

ஐயோ! இது என்ன? பக்கத்தில் பயங்கர முதலை கிடப்பதை இந்தப் பெண் கவனிக்கவில்லையா, என்ன?

ஒரு கணத்தில் ஒன்பதினாயிரம் எண்ணங்கள் வானதியின் உள்ளத்தில் எழுந்து கொந்தளித்தன!

அவள் வாயிலிருந்து ஏதோ உளறிக் குளறி வார்த்தைகள் வந்தன!

''முதலை!'' என்பது மட்டும் பூங்குழலியின் காதில் விழுந்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஆம்; அவளுக்கு வெகு சமீபத்தில் ஒரு பிரம்மாண்டமான முதலை அதன் வாயைப் பிளந்துகொண்டிருந்தது. பூங்குழலி திரும்பிப் பார்த்த சமயம் முதலை தன் வாலை ஓங்கித் தண்ணீரில் அடித்தது.

பூங்குழலி எவ்வளவோ தைரியசாலிதான்! எத்தனையோ அபாயங்களைச் சமாளித்திருக்கிறாள். ஆனால் பத்தடி தூரத்தில் வாயைப் பிளந்துகொண்டிருக்கும் முதலைக்கு முன்னால் மனோதைரியத்தை மட்டும் வைத்துக்கொண்டு என்ன செய்ய? கரணம் தப்பினால் மரணம்! ஒருவினாடியில் உயிர் தப்பாவிட்டால், முதலையின் வாயில் போக வேண்டியதுதான்! எப்படி உயிர் தப்புவது? மறுபடியும் படகில் ஏறிக் கொள்ள வேண்டியதுதான்!

இவ்வாறு எண்ணிப் பூங்குழலி தண்ணீரில் பாய்ந்தாள். படகு அதற்குள் கொஞ்ச தூரம் போய்விட்டது. ஜோதிடரின் சீடன் படகை அவ்விடத்தில் நிறுத்த முடியாது என்று தீர்மானித்துச் சற்றுக் கீழ்ப்புறம் சென்று கரையோரமாக அதை ஒதுக்க எண்ணிக் கொண்டு போனான். பூங்குழலியின் ஆபத்தான நிலையை அவன் கவனிக்கவில்லை.

படகைப் பிடிக்கத் தாவி நீந்திச் சென்ற பூங்குழலி அலைமோதும் கடலைக் காட்டிலும் காவேரி வெள்ளத்தின் கரையோரச் சுழல் அபாயகரமானது என்று கண்டாள். சுழலின் வேகம் அவளைக் கீழ் நோக்கி இழுத்தது. முதலை அவள் பின்னால் அவளைப் பிடிப்பதற்காக நகரத் தொடங்கிவிட்டதென்பதை உணர்ந்தாள். இந்த நிலையில் அவளுடைய சேலையின் தலைப்பு வளைந்திருந்த மரக் கிளைகளில் மாட்டிக்கொண்டு அவளுடைய நிலையை மேலும் அபாயகரமாக்கியது.

இதையெல்லாம் மேற்கிளை மீது அமர்ந்திருந்த வானதி கண்டாள். தன் மீது பூங்குழலி கொண்டிருந்த மனக்கசப்பும், சற்று முன்னால் அவளுடைய கொடூர வார்த்தை காரணமாகத் தான் செய்த சபதமும், அவள் தன்னைக் கை தூக்கி விட வேண்டாம் என்று எண்ணிக் கையை உதறித் தண்ணீரில் விழுந்ததும் மின்னல் வேகத்தில் அவள் மனத்தில் தோன்றி மறைந்தன. கூடவே, அப்பெண் பொன்னியின் செல்வரைக் கடலிலிருந்து காப்பாற்றிச் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்ததும் அதனால் சோழ நாடும் தானும் அவளுக்குப் பட்டிருந்த நன்றிக் கடனும் நினைவு வந்தன. அதோ, யானை மீது அவர் வந்து கொண்டிருக்கிறார். அவர் வருவதற்குள்ளே இவள் முதலை வாயில் அகப்பட்டுக் கொண்டு விட்டால், அவர் மனம் என்ன பாடுபடும்? தன்னைப் பற்றி அவர் என்ன எண்ணுவார்? பார்க்கப் போனால் தன்னைக் காப்பாற்றும் எண்ணத்துடன் அல்லவா இவள் தொடர்ந்து வந்து இந்த அபாயத்துக்கு உள்ளாகியிருக்கிறாள்?

இவ்வளவு எண்ணங்களும், இங்கே நேயர்கள் படிப்பதற்கு ஆன நேரத்தில் நூற்றில் ஒரு பங்கு நேரத்திற்குள்ளே, வானதியின் உள்ளத்தில் தோன்றின. ''வாயு வேகம் மனோவேகம்'' என்று சொல்வது வெறும் வார்த்தை அன்று. எல்லா வேகங்களுக்குள்ளும் சிந்தனையின் வேகம்தான் அதிக வேகமா

னது.

இவ்விதம் எண்ணமிட்ட நேரத்திலேயே தன்னுடைய கடமை இன்னதென்பதையும் வானதி நிச்சயித்து விட்டாள். மேற்கிளையிலிருந்து ஒரு கிளை கீழே இறங்கி, அதன்மீது படுத்த வண்ணம் கைகளைக் கீழே நீட்டினாள். பூங்குழலியின் தலைக் கூந்தலை வாரிப் பிடித்துக்கொண்டாள். பூங்குழலி மேல் நோக்கிப் பார்த்தாள். வானதியின் கைப் பிடியிலிருந்து அவள் தப்பிச் செல்ல முயலவில்லை.



ஒரு கரத்தை மேலே நீட்டினாள். வானதி இப்போது அந்தக் கரத்தைப் பிடித்துக்கொண்டாள். பூங்குழலியை மேலே இழுக்கத் தொடங்கினாள். இன்னொரு கையினால் மரக்கிளை ஒன்றைப் பற்றிக்கொண்டு பூங்குழலி வெள்ளத்திலிருந்து மேலே எழும்பினாள். வானதி இருந்த கிளையிலேயே அவளும் தாவி ஏறினாள். இரண்டு பேரையும் தாங்க முடியாமல் அந்தக் கிளை வளைந்தது. பூங்குழலி மேலே ஏற முயன்றாள். அந்த முயற்சியில் அவளுடைய கால்கள் தடுமாறின. மறுகணத்தில் அவள் மரக்கிளைக்கும் நதி வெள்ளத்துக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கையை மட்டும் வானதியின் இரு கரங்களும் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தன.

மரத்தின் வேர்களுக்கு மத்தியில் கிடந்த முதலை வெளிப் புறப்படுவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. இப்போது அது வெளி வந்துவிட்டது.

மரக் கிளையிலிருந்து தொங்கிய உருவத்தைப் பார்த்துவிட்டு, வாயை மறுபடியும் அகலமாகத் திறந்தது.

பூங்குழலியின் உடலும் உயிரும் ஊசலாடிக் கொண்டிருந்தன.

வானதியின் மெல்லிய கரங்கள் பூங்குழலியின் வைர உடலின் கனத்தினால் இற்று விழுந்து விடும் போலிருந்தன. அவளுடைய உள்ளமோ எந்தக் கணத்தில் பூங்குழலி தன் கையிலிருந்து நழுவி முதலையின் வாயில் விழுந்து விடுவாளோ என்ற எண்ணத்தினால் துடிதுடித்தது.

அத்தகைய விபத்து நேர்ந்து விட்டால், பிறகு இளவரசரின் முகத்தை அவள் ஏறிட்டுப் பார்க்கவே முடியாது. பூங்குழலி விழும்போது அவளும்கூட விழுந்து உயிரை விட்டு விடுவதே மேலானது. அப்படித்தான் செய்ய வேண்டும்.

அதோ யானை நெருங்கி வந்து விட்டது. இளவரசர் அதன்மேல் வருகிறார். அவர் வந்து காப்பாற்றும் வரையில், பூங்குழலியை விட்டு விடாமலிருக்க இந்தக் கரங்களில் சக்தி இருக்குமா...?

யானை ஆற்றங்கரையில் வந்து மரத்தடியில் நின்றது. மறுபடியும் ஒரு தடவை பிளிறியது. அந்தச் சத்தத்தைக் கேட்டு முதலை அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தது. என்ன நினைத்துக் கொண்டதோ என்னமோ, மறுபடியும் மரத்தின் வேர்களுக்கு மத்தியில் சென்று படுத்துக்கொண்டது.

வானதியும் மரக்கிளையின் மீது குனிந்த வண்ணம் யானையை பார்த்தாள். அதன் மேலிருந்தவரையும் பார்த்தாள். ஆம்; அவர் இளவரசர்தான்! பொன்னியின் செல்வர்தான்!

"யானைப்பாகா! யானைப்பாகா! அன்றொரு நாள் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றியதுபோல் இன்றைக்கு இந்தப் பேதைப் பெண்களைக் காப்பாற்று!" என்று தனக்கு மட்டும் கேட்கக் கூடிய மெல்லிய குரலில் கூறிக் கொண்டாள்.

முடியாது; இனி இந்த ஓடக்காரப் பெண்ணைத் தாங்கமுடியாது!

இனி ஒரு நிமிஷம் தாமதித்தாலும் தோள் பட்டைகளிலிருந்து கைகள் தனியாகப் பிய்ந்து விழுந்து விடும்!

அப்பப்பா! இவள் பெயர் பூங்குழலி! ஆனால் என்ன கனம் கனக்கிறாள்? இரும்பினால் செய்த உடம்பு போல அல்லவா இருக்கிறது!

யானைப்பாகா! யானைப்பாகா! சீக்கிரம் வர மாட்டாயா?...

பூங்குழலி 'கிறீச்' என்று கத்தினாள். அதைக் கேட்ட வானதி அவளை முதலை பிடித்துக்கொண்டதாக எண்ணினாள். சொல்ல முடியாத பயங்கரம் அவள் மனத்தில் குடிகொண்டது. கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

அவளுடைய கைகளைப் பிடித்துக்

கீழ் நோக்கி இழுத்துக்கொண்டிருந்த கனம் மேலும் அதிகமாயிற்று.

முதலைதான் பூங்குழலியைப் பிடித்து இழுப்பதாக எண்ணிக் கண்ணை மூடிய வண்ணம் இவளை இன்னும் கெட்டியாகப் பிடித்து மேலே தூக்க முயன்றாள்.

"கையை விடு! வானதி! கையை விடு!" என்று செவியில் அமுதென ஒலித்த இளவரசரின் குரல் கேட்டது.

இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் கையை விட்டாள்.

அவளுடைய தோள்களைப் பிய்த்து இழுத்த பாரம் நீங்கியது.

கண்களைத் திறந்து பார்த்தாள்.

பூங்குழலியைக் கஜேந்திரன் துதிக்கையினால் சுழற்றிப் பற்றி எடுத்துக் கரையிலே இறக்கி விடுவதைக் கண்டாள்.

பூங்குழலியின் கண்கள் மூடியிருந்தன. யானைத் துதிக்கை அவள்மீது சுற்றியபோதுதான் அவள் அவ்வாறு 'கிறீச்' சிட்டுக் கத்தியிருக்க வேண்டும்.

அதேமாதிரி தானும் ஒரு தடவை கத்திவிட்டு மூர்ச்சையடைந்தது வானதிக்கு நினைவு வந்தது.

இப்போது அதைக் காட்டிலும் பன்மடங்கு அபாயகரமான நிலைமையாயிருந்ததும், தான் பயப்படாமலும் பிரக்ஞை இழக்காமலும் இருப்பதை நினைக்க அவளுக்கே வியப்பாயிருந்தது.

தன்னுடைய தைரியத்தைப் பார்த்து மெச்சிப் பாராட்ட இளையபிராட்டி இங்கே இல்லையே? ஆயினும் பாதகமில்லை. எப்படியும் ஒருநாள் அவருக்குத் தெரியாமற் போகாது. இப்போது என்னுடைய கதி என்ன? பூங்குழலியை மட்டும் அழைத்துக்கொண்டு என்னை இந்த மரத்தின் மேலேயே விட்டு விட்டு இளவரசர் போய் விடுவாரா?

அவ்விதம் அவர் செய்தால் அது என்னுடைய அசட்டுத்தனத்துக்குச் சரியான தண்டனையாகத்தான் இருக்கும்!

இல்லை, இல்லை! கஜராஜனின் துதிக்கை மறுபடியும் அவளை நோக்கி நீண்டுகொண்டு வந்தது.

வானதி மீண்டும் ஒருதடவை கண்களை மூடிக்கொண்டாள்.

மறுகணம் அவள் மரக்கிளையிலிருந்து தூக்கப்பட்டுக் கெட்டியான தரையில் விடப்பட்டதை உணர்ந்தாள்.

கண் விழித்துப் பார்த்தபோது தான் நதிக்கரையில் பூங்குழலிக்கு அருகில் நிற்பதைக் கண்டாள்.

தன்னை அறியாமல் எழுந்த அன்புடனும் ஆர்வத்துடனும் அந்த ஓடக்காரப் பெண்ணைக் கட்டித் தழுவிக் கொண்டாள்.

பூங்குழலி கண்களில் நீர் ததும்ப, தழுதழுத்த குரலில், "இளவரசி! இன்று என் உயிரைக் காப்பாற்றினீர்கள். நான் உங்களை நதி வெள்ளத்தில் முழுகிப் போகாமல் காப்பாற்றி அழைத்துப் போக வந்தேன். அதற்கு மாறாக நீங்கள் என்னை முதலை வாயிலிருந்து காப்பாற்றினீர்கள். இந்த நன்றியை என்றும் மறக்க மாட்டேன்" என்றாள்.

"பூங்குழலி! நானா உன்னைக் காப்பாற்றினேன்? உன்னையும் என்னையும் அந்த யானைப்பாகன் அல்லவா காப்பாற்றினார்? அவரிடம் உன் நன்றியைக் கூறு!" என்றாள் வானதி.

"என் உயிர்மேல் எனக்கு அவ்வளவாக ஆசை ஒன்றுமில்லை. ஆனால் என் அத்தை அவளுடைய செல்வப் புதல்வரிடம் ஓர் அவசரச் செய்தி சொல்லும்படி என்னை அனுப்பினாள். அதைச் சொல்லுவதற்கு முன்னால் நான் செத்துப் போக விரும்பவில்லை!" என்றாள் பூங்குழலி.

யானையின் மேலிருந்தவரை வானதி நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ ஒரு விஷம குதூகலம் அவளை அச்சமயம் பற்றிக் கொண்டிருந்தது.

"யானைப் பாகா! யானைப் பாகா! எங்களை உன் யானைமேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?" என்று கேட்டு விட்டுக் கலீர் என்று சிரித்தாள்.

### இருபத்து இரண்டாம் அத்தியாயம்

## மகிழ்ச்சியும் துயரமும்

வானதியின் சிரிப்பொலியுடன் கலந்து வார்த்தைகளைக் கேட்டு விட்டு, இளவரசரும் சிரித்துக்கொண்டே யானையின் மேலிருந்து கீழிறங்கினார்.

''ஆகா! யானை ஏற்றம் என்பது மிகவும் கடினமான காரியம். இராஜ்ய சிம்மாசனத்தில் ஏறுவது போலத்தான். யானைமேல் ஏறுவதும் கஷ்டம்; அதன் மேல் உட்கார்ந்திருப்பதும் கஷ்டம்; யானை மேலிருந்து இறங்குவது எல்லாவற்றையும் விடக் கஷ்டம். ஆயினும், அந்தக் கஷ்டங்களையும் சில சமயம் ஒருவன் அநுபவிக்க வேண்டியிருக்கிறது!'' என்றார் பொன்னியின் செல்வர்.

''சிலர் அந்தக் கஷ்டத்தை மிக அற்பமான காரணங்களுக்காகக்கூட அநுபவிக்கிறார்கள். பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காக யானை மேல் ஏறிக் கொண்டு ஓடி வருகிறவர்களும் உண்டு!'' என்றாள் வானதி.

''அந்தச் சம்பவம் உனக்கு இன்னும் நினைவு இருக்கிறதா, வானதி! நீ அதைப் பற்றி இன்றுவரை பேச்சே எடுக்காததினால் மறந்து விட்டாயோ என்று எண்ணினேன்!'' என்றார் இளவரசர்.

''உலகெல்லாம் சுற்றி அலைந்து அநேக வீரச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் மறந்து விடுவார்கள். அரண்மனையிலேயே இருக்கும் பேதைப் பெண்ணுக்கு அதை ஞாபகம் வைத்துக் கொள்வதை விட வேறு என்ன வேலை? தாங்கள் அன்றைக்கு யானை மேல் ஏறிக்கொண்டு வந்ததும் நினைவிருக்கிறது. நான் கொடும்பாளூர்ப் பெண் என்று சொன்னதும் தாங்கள் முகத்தைச் சுருக்கிக் கொண்டு திரும்பிப் போனதும் நினைவில் இருக்கிறது!''

''அதற்கு அப்போது காரணம் இருந்தது, வானதி!''

''அந்தக் காரணம் இப்போதும் இருக்கிறது, ஐயா! தாங்கள் உலகமாளும் சக்கரவர்த்தியின் புதல்வர்; சோழ வளநாட்டின் கண்ணின் மணி போன்ற பொன்னியின் செல்வர். நானோ பொட்டைக் காட்டுப் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்தவள். சிற்றரசர் குலமகள்; அதிலும், போரில் இறந்து போனவருடைய அநாதை மகள்...!''

''வானதி! நீ எனக்கு அநீதி செய்கிறாய்! நியாயம் அற்ற வார்த்தை கூறுகிறாய்! போனால் போகட்டும்! நான் தஞ்சைக்கு அவசரமாகப் போக வேண்டும்! சீக்கிரம் சொல்! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? தனியாக ஏன் வந்தாய்? ஓட்டுக்கூரை மேல் மிதந்து வந்தாயாமே? இந்தப் பெண் இங்கே எதற்காக வந்தாள்? எப்படி இத்தகைய பிராணாபத்தில் சிக்கிக் கொண்டாள்...?''

''நான் ஒருத்தி இங்கே நின்று கொண்டிருப்பது தங்களுக்கு ஞாபகம் வந்தது பற்றிச் சந்தோஷம். ஒரு நிமிஷம் தனியாகப் பேச அவகாசம் கொடுத்தால் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டுப் போயே போய் விடுவேன்!'' என்றாள் பூங்குழலி.

அந்த இரண்டு பெண்களும் அச்சமயம் இளவரசரின் முன்னால் நெருக்கு நேர் நின்ற போது, எப்படியோ அவர்களுக்கு அசாதாரண தைரியமும் வாசாலகமும் ஏற்பட்டிருந்தன.

''சமுத்திர குமாரி! உன்னை மறந்து விட்டேன் என்றா நினைத்தாய்? அது எப்படி முடியும்? நீதான் நான் கூப்பிடக் கூப்பிட, நின்றுகூடப் பதில் சொல்லாமல் படகைச் செலுத்திக்கொண்டு வந்தாய்! அப்படி அவசரமாக வந்தவள்



மரக் கிளைக்கும் முதலையின் திறந்த வாய்க்கும் நடுவில் நின்று ஊஞ்சலாடிக் கொண்டிருந்ததை என் ஆயுள் உள்ளளவும் மறக்க முடியாது!'' என்று சொல்லி விட்டு இளவரசர் சிரித்தார்.

''உன்னைத் தூக்க முடியாமல் தூக்கிப் பிடித்துக்கொண்டு வானதி பட்டுக் கொண்டிருந்த அவஸ்தையையும் நான் மறக்க முடியாது. ஆனால் நீங்கள் இருவரும் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்? எதற்காக? யாராவது ஒருவர் சீக்கிரம் சொல்லுங்கள்!''





''பொன்னியின் செல்வ! நானும் தங்கள் திருத்தமக்கையாரும் தங்களை வழியில் கண்டு நிறுத்தித் தஞ்சாவூருக்குப் போவதைத் தடை செய்வதற்காக வந்தோம். தாங்கள் தற்சமயம் தஞ்சாவூர் வந்தால், அங்கே பெரிய யுத்தம் மூளும் என்று இளையபிராட்டி அஞ்சுகிறார். அதற்கு முன்னால் தங்களைச் சந்தித்துப் பேச விரும்புகிறார்...''

"இளையபிராட்டி இப்போது எங்கே?"

''குடந்தையில் இருக்கிறார்...''

"நீ மட்டும் எப்படி இங்கே வந்தாய்?"

"வழியில் குடந்தை ஜோதிடர் வீட்டில் நானும் இளையபிராட்டியும் சிறிது நேரம் தங்கினோம். அந்தச்சமயத்தில் காவேரி கரையை உடைத்துக்கொண்டு வந்து ஜோதிடர் வீட்டையே அடித்துக் கொண்டு வந்துவிட்டது. இளவரசே! காவேரித் தாய் தங்களைக் குழந்தைப் பிராயத்தில் காப்பாற்றியதாகச் சொல்கிறார்கள். தங்களுக்கு இந்தப் பொன்னி நதியின் பேரில் எவ்வளவோ ஆசை உண்டு என்பதையும் அறிவேன். ஆனால் இன்று இந்த நதியினால் நாடு நகரங்களும் மக்கள் மிருகங்களும் பட்ட கஷ்டத்தை நினைப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது. காவேரித் தாய் மிகக் கொடுமையானவள் என்று சொல்லத் தோன்றுகிறது...''

''வானதி! காவேரி அன்னையின் பேரில் அப்படிப் பழி சொல்லாதே! இந்த மாதரசிக்கு எங்கள் சோழ நாட்டின் பேரில் அவ்வளவு ஆசை. அந்த ஆசை வரம்பு மீறிப் போகும்போது கரையை உடைத்துக்கொண்டு கிளம்பி விடுகிறாள். இதை அறியாதவர்கள் அன்னையின் பேரில் வீண் பழி சொல்லுகிறார்கள்! ஏன்? கரையை மீறிக்கெண்டு வருவதற்காகச் சமுத்திர ராஜன் பேரில் கூடச் சிலர் குறை சொல்லுகிறார்கள். ஆனால் பூங்குழலி அப்படிக் கடலரசன் பேரில் குறை சொல்ல மாட்டாள்!'' என்றார் இளவரசர்.

''மன்னியுங்கள்! நானும் இனிக் காவேரி அன்னையின் பேரில் குற்றம் சொல்லவில்லை. நானும் தங்கள் தமக்கையும் குடந்தை ஜோதிடர் வீட்டில் இருந்தபோது திடீரென்று காவேரியின் ஆசை பொங்கிப் பெருகிவிட்டது. தங்கள் தமக்கை முதலியவர்கள் ஓடிப் போய் கோவில் மண்டபத்தின் பேரில் ஏறிக் கொண்டார்கள். நான் என் அசட்டுத் தனத்தினால் மண்டபத்தின் பேரில் ஏறத் தவறிவிட்டேன். ஜோதிடர் வீட்டு ஓட்டுக் கூரையைப் பிடித்துக்கொண்டு மிதந்து வந்தேன்...''

''உன்னைக் காப்பாற்றுவதற்காகப் பூங்குழலி படகில் ஏறிக்கொண்டு வந்தாளாக்கும். அழகாய்த்தானிருக்கிறது! உங்கள் இருவரையும் சேர்த்து இந்தக் கஜேந்திரன் காப்பாற்ற வேண்டியதாயிற்று. இந்த யானையின் அறிவே அறிவு! உங்கள் இருவரையும் அதன் துதிக்கையில் பூமாலையை எடுப்பது போல் அசங்காமல் கசங்காமல் எடுத்து சற்று முன் கரையில் விட்டது! இன்று காலையில் இதே யானை கையில் அங்குசத்துடன் நேரங் கழித்து ஓடி வந்த யானைப் பாகனைத் தூக்கிச் சுழற்றி வெகு தூரத்தில் போய் விழும்படி எறிந்தது! அவன் உயிர் பிழைத்திருப்பதே துர்லபம்!''

''ஐயோ! அது என்ன? நானே தங்களிடத்தில் அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்றிருந்தேன்...''

''என்னை நீ என்ன கேட்க வேண்டுமென்றிருந்தாய்?''

''யானைப் பாகனாலும் அங்குசத்தினாலும் தங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்ததா என்று கேட்க விரும்பினேன்.''

''தீங்கு நேர இருந்தது என்பது உண்மைதான்; அது உனக்கு எப்படித் தெரிந்தது? ஜோதிடர் சொன்னாரா, என்ன? அந்தப் பித்து இளைய பிராட்டிக்கு இன்னும் போகவில்லையா?''

''ஜோதிடர் சொல்லவில்லை! சொன்னாலும் நாங்கள் நம்பியிருக்க மாட்டோம். பெரிய பழுவேட்டரையர் சொன்னார்!''

''என்ன? என்ன? யார் சொன்னார்?''

''ஆம். இளவரசே! தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர்தான் சொன்னார்.

நாங்கள் ஜோதிடர் வீட்டில் இருந்த போது திடும் பிரவேசமாக அவர் உள்ளே நுழைந்து வந்தார். தங்களுக்கு வரக் கூடிய ஆபத்தைப் பற்றிச் சொன்னார். விஷந் தடவிய அங்குசத்தைப் பற்றியும் சொன்னார்...!''

"ஆகா! இது பெரிய அதிசயந்தான்! அவருக்கு எவ்விதம் தெரிந்தது? அவரும் ஜோதிடர் ஆகிவிட்டாரா? அல்லது ஒரு வேளை... எல்லாரும் சொல்லுவது போல் அவரே இந்த ஏற்பாடு செய்தாரா?"

"இல்லை, இளவரசே! அவர் செய்த ஏற்பாடல்ல. பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டதினால் அறிந்துகொண்டாராம்...!''

"ஓகோ! இன்னும் ஏதாவது அவர் சொன்னாரா?''

''நினைப்பதற்கும் சொல்வதற்கும் பயங்கரமாயிருக்கிறது. தங்களையும் தங்கள் தந்தையையும் மூத்த இளவரசரான ஆதித்த கரிகாலரையும் ஒரே நாளில் யமனுலகம் அனுப்ப அந்தச் சதிகாரர்கள் திட்டமிட்டிருப்பதாகச் சொன்னார். அவர் ஆதித்த கரிகாலரைக் காப்பாற்றுவதற்காகக் கடம்பூருக்கு விரைந்து போய்விட்டார். தங்களுக்கும் சக்கரவர்த்திக்கும் இளைய பிராட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதாகச் சொல்லி விட்டுப் போனார்...''

"ஆகா! அவருடைய எச்சரிக்கை என் ஒருவன் விஷயத்தில் உண்மையாயிருந்தபடியால் மற்றவர்கள் விஷயத்திலும் உண்மையாகத்தானிருக்க வேண்டும்...! சமுத்திர குமாரி! நீ ஏதோ சொல்ல வேண்டும் என்றாயே?"

''ஆம், இளவரசே! ஈழத்து ஊமை ராணி தங்களை உடனே தஞ்சைக்கு அழைத்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார்...''

''ஆகா! அதைப் பற்றி உன்னிடம் கேட்க மறந்தே போனேன். ஈழத்து ராணிக்காகவே நான் இவ்வளவு அவசரமாகப் புறப்பட்டு வந்தேன். அவரைத் தஞ்சாவூருக்கு யாரோ பல வந்தமாகக் கட்டி இழுத்து வந்தார்களாமே? அது உண்மையா?"

''உண்மைதான், ஐயா! ஆனால் முதன்மந்திரி அநிருத்தர் நல்ல நோக்கத்துடனேதான் அவ்விதம் செய்தார்...''

"ஓகோ! அநிருத்தர் வேலையா? என் தந்தையிடம் சேர்ப்பிப்பதற்காக அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பூங்குழலி! முதன்மந்திரியின் நோக்கம் வெற்றி பெற்றதா? அவர்கள்... சக்கரவர்த்தியும் ஈழத்து ராணியும் சந்தித்தார்களா?"

"ஆம், சந்தித்தார்கள்!''

"என் வாழ்க்கை மனோரதம் நிறைவேறி விட்டது. இதைக் காட்டிலும் சந்தோஷமான செய்தி எனக்கு வேறு எதுவும் இல்லை. என் பெரியன்னை அருகில் இருக்கும் வரையில் என் தந்தையின் உயிருக்கு அபாயமும் இல்லை. அந்த மாதரசிக்கு அபூர்வமான வருங்கால திருஷ்டி உண்டு என்பது உனக்குத் தெரியுமே, பூங்குழலி!"

"ஆம், எனக்கு அது தெரியும்! ஈழத்து ராணி இருக்கும் வரையில் சக்கரவர்த்திக்கு அபாயம் இல்லை. ஆனால்...!"

''ஆனால் என்ன? ஏன் தயங்கி நிற்கிறாய், சமுத்திரகுமாரி!''

"சொல்லத் தயக்கமாகவே இருக்கிறது. நா எழவில்லை. ஈழத்து ராணி தம்முடைய இறுதிக்காலம் நெருங்கி விட்டதாக எண்ணுகிறார். கடைசியாகக் கண் மூடுவதற்கு முன்னால் தங்களை ஒருமுறை பார்க்க விரும்புகிறார்!'' என்றாள்.

"தெய்வமே! இது என்ன சொல்லுகிறாய்? சந்தோஷமான செய்தியைச் சொல்லிவிட்டு உடனே இந்தப் பேரிடி போன்ற செய்தியையும் சொல்லுகிறாயே! இனி நான் ஒரு கணமும் தாமதிப்பதற்கில்லை. வானதி! இளையபிராட்டியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லு!" என்றார் இளவரசர் அருள்மொழிவர்மர்.

(தொடரும்)

எங்களிடம் ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறும்
அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

# P.R. JEWELLERY

**GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES**
**102, USMAN ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.**
**PH: 434 4442, 432 7764 TUESDAY HOLIDAY**

**P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-**

**(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)**

*குறிப்பு: எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். ஒரிஜினல் கல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.*

---

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. எனக்கு 20 வருட அனுபவம் உள்ளது. P.R. ஜுவல்லரி நிறுவனம் தொடங்கி 13 ஆண்டுகள் ஆகிறது. எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். ஆர்டரின் பேரில் வைர நகைகள், தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், ராசிக்கல் மோதிரங்கள் சிறந்த முறையில் செய்து தருகிறோம். பரிசுப் பொருட்கள் ரூ. 50 முதல் ரூ. 10,000 வரை கிடைக்கும். அனைத்து ராசிக் கற்களும், ஸ்படிக மாலைகள், ஸ்படிக விநாயகர், ஸ்படிக லிங்கம், பவழ விநாயகர், பவழ மாலைகள், முத்து மாலைகள் அனைத்தும் கிடைக்கும்.

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், இரத்தினங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 5 வருடமாக அனைவரும் ராசிக்கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப்படியும், நடப்பு திசைப்படியும், எண் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக, நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுதும், வீட்டில் நடைபெறும் ஹோமங்களின் போதும் ஜென்ம நட்சத்திரம், இராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால், அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. இது 9 கிரகங்களின் பலனைத் தரும். 6 கிராம் தங்கத்தில் 5 CENT வைரம் வைத்து நவரத்தின மோதிரம் ரூ. 6,250/-

| ராசி | ராசி மோதிரம் | விலை விவரம் |
|---|---|---|
| மேஷ ராசி, விருச்சிக ராசி | 2 CARAT பவழம் வைத்து வெள்ளி மோதிரம் | ரூ. 400/- |
| ரிஷப ராசி, துலாம் ராசி | 5 CENT வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில் | ரூ. 4250/- |
| ரிஷப ராசி, துலாம் ராசி | 5 CENT வைரம் வைத்து வெள்ளி மோதிரம் | ரூ. 2250/- |
| மிதுன ராசி, கன்னி ராசி | 20 CENT மரகதப் பச்சை வெள்ளி மோதிரம் | ரூ. 400/- |
| கடக ராசி | 2 CARAT முத்து வைத்து வெள்ளி மோதிரம் | ரூ. 400/- |
| சிம்ம ராசி | 20 CENT மாணிக்கம் வைத்து வெள்ளி மோதிரம் | ரூ. 400/- |
| தனுசு ராசி, மீனராசி | 1 CARAT புஷ்பராகம் வைத்து 4 கிராம் தங்கத்தில் | ரூ. 2300/- |
| தனுசு ராசி, மீனராசி | ½ CARAT கனக புஷ்பராகம் வைத்து 4 கிராம் தங்கத்தில் | ரூ. 3000/- |
| தனுசு ராசி, மீனராசி | 1 CARAT புஷ்பராகம் வைத்து வெள்ளியில் | ரூ. 400/- |
| தனுசு ராசி, மீனராசி | 25 CENT கனக புஷ்பராகம் வைத்து | ரூ. 500/- |
| மகர ராசி, கும்ப ராசி | 20 CENT நீலம் வைத்து வெள்ளி மோதிரம் | ரூ. 400/- |

அனைவரும் அணியக் கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம். விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபகசக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றி பெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, நேரம், ஊர் ஆகியவற்றைக் கொண்டு வந்தால் கம்ப்யூட்டர் மூலம் ஜாதகம் கணித்து தருகிறோம். கட்டணம் ரூ. 50/- தபால் மூலம் ஜாதகம் பெற பதிவுத் தபால் கட்டணம் ரூ. 20/- சேர்த்து ரூ. 70/-க்கு D.D. (OR) M.O. அனுப்பவும். தபால் மூலம் ராசிக்கல் மோதிரம் பெற மோதிரம் ரூ. 400/- இன்சூர் பதிவுத் தபால் ரூ. 50/- சேர்த்து ரூ. 450/-க்கு D.D. (OR) M.O. அனுப்பவும். மெலிதான கம்பியில் அளவு அனுப்பவும். முகவரி தெளிவாக பின் கோடுடன் எழுதவும்.

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ரூ. 400/-க்கு ராசிக் கல் மோதிரம் வாங்கிப் பயன்பெறுங்கள். நாங்கள் தரும் கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். தபால் எழுதினால் முழு விவர பாம்லெட் இலவசமாக அனுப்புகிறோம்.

**எமது சிறப்புப் பேட்டியை விஜய் டீவியில் திங்கள், புதன் காலை 9.00 மணிக்கும் ஜெயா டீவியில் வியாழக்கிழமை மாலை 6.30 to 7.00 மணிக்கும் காணத் தவறாதீர்கள்.**

பல வாடிக்கையாளர்கள் பணம் அனுப்பிவிட்டு முகவரி எழுதுவது இல்லை. முகவரி இல்லாமல் எங்களால் தொடர்பு கொள்ள முடியாது. முகவரி தெளிவாக எழுதவும்.

**WE ACCEPT MASTER CARD/VISA CARDS**

ADVT.



# ஐ.ஏ.எஸ். பதவியைத் தூக்கியெறிந்தவர்!

கிராமங்களில் நடக்கும் பல வளர்ச்சிப் பணிகளில் பணிபுரியும் மக்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கூட கொடுக்காமல் டபாய்த்து விடுவார்கள் காண்ட்ராக்டர்கள். இவ்வளவு ஊதியம் கொடுக்கப்படும் என்று அதிகத் தொகையை மதிப்பீட்டில் காண்பிப்பார்கள். ஆனால் உண்மையில் கொடுப்பதோ அதில் பாதி கூட இருக்காது. இந்த அநியாயத்தை எதிர்த்துப் போராடும் தைரியம் இல்லாமல் உழைத்து உருகிப் போவார்கள் கிராம மக்கள். பூனைக்கு மணிகட்டுவது யார்? என்ற கேள்விக்கு விடையாக ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஆஜ்மிக் மாவட்டத்தில் தோன்றியது தான் மஸ்தூர் கியான் சக்தி சங்கதன் என்ற அமைப்பு.

பணிகள் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளைப் பெற்று, மக்கள் சபையைக் கூட்டி, கணக்கு வழக்குகளைப் படித்துக் காட்டத் துவங்கியது இந்த அமைப்பு. அரசியல்வாதிகள் + அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளை மக்களுக்குப் பளிச்சென்று தெரிந்தது. அனுமதிப்பார்களா அவர்கள். 'அரசு தஸ்தாவேஜுகள் கொடுக்கப்படமாட்டது' என்று அறிவித்தார்கள். "தகவல் பெறுவது எங்கள் உரிமை. அதில் தடை ஏதும் இருந்தால் தகர்த்தெறிவோம்" என்று போராடத் துவங்கினார்கள். அரசு பணிந்தது. தகவல் பெறும் உரிமை சட்டமாக்கப்பட்டது. இப்போது பணிகள் தரமாக இருக்கின்றன. இந்தச் சாதனைகளுக்குச் சக்தி சங்கதன் உரிமை கொண்டாடினாலும், பின்னால் உந்து சக்தியாக இருந்தவர் - இருப்பவர் அருணா ராய். அருணா நம் தமிழ் நாட்டுக்காரர்தான். கலா க்ஷேத்திராவில் படித்தவர். தில்லி பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது பங்கர்ராய் என்பவரைக் காதலித்து கைப்பிடித்ததால் அருணா ராய் ஆனார். அருணா ராய்க்கு இந்த வருடம் ரமான் மக்ஸேஸே விருது கிடைத்திருப்பதில் தமிழகமும் பெருமைப்படலாம். (இவ்விருதைப் பெறும் மற்றொரு நபர் ஜாக்கின் அற்புதம்) தகவல் பெறும் உரிமையைப் போராடி பெற்றதால் தான் இந்த விருது.

சமுதாயத்துக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் ஐ.ஏ.எஸ். பணியில் சேர்ந்தால் செய்ய முடியும் என்று கனவு கண்டார் அருணா. அரசியில்வாதிகள் கையில் மாட்டிக் கொண்டு நிர்வாகம் படும்பாட்டை கண்டு மனம் நொந்தார்.

இது நமக்கு ஒத்து வராது என்று 1976ல் ஐ.ஏ.எஸ். பணியைத் தூக்கியெறிந்துவிட்டுச் சமூக சேவையில் இறங்கி விட்டார். கணவர் பங்கர் ராய் ஏற்கெனவே அது போன்ற பணியில் இறங்கியிருந்தது மிகவும் சௌகரியமாகப் போய்விட்டது.

இன்று ராஜஸ்தானில் மஸ்தூர் கியான் சக்தி சங்கதன் அமைப்பு கிராமப் புறங்களில் மிகவும் பிரபலம். மாநிலம் முழுவதும் இருந்து கிராம மக்கள் அருணாவிடம் தங்கள் கிராமத்திலும் சங்கதன் தன் பணியைத் துவங்க வேண்டும் என்று அன்புக் கட்டளையிடுகிறார்கள். தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்ப்பவர்களில் அருணாவும் ஒருவராகி விட்டார்.

- ரமா

# "நல்லகாலம் (எங்களுக்கு) பொறக்குது!"



• கை பார்க்கும் சிறுவன்

"நல்ல காலம் பொறக்குது... நல்ல காலம் பொறக்குது" எனச் சொல்லி கிராமப்புற வீதிகளில் (இப்போதெல்லாம் நகர்ப்புறங் களுக்கு நல்லகாலம் இல்லை போலும்!) வலம் வரும் குடுகுடுப் பைக்காரர்களின் பூர்வீக இருப் பீடம் எங்கே தெரியுமா?

தொட்டியம் அருகே அரங்கூர், நாமக்கல் அருகே கொசவம்பட்டி, திருச்செங்கோடு அருகே ஆண்டி வலசு ஆகிய கிராமங்கள்தான்.

சாமக்கோடங்கிகள் எனச் சொல்லப்படும் இவர்களது மண் ணுக்குச் சென்று வந்தோம்.

தொட்டியத்திலிருந்து நான்கு கி.மீ. தூரத்தில் உள்ளது அரங்கூர் கிராமம். பேருந்தை விட்டிறங்கியதும் தொட்டியத்தில் விசாரித்துப் பார்த்தோம்.

"உங்க ஊர்ப்பக்கம் வந்து மரத்தடியில பொங்கித்தின்னுட்டு, வெட்ட வெளில படுத்துத் தூங்கிட்டு, 'டானிக்' மாதிரி நாலு வார்த்தைய அள்ளிவுட்டுட்டு வர்ற இவுங்களப் பாக்க வந்திருக்கீங்களா? கஷ்டமான வேலவெட்டிப் பாக்குற ஆளுங்க கூட அந்தளவுக்கு வசதி வாய்ப்பா வாழ முடியாதுங்க. போய்ப் பாருங்க தெரி யும்!'" என்று நம்மை மேலும் தூண்டி விட்டது, தொட்டியவாசிகளின் பேச்சு.

தொட்டியம், மருதையாசுவாமி கோயில் திடலில் தென்னை மரங்களுக்குக் கீழே ஏழெட்டு டெண்ட்டுகள். கோயில் மண்ட பத்தில் கொஞ்சம் குடும்பங்கள். வானமே கூரையாக அரச மரத்தடியில் ஆறேழு குடும்பத்து உறுப்பினர்கள் சிதறிக் கிடக்கிறார்கள் சோனப்பொரி போல.

அதில் பெரிய குடும்பியாகத் தென்பட்ட சாமியப்பனைச் சந்தித்தோம். அவருக்கு இரண்டு மனைவிகள். எட்டுக் குழந்தைகள்.

"தமிழ்நாட்ல எல்லா ஊருக்கும் குடும்பத் தோட சுத்திட்டு வந்திருக்கோம்ங்க. வருமா னம்னு வச்சிகிட்டா கிராமத்துப் பக்கம்



அரிசி, புளி, மிளகா கெடைக்கும்ங்க. பணம் காசெல்லாம் டவுனுப்பக்கம்தான். போன வாரம் டவுன்ல ஒரு ஏட்டய்யாகிட்டயே ஆயிரம் ரூபா வாங்கிட்டு வந்திட்டேன்னா பாத்துக்கங்களேன். சாமக்கோடங்கியடிச்சி அவுரு குடும்பத்துல நடந்ததெல்லாம் புட்டுப் புட்டு நான் சொல்லவும், ஏட்டய்யா அப்படியே பிரமிச்சிப் போய்ட்டாங்க!"

"சரி. அந்த வருமானத்தையெல்லாம் என்ன செய்றீங்க?"

"திருச்செங்கோடு, ஆண்டிவலசல எங்களுக்கு ஒரு சால வூடு (சுற்றிலும் கீற்றுத் தடுப்புகளால் ஆனது) இருக்குங்க. அந்த ஊர்ல ஒவ்வொரு தமிழ் மாசப் பொறப்பன்னிக்கி எங்க ஆளுங்களுக்குள்ளே ஏலச்சீட்டு நடக்குதுங்க- அதுல ஒரு லட்ச ரூபா ஏலச்சீட்டு ரெண்டு கட்டிட்டு வர்றேங்க. ஒரு சீட்டு ரெண்டாயிரம் ரூபா. அம்பது மாசம். இதோட முப்பத்தாறு மாசம் முடியுதுங்க. சீட்டுப்பணம்கட்ட ஆண்டி வலசு போய்ட்டு வரணும். வரட்டுமாங்க!"




• சொந்த வீடு

சட்டென வேகமாய்க் கிளம்பிச் சென்ற சாமியப்பனைப் பார்த்து டவுன் ஏட்டய்யாவை விட அதிகமாய் பிரமித்துப் போனோம்.

**அ**ரங்கூர் கிராமத்தில் முன்னூறு வீடுகள். சரிவிகிதத்துக்கும் கீழே ஓட்டு வில்லை மற்றும் கொஞ்சமாய்க் குடிசை வீடுகள். மீதமெல்லாம் கான்கிரீட் கட்டடங்கள். அத்தனையும் குடுகுடுப்பைக்காரர்களுக்குச் சொந்தமானவை. பணம் சம்பாதித்து வாங்கியவை!

எழுத்து வடிவம் பெறாத தமிழ் கலந்த தெலுங்கு பாஷையில் பேசிக் கொள்கிறார்கள்.

"நாடாறு மாசம், காடாறு மாசம்னு எங்களுக்கு விதிக்கப்பட்டது. ஆறு மாசம் இந்த ஊர்ல இருப்போம். (மாசியிலிருந்து ஆடி வரை). ஆறு மாசம் வெளியூர்ல சுத்திட்டு இருப்போம். எங்களோட தாத்தாக்கள்லாம் சுடுகாட்டுல நடுராத்திரி பூஜை பண்ணிட்டு ஊருக்குள்ள வந்து வாக்கு சொல்லிட்டு வந்தவங்கதான். எங்க அப்பா காலத்



• கைக் குழந்தையுடன்...



துலயும் அதே தொடர்ந்திச்சி. பெரும்பாலும் இப்ப இளவயசு ஆளுங்க யாரும் சுடுகாட்டுப் பூஜையெல்லாம் செய்றது இல்லேங்க. எங்க வாக்குலேந்து வர்றத ஜனங்க நம்புறாங்க. செய்வினை, பில்லி சூனியம் வைக்கறது எங்க வேலை இல்லீங்க. ஆனா, நாங்க ஜக்கம்மா துணையால பரிகாரம் பண்ணி செய்வினைக் கோளாறுகளை சரி பண்ணிடுவோம்" என்கிறார் ராஜேந்திரன். அரங்கூர் கிராம, குடுகுடுப்பைக்காரர்களின் தலைவர் இவர்.

ஒரு அரசியல் கட்சித் தலைவரின் மினி பங்களாவைப் போலக் காட்சியளிக்கிறது இவரது வீடு. ("போட்டோ எடுக்காதீங்க") வரவேற்பறையில் மெத்தென்ற சோபாக்கள். அழகான மர பர்னிச்சர்கள். கலர் டீ.வி. வி.சி.ஆர். மற்றும் குளிர்ச்சாதனப் பெட்டி. வீடு முழுவதும் மொசைக் தரை. அனைத்தும் அத்தனை சுத்தமாக இருக்கின்றன. மரத்தடி வாழ் மனிதர்கள் இவர்களா என்று வியப்பு மேலிடுகிறது.



**''போனவாரம் உங்க ஆபிசில் லஞ்சம் வாங்கின ஒருவர் மாட்டிக்கிட்டாராமே?''**

**''அதான், இப்ப ஒரு பயிற்சி வகுப்பு ஆரம்பிச்சிருக்கோம். மாட்டிக்காம லஞ்சம் வாங்குவது எப்படின்னு!''**

**— கு. அருணாசலம்**

ராஜேந்திரனுக்கு மட்டும் பதினேழு ஏக்கர் வயல் இருப்பதாகத் தொட்டியத்தில் சொல்கிறார்கள்.

இத்தனை வாழ்க்கை வசதிகளை இங்கிருக்கும்போதுதான் அனுபவிக்கிறார்கள். தொழிலுக்கென்று வெளியே வந்து விட்டால் அத்தனையும் துறந்து விடுகிறார்கள்.

காவிரியாற்றுக் கிளை வாய்க்கால் பாசனம். வாழை, தென்னை, செந்நெல் என்று வளமான விவசாயம். பெரும்பாலோர்க்கும் கணிசமான அளவில் சொந்த வயல்கள் இருக்கின்றன. பக்கத்து ஊர்க்காரர்களிடம் தற்காலிகக் குத்தகைக்கு விட்டு வருமானம் வந்து சேர்கிறது.

தமிழகத்தில் மட்டும்தான் இவர்களது 'ஜெய் ஜக்கம்மா சாம்ராஜ்யம்' என்று எண்ணிவிட முடியாது. இந்தியாவில் தமிழர்கள் எங்கெல்லாம் அதிக அளவில் வசிக்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று வருகிறார்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்பாக ராஜேந்திரன் தன் குடும்பத்தாருடன் சென்று வந்தது மும்பை மாநகரின் மட்டுங்கா, செம்பூர், சயான் ஆகிய பகுதிகளுக்கு.

அரங்கூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சின்ன அப்பாய். வயது அறுபது. அரசு உத்தியோகம் போல இரண்டாண்டுகளுக்கு முன்பாக இந்தத் தொழிலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதாகக் கூறுகிறார்! குடுகுடுப்பைத் தொழிலில் அவர் கடைசியாகச் சென்று வந்த இடம் டெல்லியில் கரோல் பாக் மற்றும் சுல்தான்பூர். சின்ன அப்பாய்க்கு அழகிய மாடி வீடு இருக்கிறது. இருபது ஏக்கர் வயல் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

பலரது வீட்டு வாசல்களில் டி.வி.எஸ். ஃபிப்டிகளும், சுஸுகி மோட்டார் சைக்கிள்களும் நின்று கொண்டிருக்கின்றன. குடுகுடுப்பைக்காரர்கள் தங்கள் இல்லத்தரசிகளுடன் ஊருக்குள்ளே டி.வி.எஸ்.50ல் பறந்து கொண்டிருக்கிறார்கள். வளமான வாழ்வின் மலர்ச்சி அவர்களது மலர்ந்த முகங்களில் தெரிகிறது.

தங்களது பொருளாதார வளர்ச்சி வெளியுலகுக்குத் தெரிய வேண்டாமென அடக்கி வாசிக்கிறார்கள் அனைவரும்.

"நாற்பதாண்டுக்கு முன்னர் இதே வட்டாரத்தில் எங்களை இதர சமூகத்தவர்கள் தீண்டத்தகாதவர்கள் போல் நடத்துவார்கள். அந்தச் சூழல் இப்பொழுது முழுவதுமாக இல்லை. மலைஜாதிப் பிரிவில் எங்கள் சாதியைச் சேர்த்துவிட்டால் வாழ்க்கைத் தரம் மேலும் உயர்ந்துவிடும்!" என்று பலரும் சொல்கிறார்கள்.

"எங்க சமூகத்தில் ஒருத்தர் குளித்தலை தாலுகா ஆபீஸ்ல கிளார்க்கா இருக்கார். ஒரு பொண்ணு வெளியூர்ல (கோவை) டீச்சரா இருக்குது. அந்தப் பெண்ணோட வீட்டுக்காரரும் வாத்யாரா இருக்கார். எங்கள்ல போலீஸ் கேசுன்னு ஸ்டேஷனுக்கு எல்லாம் போயி நிக்கமாட்டோம். அவ்வளவு கட்டுப்பாடு!" என்று கூறுகிறார் சின்ன அப்பாய்.

**— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

படங்கள்: **தொட்டியம் லட்சுமி ஸ்டூடியோ**



# ஆஸ்துமா ஈஸ்னோபீலியா அலர்ஜி, சைனஸ், காசநோய்களுக்கு தெய்வீக மூலிகை சிகிச்சை



பல வருட ஆராய்ச்சியின் மூலம், வேதங்களும், ஞானிகளும் போற்றியதும், கடவுளுக்கு சமமாகவும், நம் நாட்டின் பல பொக்கிஷங்களில் ஒன்றாகவும் கருதக் கூடிய பல தெய்வீக மூலிகைகளைக் கொண்டு பக்க விளைவுகள் இல்லாத வகையில், தாமே தயார் செய்த தெய்வீக மூலிகை மருந்துகள் மூலம் குழந்தைகளுக்கு வரும் பிரைமரி காம்ப்ளக்ஸ், எதிர்ப்பு சக்தி குறைவின் காரணமாக வரும் டஸ்ட் அலர்ஜி, சீதோஷ்ண நிலை மாற்றத்தால் வரும் மூக்கில் நீர் வடிதல், சளி, தும்மல், தொடர் இருமல், சுவாசிக்க முடியாதபடி மூக்கடைப்பு, சைனஸ், தொண்டை கரகரப்பு, தலைவலி, மலச்சிக்கல், ஈஸ்னோபீலியா, மூச்சு விடும் போது விசில் சத்தம் வருதல் (நின்றால் - நடந்தால் - படுத்தால் - மூச்சு வாங்குதல்) சாப்பிட முடியாமை, உடல் மெலிவு, உடல் வெளுத்து காணப்படுதல் போன்ற அறிகுறிகளை உடைய **ஆஸ்துமா நோய்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகின்றது மற்றும் எய்ட்ஸ், எல்லாவித புற்றுநோய், BP, இதய நோய், சிறுநீரக கோளாறு, சர்க்கரை வியாதி, ஆண்மைக் குறைவு, குழந்தையில்லாத குறை, அல்சர், மூட்டுவலி, சொரியாசிஸ்** போன்றவைகளுக்கு சிறப்பான ஆலோசனைகளும் & சிகிச்சைக்கும் அணுக வேண்டிய முகவரி

*தெய்வீக மூலிகை வைத்தியர்கள்*



தலைமை முகவரி : **Dr. M.குருபரன் & Dr. M. சபாபதி, Dr. M.சிவசக்தி,S/O. Dr. C.K.மாணிக்கவாசகம்**
P.B. NO. 30, 3,திருநாத முதலி நகர் (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் DT 635601 ✆ : 04179-20469, 22769
சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 600 010. ✆ : 044-6424285, 6427638.

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் காலை **10.00-1.00 P.M.** மாலை **5.00-7.00 P.M.**


## ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

| | | | | |
|---|---|---|---|---|
| **வேலூர்**<br>3-ந்தேதி-12.00 P.M. TO 3 P.M.<br>[illegible] வார்டு 26/A, ஆரணி ரோடு<br>பஸ் ஆஸ்பத்திரி அருகில்<br>✆ : 0416/21009 | **காஞ்சிபுரம்**<br>3-ந்தேதி-5 P.M. TO 6 P.M.<br>ராஜம் வார்டு பஸ் நிலையம்<br>அருகில் காமாஜி தெரு<br>✆ : 0412 /22519 | **கடலூர் (S.A. DT.)**<br>4-ந்தேதி-9 A.M. TO 11 A.M.<br>ஆர்காடு [illegible] ஹோட்டல்<br>✆ : 04142 / 30707, 30707 | **விழுப்புரம்**<br>4-ந்தேதி-2 P.M. TO 3 P.M.<br>ஹோட்டல் ஆனந்த, பஸ் நிலையம்<br>எதிரில் ✆ : 04146 / 22942, 24940 | **திருவண்ணாமலை**<br>4-ந்தேதி-5 P.M. TO 6 P.M.<br>ராஜா வார்டு பஸ் நிலையம் எதிரில்<br>✆ : 04175/22536 |
| **மும்பை**<br>7 & 8-ந்தேதி-10 A.M. TO 6 P.M.<br>The South Indian Concerns Ltd.,<br>401, Telang Road, Matunga (CR),<br>PH : 022/4011589 | **பெங்களூர்**<br>9-ந்தேதி-11 A.M. TO 1 P.M.<br>ஹோட்டல் பிரஸ்டேஜ், [illegible]<br>[illegible] அருகில் [illegible]<br>ரோடு ✆ : 080 / 2266374 / 2673083 | **ஓசூர்**<br>9-ந்தேதி-4 P.M. TO 5 P.M.<br>சீனிவாசா வார்டு, பாகலூர் ரோட்,<br>✆ : 04344 / 43899, 43271 | **சேலம்**<br>10-ந்தேதி-11 A.M. TO 1 P.M.<br>ஹோட்டல் சேலம், புதிய பஸ்<br>நிலையம் எதிரில்<br>✆ : 0427/ 449333/ 449322 | **ஈரோடு**<br>11-ந்தேதி-4 P.M. TO 6 P.M.<br>ஹோட்டல் ஆக்ஸ்போர்ட், பஸ்<br>நிலையம் எதிரில்,<br>✆ : 0424 / 22468/72/73/74 |
| **கோயம்புத்தூர்**<br>13-ந்தேதி-9 A.M. TO 1 P.M.<br>[illegible] வார்டு [illegible]<br>[illegible]<br>✆ : 0422 / 302220, 302220 | **மதுரை**<br>14-ந்தேதி-9 A.M. TO 11 A.M.<br>ஹோட்டல் [illegible]<br>[illegible] தெரு<br>✆ : 0452 / 743941 | **தஞ்சாவூர்**<br>14-ந்தேதி-5 P.M. TO 7 P.M.<br>ஆரோக்யா வார்டு<br>✆ : 04362 / 30021 / 30022 | **திருச்சி**<br>15-ந்தேதி-9 A.M. TO 11 A.M.<br>ஹோட்டல் ஆனந்த்,<br>சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்,<br>✆ : 0431 / 40543 | **நாமக்கல்**<br>15-ந்தேதி-2 P.M. TO 4 P.M.<br>ஹோட்டல் [illegible]<br>✆ : 04286 / 20433, 21334 |
| **நியூடெல்லி**<br>16&17-ந்தேதி-10 A.M. TO 8 P.M.<br>South Indian Hotel, 10211, Padam<br>Singh Road, Ajmal Khan Road,<br>Karol Bagh ✆ : 011/5717126, 5723681 | **தர்மபுரி**<br>22-ந்தேதி-8 A.M. TO 10 A.M.<br>ஸ்ரீ [illegible] வார்டு, 103,<br>[illegible] ரோடு<br>✆ : 04342 /60236, 61472 | **திருப்பூர்**<br>22-ந்தேதி-2 P.M. TO 3 P.M.<br>ராமகிருஷ்ணா வார்டு, [illegible]<br>[illegible] தெரு ✆ : 0421 / 240418 | **உடுமலைப்பேட்டை**<br>22-ந்தேதி-6 P.M. TO 7 P.M.<br>ஹோட்டல் [illegible],<br>பஸ் நிலையம் எதிரில்<br>✆ : 04252 / 24333 | **திண்டுக்கல்**<br>23-ந்தேதி-9 A.M. TO 11 A.M.<br>ஹோட்டல் [illegible], பஸ் நிலையம்<br>பின்புறம் ✆ : 0451 / 421056, 421057 |
| **தூத்துக்குடி**<br>23-ந்தேதி-5 P.M. TO 6 P.M.<br>ஹோட்டல் [illegible],<br>[illegible] ரோடு<br>✆ : 0461 / 327780 | **திருநெல்வேலி**<br>24-ந்தேதி-8 A.M. TO 11 A.M.<br>ஹோட்டல் ஸ்ரீ [illegible],<br>மதுரை ரோடு<br>✆ : 0462 / 331302 | **நாகர்கோவில்**<br>24-ந்தேதி-2 P.M. TO 3 P.M.<br>ஹோட்டல் [illegible], மீனாட்சிபுரம்<br>✆ : 04652 / 36078 | **விருதுநகர்**<br>25-ந்தேதி-8 A.M. TO 10 A.M.<br>[illegible] வார்டு, மதுரை ரோடு<br>✆ : 04562 / 43537 | **கரூர்**<br>25-ந்தேதி-2 P.M. TO 4 P.M.<br>[illegible] வார்டு, [illegible] பஜார்,<br>✆ : 04324 / 63763, 62463 |

**தகவல் :** SUN, RAJ, VIJAY, D.D T.V. களில் எமது பேட்டியை காணத்தவறியவர்கள், டாக்டரின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்" என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ. 130/-மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

- ஆகஸ்ட் 15 & 22 மாலை 6 மணிக்கு விஜய் டிவியில் டாக்டரின் பேட்டியைக் காணத்தவறாதீர்கள்.

# காதல் தெரு




கொடுமுடியில் பார்த்திபனும் பிரகாஷும் தியேட்டருக்குள் நுழைந்தபோது கே.பி. சுந்தராம்பாளின் பாடல் வரவேற்றுக் கொண்டிருந்தது. ''ஞானப் பழத்தைப் பிழிந்து.''

அன்னியமான உணர்ச்சி தோன்றியது. சின்னதாராபுரம் அமராவதி தியேட்டரின் நெருக்கம் வரவில்லை. உள்ளூர்க் கடைகளுக்கு விஜயம் செய்யுமாறு சிலைடுகள் போட்டபின் படம் துவங்கியது. தேவதாஸ். தேவதாஸாக நாகேஸ்வரராவ், பகவான் தாஸாக நம்பியார், பார்வதியாக சாவித்திரி, சலனமாக கறுப்பு - வெள்ளை, கண்டசாலாவின் கானங்கள். கண்களும் காதுகளும் பழகியிராத பையன்களுக்கு அது கஷ்டமாகத்தான் இருந்தது உண்மையில்.

பார்த்திபன் இப் படத்தைப் பார்ப்பதன் மூலம் காதலுக்கு நியாயமான ஒரு திசையில் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதாக உணர்ந்தான். தேவதாஸ் நோய்நாய் ஒன்றைக் கட்டிக் கொண்டு, 'உலகே மாயம்' என அழுதபோது அனிதாவை இழந்து விட்டது போன்ற கற்பனைக்கு ஆளானான். முதல் ஆட்டம் முடிந்தது. தங்கராஜ் உயர்வு கற்பித்த அளவுக்குப் படம் இல்லை என்பதாக இருவருக்கும் தோன்றியது. வெளியே வந்து பரோட்டா சாப்பிட்டுவிட்டு அதே படத்துக்கு இரண்டாம் ஆட்டம் நுழைந்தனர்.

"ரவி சார் பாவம். நமக்காகக் காத்திருப்பார்" என்றான் பார்த்திபன்.

''வெயிட் பண்ணட்டும். அவரால

க.சீ. சிவகுமார்

வந்ததுதானே இது?''

முதலாவது ஆட்டத்துக்கும் இரண்டாவது ஆட்டத்துக்கும் இடையில் தேவதாஸின் வாழ்வில் மலர்ச்சி மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இடைவேளையின் போது பிரகாஷ், ''இந்த வருஷம் பாஸ் பண்ணிடுவமா?'' என்றான் கவலையுடன்.

இரண்டாம் ஆட்டம் முடிந்து வெளி வந்தபோது கண்கள் சொக்கி தியேட்டரிலேயே படுத்து விடலாம் போலிருந்தது. எல்லா வைபவங்களும் களைப்பில்தான் முடிகின்றன.

வண்டியைப் பார்த்திபன் ஓட்டினான்.






கரூர் சாலையில் நொய்யல் வரை வந்து அங்கிருந்து தெற்கே திரும்பும் பயண ஏற்பாடு. சாலைப்புதூருக்கு ஒரு கிலோ மீட்டர் முன்னால் அந்த பேக்கரி இருந்தது. 'அனிதா பேக்கரி' என்ற போர்டைப் பார்த்ததும் நிலைகுலைந்து பிரேக் அடித்து நிறுத்தினான் பார்த்திபன்.

"ஏண்டா நாயே?''

"டீ குடிச்சுட்டுப் போவோம்.''

"அதுக்கு ஏன் சாகறா மாதிரி பிரேக் போடறே?''

"அங்கே பார்'' என்று கடை போர்டைக் காட்டினான். நீலக் குழல் விளக்கொளியில் பச்சை எழுத்தில் ஒளிர்ந்து நின்றது அனிதா பேக்கரி.

''நல்லவேளை. அனிதான்னு போட்டு லாரி ஏதும் எதுக்க வரலை.''

கண்ணாடி தம்ளரில் ஆவி பறக்க தேநீர்கள் வந்தன. குடித்ததும் மலர்ச்சி வந்தது. பார்வதி சாவித்திரியின் உருவத்தோடு அனிதாவின் உருவம் பொருந்திப் போகுமா என பார்த்திபன் யோசித்தான். கஷ்டம். தேநீர் குடித்து முடித்தபின் மொபட்டை பிரகாஷ் வாங்கிக் கொண்டான்.

''நீ ஏதாவது ஞாபகத்துல எங்காவது கொண்டு சாத்திடுவே. நான் ஓட்டுறேன்.''

வண்டி சாலைப் புதூர் வந்து கரூர்ச் சாலை திரும்புகையில் போலீஸ்காரர் ஒருவர் கைதட்டிக் கூப்பிட்டார். இருவரும் உடல் பதற கிட்டே வந்தனர்.

"எங்கேடா போயிட்டு வர்றீங்க?''

"சினிமாவுக்கு சார்.''

''லைசென்ஸ் எங்கேடா?''

''இத பாருங்க சார்'' சினிமா



**இந்த முதியவரை உற்றுப் பாருங்கள். இன்று மிகப் பிரபலமான ஒருவரது முகத்தை நினைவுபடுத்துகிறதா? ஆம்! இன்றைய பிரபலம், இன்னும் நாற்பது வருடங்கள் கழித்து எப்படியிருப்பார் என்று சேகர் குரேரா என்ற ஓவியர் கற்பனை செய்து வரைந்துள்ள ஓவியம்தான் இது! படத்தில் இருப்பவர்...**



**கரெக்ட்! சச்சின் டெண்டுல்கர்தான்!**

**— எம்.**

டிக்கெட்டை பார்த்திபன் எடுத்து நீட்டினான். நான்கு டிக்கெட்டுகள். இரவில் சந்தேகக் கேஸாய் போலீஸ் பிடித்தால் டிக்கெட்டைக் காட்ட வேண்டும் என்பது லயிசச் செய்தி.

பிரகாஷின் காதைக் காவலர் திருகினார்.

"என்னய்யா! லைசென்ஸ் கேட்டா சினிமா டிக்கெட்டைக் காட்டறே?"

அவரது கையைத் தட்டி விட்டு, "லைசென்ஸ் இல்லீங்க சார்" என்றான். இப்போது அருகில் ஐயா வந்து கொண்டிருந்தார். ஐயாவாகிய எஸ்.ஐ.யிடம் காவலர், "கொழுப்பெடுத்த பசங்க லைசென்ஸ் கேட்டா சினிமா டிக்கெட்டைக் காட்டறானுங்க சார்" என்றார்.

"அவனுககிட்ட எங்கே லைசென்ஸ் இருக்கும். இப்பத்தான் பிளஸ் டூ படிப்பானுக போலிருக்கு. யூனிஃபார்மப் பாத்தாத் தெரியலியா?"

பார்த்திபனுக்கும் பிரகாஷுக்கும் இப்போதுதான் சீருடை மூலமாக பள்ளிப் பெயரைக் கெடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பது உறைத்தது.

"எந்த ஸ்கூல்ப்பா?"

"சின்னதாராபுரம்."

இன்டர்வ்யூவைப் போல அவரது கேள்விகள் தொடர்ந்தன.

"உங்க ஊர்ல படம் வராதா?"

"வரும் சார். இந்தப் படமெல்லாம் வராது. அபூர்வமான படம்."

"அப்படியென்னப்பா அபூர்வமான படம்?"

"தேவதாஸ்."

எஸ்.ஐ. எதிர்பாராதவிதமாகச் சிரித்தார். பழைய காலத்தில் தேவதாஸ் பார்த்து விட்டாரோ என்னவோ?

"சரி. வாங்கப்பா. ஒரு டீ குடிச்சுட்டுப் போங்க."

"வேணாம் சார்."

"இவ்வளவு தூரம்லாம் வர்ற மாதிரி இருந்தா பக்கத்துல எங்காவது சொந்தக்காரங்க வீட்டுக்கு வந்து தங்கி படம் பார்த்துட்டுப் போங்க. போற வழியில அடிச்சுப் போட்டுட்டு வண்டியப் பிடுங்கிட்டுப் போனா என்ன பண்ணுவீங்க?"

"சார் சார்."

"போங்கப்பா. போய் ஒழுங்கு மரியாதையா படிக்கற வேலையப் பாருங்க" சிரித்துக் கொண்டே அவர் சொன்னதும் பிரகாஷ் வண்டியைக் கிளப்பினான். பாதுகாப்பான தூரம் கடந்தபின் பார்த்திபன் திரும்பிப் பார்த்த போது எஸ்.ஐ. யாரையோ கன்னத்தில் அறைந்து கொண்டிருந்தார்.

சின்னதாராபுரம் ரவி சார் வீட்டுக்கு வந்த போது மணி மூன்றாகி விட்டது. முன் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பிரகாஷ் வீட்டின் முன் வேப்பமரத்தடியில் வண்டியை நிறுத்தி 'சைடு லாக்' பூட்டின போது கதவு திறந்தது. அவர்கள் உள்ளே நுழைந்ததும் ரவி படித்துக் கொண்டிருந்த அடையாளமாய் மேஜை மேல் 'வால்கா முதல் கங்கை வரை' என்ற புத்தகம் கிடந்தது. தரை விரித்த மெத்தையில் மனைவியும் குழந்தையும் உறங்கியிருந்தனர்.

"என்னப்பா இவ்வளவு லேட்டு?"

"ரெண்டு ஷோவும் பார்த்துட்டு

வர்றோம். நீங்க தூங்கலியா?"

"நீங்க வர்ற வரை படிக்கலாம்னு ஆரம் பிச்சு அப்படியே புக்குல பூந்துட்டேன். நீங் களும் படிங்கப்பா நல்ல புக்" என்றவாறு புத்தகத்தைக் கை காட்டியவர் மனைவியை எழுப்பி, "நீ உள்ள படும்மா. நானும் தம்பி களும் இங்கே படுக்கிறோம்" என்றார்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு ரவி சாரின் மனைவி உள்ளே போக மூவரும் மெத்தையில் படுத்தனர். விளக்கை அணைத்தபின் பிரகாஷ் மெதுவான குரலில்,

"போலீஸ்ல சிக்கிக்கிட்டம்" என்றான்.

"ரொம்பச் சரிதான்."

"என்னங்க சார்? நாங்க மாட்டிக்கிட்டா உங்களுக்குச் சந்தோஷமா?"

"இதெல்லாம் நடந்தாத்தான் அனுபவம் மறக்க முடியாததா இருக்கும். நாங்க ஒரு நாள் சினிமாவுக்குப் போயி... எட்டய்யா ரோட்டு மேல நிக்கறாருன்னு பாடி ஒரு நைட் முழுக்க ஸ்டேஷன்ல உக்காந் திருந்தோம்."

"சார்! நீங்களுமா?"

குளித்துப் பள்ளிக்குப் புறப்பட்டு உண வுத் தட்டுக்களின் முன் அமர்ந்தபோது,

"தக்காளி சாம்பார் எப்படி இருக்குன்னு சொல்லு பார்த்தி. நான் வச்சது" என்றார் ரவி. ஒரு ஆண் தக்காளி சாம்பார் வைத்தது இரு பையன்களுக்கும் கலாசார அதிர்ச்சி யாயிருந்தது. அவரது குழந்தை எல்லாத் தட்டுக்கள் மீது கையைத் தட்டிக் கொண் டிருந்தது.

"பாப்பா. பேரு என்னங்க சார்?"

"கோதாவரி."

"அது என்னங்க சார் வட இந்திய நதியோட பேரா?"

ரவி, "கோதாவரி பாருலேகர் தெரியுமா?" என்றார்.

"தெரியாது."

"மகாராஷ்ட்ராவுல ஆதிவாசி விவசாயி களுக்காகப் பாடுபட்டவங்க."

"நீங்க எங்க வீட்டுக்கு ஒரு நாள் கட்டா யம் வரணும் சார்" என பிரகாஷ் கேட்டுக் கொண்டான்.

"அக்கா, குழந்தையோட வாங்க சார்" என்றான் பார்த்திபன்.

"வர்றேன். அதுக்கு முன்னால நாமெல் லாம் ஒரு சைக்கிள் டூர் போலாம். நம்ம ஏரியா முழுக்க சுத்தணும். ஒரு பத்துப் பையங்கள சேர்த்துக்கங்க" இப்போது ரவி சாரின் மனைவி சுகன்யா.

"ஆமா. சுத்துங்க. லைஃப் இவ்வளவு தான்" என்று கரித்துணியைத் தூக்கிக் கீழே போட்டார். சிரிப்பலை தழுவி ஓடியது சாப் பாட்டு அறையை. ஒன்பது முப்பதுக்கெல் லாம் பள்ளிக்கூடம் போயாகி விட்டது. அனிதா பார்த்திபனிடம்,

"இன்னிக்கு வீட்டுக்குப் போவியா... மாத்து உண்டு" என்றாள் செல்லமாகச் சிரித்துக் கொண்டே...

"ஐய்யோ... என்ன பண்ணினே?"

"நீயும் பிரகாஷும் வண்டில கிளம்பிப் போறதைப் பார்த்ததும் வீட்டுக்குப் போய் ஆன்ட்டிக்குப் ஃபோன் பண்ணிட்டேன்."

பார்த்திபனுக்கு ரவி சாரின் நினைவு வந்தது. அவர் ஆறு மணிவாக்கில் பையன் கள் தன்னோடு இருப்பதாக பார்த்தியின் வீட்டுக்குத் தொலைபேசித் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தார். வேகவேகமாய் உடல்திற அறைக்குப் போனான்.

"சார். நேத்து சாயந்திரம் எங்க வீட்டுக்கு ஃபோன் பண்ணினீங்களா?"

"ஆமா."

"என்ன சொன்னாங்க. வீட்ல என்ன சொன்னாங்க?"

"உங்க அம்மாதான் பேசினாங்க. பையன் களைக் கெடுத்துடாதீங்க சார்னு சொன் னாங்க."

"சார்!" என்றான் பார்த்திபன் பரிதாப மாக. பிரேயருக்கான மணி அடித்து விட்டது.

(தொடரும்)



"கேடி மாரிமுத்துக்கு இருக்கிற திமிரைப் பார்த்தியா?"

"என்ன சொல்றான்?"

"அவன் கமிஷனரை சந்திச்சதைப் பத்திக் கேட்டதும் 'இது மரியாதை நிமித்தமான சந்திப்பு'ங்கறான்!"

– வந்தவாசி பா. ஜெயக்குமார்



• ராஜேந்திரன்

# இந்தக் குத்து ஊத்தா குத்து!

**வ**லை விசி மீன் பிடிப்பதைப் பார்த்திருக்கிறோம். தூண்டில் போட்டு மீன் பிடிப்பதைப் பார்த்திருக்கிறோம். ஊத்தா குத்து முறையில் மீன் பிடித்துப் பார்த் திருக்கிறீர்களா?

சிவகங்கை மாவட்டத்தில் பல கிராமங்களில் இந்த ஊத்தா குத்து முறையில் மீன் பிடிக்கிறார்கள். இதை ஒரு திருவிழா போன்றும் நடத்துகிறார்கள்.

"ஊத்தா" என்றொரு மீன் பிடிக்கும் கருவி. ஊனான் கொடி என்றொரு தாவரத்தின் கொடிகளால் பின்னப்பட்டிருக்கிறது. இதை தண்ணீருக்குள் வைத்து அழுத்தும்போது அந்தப் பரப்பளவுக்குள் உள்ள மீன்கள் தப்பிக்க முடியாது.

இதைப் போட்டி போன்று அண்மையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு அருகில் கொரட்டி கிராமத்தில் நடத்தினார்கள். குறிப்பிட்ட தேதியை அறிவித்து சுற்றுப்புற கிராமங்களில் விளம்பரம் செய்வார்கள். இதில் கலந்து கொள்பவர்கள் ஊத்தா என்ற கருவியோடு, ஊரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையைக் கட்டிவிட்டு அடையாள வில்லை பெற்றுக்கொள்வார்கள். நீர் நிலையுள்ள கண்மாயில் இறங்கி மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள். இதில் லாபமும், இழப்பும் அவரவரைச் சார்ந்தது.

"கண்மாயில் நீர் வற்றும் காலத்தில் வருடத்திற்கு ஒரு முறை ஊத்தா குத்து நடத்துவோம். தனியாரிடம் மீன் பிடிக்க ஏலம் விட்டால் ஒரு வருடத்திற்கும் குத்தகைக்கு விட வேண்டும். மீன் பிடிப்பதற்காக அவர்கள் கண்மாயிலுள்ள நீரை வெளியேற்றுவார்கள். மீன் பிடித்து விற்ற பின்புதான் பஞ்சாயத்திற்குக் குத்தகைப் பணத்தைச் செலுத்துவார்கள். ஊத்தா குத்து முறையில் அந்தச் சிரமங்கள் கிடையாது. மீன் பிடிப்பதற்கு முன்பாகவே பணம் கிடைத்துவிடும். கண்மாயில் உள்ள நீர் வெளியேற்றப்படாமல் பாதுகாக்கப்பட்டுவிடும். தற்போது இந்தக் கண்மாயைப் பஞ்சாயத்திடமிருந்து ஊர்ப் பொதுவில் குத்தகைக்கு எடுத்தார்கள். ஊரார்களே மீன் குஞ்சுகள் வாங்கி வளர விட்டார்கள். ஊத்தா குத்து முறையில் மீன் பிடிக்க நபர் ஒருவருக்கு நூறு ரூபாய் என்று நிர்ணயித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் சுமார் எழுநூறு நபர்கள் கலந்து கொண்டார்கள்" என்றார் பஞ்சாயத்துத் தலைவர் ராஜேந்திரன்.

மீன் பிடித்துவிட்டுத் திரும்பும் மக்களில் சிலரை அணுகியபோது, "இது ஒரு விளையாட்டு மாதிரி, அகப்பட்டா நட்டம் இல்லாமல் போயிரும்... அகப்படலைனா ஊர்ப் பொதுவுக்குத்தானே பணம் கொடுத்தோம்ங்கற மனத் திருப்தி இருக்கும். அவ்வளவுதான்!" என்றார்கள்.

**— கி. சிங்காரவடிவேல்**

படங்கள்: **செந்தில்குமார்**



# காணிராம்!

பசு. தனபாலன்

எப்போது இந்த எண்ணம் தனக்குள் முதன்முதலாக முளைத்தது என்று ராமய்யாவுக்குத் தெரியவில்லை. ஆனால் தினம் தினம் வளர்ந்து கொண்டே போகிறது. ஆழமாய் வேர்விட்டு இலைவிட்டு கிளை பரப்பும் விருட்சம்போல...

அன்றுகூட நல்ல பசியோடு சாப்பிட உட்கார்ந்திருந்தான் ராமய்யா. அவன் மனைவி லட்சுமிக்கு அவன் சாப்பிட உட்கார்ந்ததும்தான் அவனுடைய கையாலாகாத்தனங்கள் ஒவ்வொன்றாக ஞாபகத்துக்கு வரும். கிராமத்தில் இருக்கும் அவனுடைய பூர்வீக வீட்டை இன்னும் பங்காளிகளிடம் விட்டு வைத்திருப்பது, அவன் ஒருமுறை

''தலைவருக்குப் பாதுகாப்பு வளையம் தேவைனு பேசியிருக்கக் கூடாது!''

''ஏன்?''

''ஒரே ரூத் பேஸ்ட் டப்பாக்களா குவிஞ்சுட்டுது!''

– அம்பை தேவா



சைக்கிளை போஸ்ட் ஆபீஸ் வாசலில் பூட்ட மறந்து தொலைத்தது. வங்கியில் அடகு வைத்த நகையை மீட்கும்போது எடை குறைச்சலாக வாங்கி வந்தது... இத்யாதி இத்யாதி.

இன்றைய தாக்குதல் திரும்ப வராத ஒரு கடனைக் கொடுத்ததற்காக.

அவள் பரிமாறிவிட்டு பக்கத்தில் நின்று கொண்டு ஆரம்பித்தாள். ''ஏங்க, உங்க சிநேகிதர் மணிகண்டனுக்கு ஐந்நூறு ரூபாய் கடன் கொடுத்து எத்தனை மாசமாச்சு? அதைக் கேக்கவே மாட்டீங்களா?''

"சே! மனுஷன் நிம்மதியா சாப்பிடக் கூட முடியாது இந்த வீட்டிலே" ஆத்திரத்துடன் பாதி சாப்பாட்டில் தட்டை தூரத் தள்ளி விட்டு எழுந்து கொண்டான் ராமய்யா.

"கொடுத்த கடனைத் திருப்பிக் கேக்கத் துப்பில்லை. ரோஷம் மட்டும் பொத்துகிட்டு வந்துடுது. பேசாம உக்காந்து சாப்பிடுங்க."

சற்று முன்பு உட்காரலாமா என்று சஞ்சலப்பட்ட ராமய்யா சட்டென்று மனம் மாறி, ஹேங்கரில் தொங்கிய சட்டையை வேகமாக அணிந்து கொண்டான்.

"எங்கே கிளம்பிட்டீங்க?" லட்சுமி பாதி கெஞ்சலும் பாதி அதட்டலுமாய்க் கேட்டாள்.

''எங்கேயாவது ஒழிஞ்சு போறேன்...'' என்றபடி ராமய்யா வராந்தாவுக்குப் போய் செருப்பை போட்டுக் கொண்டு நடந்தான். நிஜமாகவே போய்விட்டால்தான் என்ன?

''என்ன ராமய்யா... ராத்திரியிலே வாக்கிங்...?''

குரல் கேட்டு ராமய்யா திரும்பினான். எதிர் வீட்டு சாமிநாதன். இருவரும் சம வயதுக்காரர்கள். மணிக் கணக்கில் அரட்டையடிக்கும் அளவுக்கு நண்பர்கள்.

"பொண்டாட்டிகூட ஒரு சின்ன தகராறு சாமிநாதா. அதான் வீட்லே இருக்கப் பிடிக்காம வெளியே வந்துட்டேன்."

சாமிநாதன் பலமாகச் சிரித்தான். "சரிதான்..."

இருவரும் வீதியைக் கடந்து பக்கத்து வீதிக்கு வந்தார்கள். அங்கே பூட்டப்பட்டிருந்த பொது நூலகம் முன்பு ஒற்றை நாற்பது வாட்ஸ் பல்ப் ஒன்று மழுப்பலாய் எரிந்து கொண்டிருந்த. குட்டையான காம்பவுண்ட் சுவர்மீது உட்கார்ந்து கொண்டார்கள்.

ராமய்யா பொறுமலுடன் ஆரம்பித்தான். ''என் பொண்டாட்டியோட இம்சை தாங்கலை சாமிநாதா. நான் எங்கேயாவது ஓடிப் போயிடலாம்னு இருக்கேன்...''

சாமிநாதன் முகத்தில் சிரிப்பு குமிழியிட்டது. ''என்ன ராமய்யா, தமாஷ் பண்றியா?''

''அட, நான் நெஜமாவே சொல்றேன். என் பொண்டாட்டி என்னை மதிக்கிறதே யில்லை. எதுக்கெடுத்தாலும் எகத்தாளமா பேசறா."

"இப்ப நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா ராமய்யா? எனக்கும் என் பொண்டாட்டிக்கும்கூட காலையிலிருந்தே சண்டைதான். குடும்பம்னா இதெல்லாம் சகஜம்ப்பா."

ராமய்யா தன் மனக்குமுறலைக் கொட்ட ஆரம்பித்தான். "பொண்டாட்டிதான் இப்படின்னா என் பசங்க அதுக்குமேலே இருக்காங்க. சரி, ஆபீஸ் போயிட்டா அங்கேயாவது நிம்மதியா இருக்க முடியுதா? மேனேஜரோட தொல்லை. இவங்க எல்லாம் என்னோட அருமையைத் தெரிஞ்சுக்க ஒரே வழி நான் சொல்லாம கொள்ளாம எங்கேயாவது ஓடிப் போயிடறதுதான்."

சாமிநாதன் இப்போது சிரிப்பைத் தொலைத்துவிட்டு சீரியஸாகப் பேசினான். ''என்ன ராமய்யா பொறுப்பில்லாமப் பேசிகிட்டு? நீ ஓடிப் போயிட்டா உன் பொண்டாட்டி பிள்ளைங்க கதி என்னாகும்?''

ராமய்யா தன் நெடுநாள் கனவை சாமிநாதனுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்

தான்.

"நான் சொல்றதை கற்பனை பண்ணிப் பாரு சாமிநாதா. ஒரு நாள் சாயங்காலம் ஆபீஸ்லே இருந்து வீட்டுக்குத் திரும்பி வரவேண்டிய நான் வரலை. என் பொண்டாட்டி லட்சுமி நிலை கொள்ளாம தவிக்கிறா. மறுநாளே ஆபிஸ் போய் விசாரிக்கிறா. 'ராமய்யா, நேத்து ஆபிசுக்கு வரவே இல்லை'ன்னு சொல்லிடறாங்க. அப்புறம் தான் நான் காணாமப் போனது எல்லோருக்கும் தெரிய வருது. பரபரப்பா என்னைத் தேட ஆரம்பிக்கிறாங்க. சொந்தக்காரங்க வீடு, சிநேகிதர்கள் வீடு எங்கே தேடியும் நான் கெடைக்கலை. ராமய்யாவுக்கு என்ன ஆச்சுன்னு எல்லோரும் மண்டையைப் பிச்சுக்கறாங்க. நாட்கள் ஓடுது. நான் காணாம போனதை போலீஸ்லே புகார் செய்து, பேப்பர்லேயும் விளம்பரம் பண்ணி... கடைசியா நான் திரும்ப வந்து சேர்ந்துர்றேன்."

சாமிநாதன் ராமய்யாவை விநோதமாய்ப் பார்த்தான்.

"நீ சொல்றது எனக்கு ஒண்ணுமே புரியலை. காணாமல் போயிட்டு திரும்பி வந்துடுவேங்கிறே. எதுக்கு இதெல்லாம்?"

ராமய்யாவின் பதிலில் உஷ்ணம் வீசியது. "காலமெல்லாம் என்னை நோக வைக்கிறவங்களை சில நாளாவது அழ வச்சு நான் வேடிக்கை பார்க்க வேண்டாமா? அதுக்குத்தான். புருஷனை மதிக்காததாலேதானே அவர் ஓடிப் போயிட்டார்னு என் பொண்டாட்டி நெனச்சு நெனச்சு அழணும். என் பசங்களும் திருந்தணும். எனக்கு மெமோ மேலே மெமோ கொடுத்ததுக்காக என் ஆபீஸ் மேனேஜர் ஃபீல் பண்ணணும்."

"அப்படி நீ எங்கேதான் போகப் போறே?"

"பக்கத்து டவுன்லே ஏதாவது ஒரு லாட்ஜிலேதான். ஒரு மாசமோ ரெண்டு மாசமோ..."

சாமிநாதன் குரல் தயக்கமாய் ஒலித்தது. "வேணாம் ராமய்யா... ஏதாவது விபரீதமா நடந்துடப் போவுது..."

ராமய்யா பிடிவாதக் குரலில் பேசினான். "இப்படி நரகத்திலேயே காலத்தை ஓட்டிகிட்டு இருந்தா எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும். எனக்கு வேற வழி தோணலை. எப்ப போறதுன்னுகூட முடிவு பண்ணிட்டேன். வர்ற பத்தாம் தேதி எனக்கு கொஞ்சம் அரியர்ஸ் பணம் வருது. அதை வாங்கிகிட்டுத்தான் போகப் போறேன். அந்தப் பணத்தை வச்சுத்தான் நாளை ஓட்டணும்..."

"நீ சொன்னா கேக்க மாட்டேங்கிறே. சரி. நீ எந்த ஊர்லே எந்த லாட்ஜிலே தங்கப் போறேங்கிறதையாவது என்கிட்டே முன்னாடியே சொல்லிடு. அப்பத்தான் இங்கே ஏதாவது பிரச்னைன்னா உடனே உன்னை ஃபோன்லே காண்டாக்ட் பண்ணிக்கலாம்."

சொன்னான்.

இரண்டு நாள் கழித்து - ஆபீஸ் விட்டுத் திரும்பி, தங்கள் வீதியில் நுழைந்த ராமய்யா அதிர்ந்தான். எதிர் வீட்டில் அக்கம் பக்கத்துக்காரர்கள் சிறு கும்பலாய்க்

"என்னதான் மெகா சீரியல்னாலும் இப்படியா?"

"என்ன?"

"'பின் கதைச் சுருக்கம்'னு அடுத்து வரப்போற எபிசோட் கிளிப்பிங்ஸை காட்டி பாதி நேரத்தை ஓட்டிடுறாங்க!"

– பெரியகுளம் ஆர். வேணுகோபால்



கூடியிருக்க, பெண்ணின் அழுகுரல் கேட்டது.

"நேத்து என்கூட சண்டை போட்டுகிட்டு சாப்பிடாமகூட ஆபீஸ் புறப்பட்டு போனாரு. போனவர் திரும்பி வரவேயில்லை. இன்னிக்குப் போய் கேட்டா, அவரு நேத்து ஆபீசுக்கு வரவே இல்லைன்னு சொல்றாங்க. சொந்தக்காரங்க, தெரிஞ்சவங்க எல்லார் வீட்லேயும் பசங்களை விட்டு விசாரிச்சுட்டேன். எங்கேயுமே வரலைன்னு சொல்றாங்க. எங்கே போனார்னு தெரியலையே..."

நீட்டி முழக்கி அழுது கொண்டிருந்தவள் சாமிநாதனின் மனைவி!

# கோபாலபுரத்து

இது சென்னைதானா என்று வியக்கும்படி அத்தனை தூய்மையாக இருக்கிறது அந்தப் பகுதி. துடைத்துப் போட்டாற்போல அமைதி கொட்டிக்கிடக்கும் ஒவ்வொரு தெருவிலும், அவ்வப்போது ஒரு ஆட்டோ, அல்லது இரு சக்கர வாகனங்கள் என்று அடக்கத்தோடு வந்து போகின்றன. தெருக்களின் முனைகளில், தீவிரம் காட்டாத சில போலீசார், பைபர் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு, போவோர் வருவோரை நோட்டம் பார்க்கிறார்கள்.

சந்தேகமே வேண்டாம், தமிழக முதல்வர் கருணாநிதி வசித்து வரும் கோபாலபுரம்தான் இது. உள்ளே நடக்கிறோம். வாழை மரத் தோரணம், மாலைப் பொழுதில் மின்னும் அலங்கார மின்விளக்குகள் சகிதமாய் ராஜகோபுரம் வரவேற்கிறது. கூடவே நாதஸ்வரமும் கசிந்து வருகிறது. ஆலயத்திற்குள் நுழைகிறோம். கிருஷ்ண ஜெயந்தி மகோத்சவத்தின் தொடக்க நாளுக்காக விழாக் கோலம் பூண்டிருக்கும் ஆலயத்தின் கர்ப்பக்கிரஹத்தில் பெருமாள் கோவில் கொண்டிருக்கிறார். விநாயகர், வள்ளி, தெய்வானை சமேதராக சுப்ரமண்யர், ராமர், சீதை, லட்சுமணர், ஆஞ்சநேயர், ஆதிசங்கரர், ஸ்ரீகாமாட்சி அம்மன் சமேத ஏகாம்பரநாத ஸ்வாமி, நவக்கிரகங்கள், ஐயப்பன், அரசமரத்தடி விநாயகர் என்று சைவ, வைணவ பேதமின்றி எல்லா தெய்வங்களும் கோவில் கொண்டிருக்கும் கோபாலபுரம் ஸ்ரீவேணு கோபாலஸ்வாமி கோவிலின் எதிரிலேயே முதல்வரின் இல்லம்! தலைமைச் செயலகத்திலிருந்து முதல்வர் வீடு திரும்பும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்க, பாதுகாப்பு அதிகாரிகள் கொஞ்சம் பரபரப்புடன் பணிகளில் ஈடுபடுகிறார்கள். ஆலயத்தில் குவியத் தொடங்கிய பக்தர்களோ, வழிபாட்டில் ஈடுபாட்டுடன் ஐக்கியமாகிறார்கள்.

ஆலயத்திற்கும், முதல்வர் வீட்டிற்கும் இடையில் இருபது அடி இடைவெளியே இருக்க, பக்தர்களுக்குப் பல உருவங்களில் குறுக்கீடு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதே? என்றால், "அதுபோன்று எதுவுமே இல்லை" என்கிறார் ஆலயத்தின் நிர்வாகக் குழுச் செயலர் கிருஷ்ணமூர்த்தி. "பல தெய்வங்கள் கோவில் கொண்டிருப்பதால் இங்கு வருடம் முழுக்க திருவிழா நடக்கும். ஆனால் முதல்வர் வீடு காரணமாக இதுவரை எந்தப் பிரச்னையும் வந்ததில்லை" என்றவர் ஆல





யத்தின் வரலாறு குறித்துச் சொன்னார்:

"கோபாலபுரம் ஒரு சின்ன கிராம மாக இருந்தபோது, இங்கு வசித்து வந்தவர் கள், பெருமாளுக்கு ஓர் ஆலயம் கட்ட முடிவு செய்திருக்கிறார்கள். உடன் அங் கேயே வசித்து வந்த டி.டி. கோதண்டராம அய்யர் என்பவர், 1929-ஆம் ஆண்டு இரண்டரை கிரவுண்ட் நிலத்தை கோவில் கட்டுவதற்கு தானமாகக் கொடுத்திருக்கிறார்.

அதே ஆண்டு திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள கருப் பணங்குளம் என்ற கிராமத்தில் விவசாயிகள்,

# வேணுகோபாலர்!

தரிசு நிலத்தை வெட்டி நெல் வயலாகத் திருத்திக் கொண்டிருக்கும்போது, பூமியி லிருந்து ஐந்து பஞ்சலோக தெய்வத் திரு வுருவங்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றைக் கைப்பற்றி தஞ்சை மாவட்ட பிரிட்டிஷ் கலெக்டர் வசம் போலீசார் ஒப்படைத் திருக்கிறார்கள். பின்னர் கருப்பணங்குளம் கிராம மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு போய், கடவுள் சிலைகளை எங்கள் கிரா மத்திற்கே கொடுத்து விட வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியதைத் தொடர்ந்து சிலைகளைச் சம்பந்தப்பட்ட கிராம மக் களுக்கே பிரிட்டிஷ் அரசு கொடுத்து விட் டிருக்கிறது. ஆனால் வாங்கி வரப்பட்ட சிலைகளை கோவில் கட்டி, பிரதிஷ்டை செய்து வழிபட வசதியில்லாத ஏழை விவ சாயிகள், அவற்றைக் கணக்குப் பிள்ளை வீட்டில் வைத்து விட்டார்கள்.

இதை அறிந்து வருத்தமுற்ற கிருஷ்ண பக்தரான பஞ்சாபகேச அய்யங்கார் என்பவர் கிராம மக்களிடம் சென்று, அங்கிருந்த சிலைகளில் ஒன்றாகிய பெருமாள் சிலையினை தமக்குத் தரும் படி கேட்டு வாங்கி வந்து, அதைத் தமது ஆசிரமத்தில் வைத்துப் பூஜித்து வந்துள்ளார். இதனிடையே கோபால புரம் மக்கள், பெருமாள் கோவில் கட்டி வருவதை அறிந்து, அவர் பூஜித்து வந்த 'சீனிவாசன் என்னும் பெயர் கொண்ட சுந்தரவதன பெருமாள்' சிலையினை, தானமாக எழுதிக் கொடுத்து விட்டாராம். அய்யர் நிலம் கொடுக்க, அய்யங்கார் சிலை கொடுக்க, சைவ, வைணவக் கூட்டுறவோடு, ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோவில் கட்டப்பட்டு முதல் கும்பாபிஷேகம் 1934-ல் நடந்தேறியிருக்கிறது. காஞ்சி மஹா பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் போட்டுக் கொடுத்த 'டிசைனில்' கர்ப்பகிரஹமும், அர்த்தமண்ட பமும் கட்டப்பட்டிருப்பதோடு, அவரே இரு முறை இந்த ஆலயத்திற்கு விஜயம் செய்து இரண்டு தினங்கள் தங்கி, பூஜைகள் செய்திருக்கிறார். கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீராம நவமி, கந்தர் சஷ்டி, வைகாசி விசாகம், தைப் பூசம், அனுமான் ஜெயந்தி, ஐயப்பனுக்கு மண்டல பூஜை, மகர சங்கராந்தி என்று வருடம் முழு வதும் விழா, வழி பாடு என்று பக்தி கமழும் இந்த ஆலயத்தில், 'அரசு உத்தரவு வருவதற்கு முன்பிருந்தே தமிழில் அர்ச்சனை செய்கிறோம்' என்கிறார்கள்.


வைதீக முறைப்படி, இரண்டு கால பூஜை நடைபெறும் இந்த ஆலயத்தின் விசேஷ விழா காலங்களில், முதல்வர் வீட்டுப் பெண்மணிகள் ஆர்வத்தோடு கலந்து கொள்வார்கள். ஒவ்வொரு கிருஷ்ண ஜெயந்திக்கும், கோபாலபுரம் வேணுகோப லரின் பிரசாதத்தை முதலில் வாங்கிக் கொண்டு தான் வெளியே கிளம்புவாராம் முதல்வர். சென்னை மேயர் மு.க. ஸ்டாலின் குடும்பத்தோடு, கோவிலுக்கு வருவதுண்டு என்கிறார்கள்.

கோபாலபுரம் ஹிந்து ரிலிஜியஸ் சொசைட்டி நிர்வகித்து வரும் இந்த ஆலயம், பக்தர்கள் செலுத்தும் காணிக்கையிலேயே பராமரிக்கப்பட்டு வருகிறதே தவிர வேறு எவ்வித சொத்துக்களும் இல்லை. "கோவில் சார்பாக முதல்வரிடமோ - அரசிடமோ இதுவரை எதுவும் நாங்கள் கேட்கவில்லை. அதுபோல் அவர்களாலும் எங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை" என்கிறார் நிர்வாகச் செயலர்.

வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருக்கும், காரில் ஏறி, எதிர்படும் பெருமாளை பார்த்து விட்டுத்தான் முதல்வர் தலைமைச் செய லகம் புறப்பட வேண்டும். அவரே விரும் பினாலும் தவிர்க்க முடியாதபடி முதல்வரின் வீட்டுக்கு எதிரிலேயே தரிசனம் தருகிறாரே ஸ்ரீ வேணுகோபாலர்!

– சக்கரத்தாழ்வார்

படங்கள் : வெங்கடேஷ்



# மகத்தான ஒலிம்பிக்ஸின் விலை!

ஓட்டப் பந்தயத்தைத் தொலைக் காட்சியில் பார்க்கிறீர்கள். அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. வென்றவர்கள் களைப்பையும் மீறி உற்சாகம் கொள்கின்றனர். எந்தெந்த நாடுகள் எத்தனை பதக்கங்களைப் பெற்றன என்ற பட்டியல் ஒலிம்பிக்ஸ் நடைபெறும் பதினைந்து நாட்களுக்கும் மாறிக் கொண்டேயிருக்கிறது.

ஆனால் ஒலிம்பிக்ஸ் என்பது பெருமைகளும் தேசப்பற்றும் உற்சாகக் கூக்குரல்களும் மட்டுமல்ல. அங்கு பல கனவுகள் அழிகின்றன. பல நம்பிக்கைகள் சிதைகின்றன. தோல்வியின் வலி பலரை எழுந்திருக்க முடியாமல் செய்திருக்கிறது.

டான் ரஸல் பிரபல நடை பந்தய வீரர். ஐம்பது கிலோ மீட்டர் நடைப்பந்தயம் ஒன்று கோலாலம்பூரில் நடைபெற்றபோது பாதிப் போட்டியில் அவருக்குத் தலைசுற்றல். உடலில் சர்க்கரை அளவு வெகுவாகக் குறைந்து போக, ஒலிம்பிக்ஸுக்குப் பிறகு அவர் பல நாள் சிகிச்சை எடுத்துக் கொள்ளச் வேண்டியதாயிற்று.

அதே பந்தயத்தில் நியூஸிலாந்தைச் சேர்ந்த கிரேய்க் பாரட் என்பவர் மற்றவர்களை விட சுமார் ஆறு நிமிட அளவில் முன்னணியில் இருந்தார். 35 டிகிரி வெப்பத்தைத் தாங்க முடியாமல் சிறிது ஓய்வெடுக்க எண்ணினார். நிலைமை மோசமானது. தலைசுற்றல். குழுவின் அதிகாரிகள் உற்சாகப்படுத்தியவுடன் எழுந்து நின்றார். மீண்டும் துவண்டு உட்கார்ந்தார். அதிகாரி ஒருவர் அவரைத் தொட்டு எழுப்ப, அவரைப் பொறுத்தவரை அந்தப் போட்டி முடிந்து விட்டது.

ஒலிம்பிக்ஸ் முடிந்த கையோடு நாம் ஒலிம்பிக்ஸ் வீரர்களை மறந்து விடுவோம். அதுவும் தோற்றவர்களை இன்னும் வேகமாக மறந்து விடுவோம். குத்துச் சண்டை வீரர்கள் கைகளிலும் மூக்குகளிலுமாக உடைந்த எலும்புகளைச் சரிசெய்து கொள்ள மாதக் கணக்கில் சிகிச்சை எடுத்துக் கொள்வார்கள். குதிரையேற்ற வீரர்களின் தோள் நரம்புகள் பிசகுவதும், ஜிம்னாஸ்டிக்ஸ் வீரர்கள் கடும் தசைப் பிடிப்பினால் அவதிப்படுவதும் தொடரும்.

பிரபல ஆஸ்திரேலிய நீச்சல் வீரர் இயான் தோர்பேயின் தசைப் பகுதிகள்



• கால்கட்டுடன் டான் ஓ ப்ரையன்

சென்ற ஒலிம்பிக்ஸில் நீச்சல் பந்தயம் முடிந்த அடுத்த நாளே கடுமையாகப் பிடித்துக் கொண்டு விட, நகர முடியாமல் பல நாட்கள் அவதிப்பட்டார்.

ஒலிம்பிக்ஸ் களத்தில் தான் இந்த உள் மற்றும் வெளிக் காயங்கள் ஏற்பட வேண்டும் என்பதில்லை.

அதற்கு சமீப உதாரணம் டான் ஓ ப்ரையன். சென்ற அட்லாண்டா ஒலிம்பிக்ஸில் டெகாத்லான் பிரிவில் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றவர் இவர். சிட்னி ஒலிம்பிக்ஸுக்காக இவர் தயாரானபோது தகுதிச் சுற்றில் இவரது இடது பாதத்தில் கடும் வலி ஏற்பட்டது. குதிகாலையும் முன்புற பாதத்தையும் இணைக்கும் திசுவில் பயங்கர சேதம் ஏற்பட, அவரது சிட்னி ஒலிம்பிக்ஸ் கனவு சிதறிப் போனது. காரணம் அமெரிக்க விளையாட்டு விதிகளின்படி தகுதிச் சுற்றில் முதல் மூன்று இடங்களில் வருபவர்களுக்கு மட்டுமே ஒலிம்பிக்ஸில் அனுமதி. சென்ற ஒலிம்பிக்ஸ் சாம்பியனுக்குக் கூட விதிவிலக்கு இல்லை.

ஒலிம்பிக்ஸ் வெற்றிக்கான விலை மகத்தானதுதானே.

— குல்லூ

# கன்னட திருவள்ளுவர்!

***'பெங்களூரில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட வேண்டும்' என்பது வீரப்பனின் பத்து கோரிக்கைகளில் ஒன்று. ''பெங்களூரில் திருவள்ளுவருக்கும் சென்னையில் சர்வக்ஞருக்கும் சிலை வைக்கப்படும் என்றும், 'திறப்பு விழாக்களில் இரு மாநில முதல்வர்களும் கலந்து கொள்வார்கள் என்றும் வீரப்பனுக்கு பதில் கூறப்பட்டது. அய்யன் திருவள்ளுவருக்கு இணையாக கருதப்படும் சர்வக்ஞர் யார்?***



கர்நாடக மாநிலம், தார்வார் மாவட்டம், ஹூரே கரூர் அருகில் இருக்கும் மாசூர் என்ற சிறு கிராமத்தைச் சேர்ந்த ஆராத்ய பிராமணர் பசவரசா. இவரது மனைவி அக்கமல்லம்மாள். இந்தத் தம்பதிக்கு நீண்ட காலம் குழந்தைப்பேறு இல்லை. மனைவி அக்கமல்லம்மான் கணவரை காசிக்குப் போய் பிள்ளை வரம் கேட்டு பிரார்த்தித்து வரச் சொன்னார். பசவரசாவும் மிகக் கஷ்டப்பட்டு காசிக்குச் சென்று காசி விஸ்வநாதரை உருகி வேண்டிக் கொண்டு ஊர் திரும்பினார். ஆனால் மாசூரை அடைவதற்குள் மழை வந்து விட்டதால் அம்பாளூர் என்ற இடத்தில் மாலன் என்னும் குயவர் வீட்டில் தங்கி விட்டார். மாலன் வெளியூர் சென்றிருந்ததால் அவர் மனைவி மாலி மட்டும்தான் வீட்டில் இருந்தார். பசவரசாவை நன்கு உபசரித்து கவனித்தாள் மாலி. இரவு + மழை, பசவரசாவையும், மாலியையும் நெருங்க வைத்தது. பசவரசா ஒரு வாரத்திற்கு மேல் மாலி வீட்டிலேயே தங்கி விட்டார். இந்தத் தொடர்பில் பிறந்தவர்தான் சர்வக்ஞர்.

பதினாறாம் நூற்றாண்டில் சர்வக்ஞர் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. சரியான வரலாற்றுக் குறிப்புகள் இல்லை.

கொஞ்சம் விவரம் தெரியும் வயதில், சர்வக்ஞருக்கு தன் பிறப்பின் ரகசியம் தெரியவந்தது. சொந்தத் தாயால் வீட்டை விட்டே துரத்தப்பட்டார். நாடோடியாக அலைந்தார். பசிக்கு உணவு கொடுத்த ஒவ்வொருவரும் அவரை முதலில் கேட்ட கேள்வி, ''அவர் என்ன ஜாதி?'' என்பதுதான். இதனால் பாதிப்படைந்த மனம் ஜாதி உணர்வுகளைச் சாடியது. கால் போன போக்கில் நடந்து, அனுபவங்களை கவிதையாகக் கொட்டுகிறார் சர்வக்ஞர். இறைவனுக்கு ஜாதிகளில்லை. சமயங்களில் உயர்ந்தது, தாழ்ந்தது, மேலானது என்று எதுவும் இல்லை; ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை என்று பாடியவர் சர்வக்ஞர்.

திருவள்ளுவர் ஒன்றே முக்கால் அடியில் சொன்னார் என்றால் சர்வக்ஞர் மூன்றடி கவிதையில் சொல்கிறார். இவரது பெரும்பாலான கவிதைகளில் இறுதியாக, ''சர்வக்ஞா'' என்று முடிகிறது. அதன் காரணமாக, ''அவரது பெயர் சர்வக்ஞர்'' என்று கன்னட இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர்.

வடமொழி இலக்கியத்தில் பர்த்ருஹரிக்கும், தெலுங்கில் வேமன்னாவிற்கும், தமிழில் திருவள்ளுவருக்கும் இணையாக கன்னட இலக்கியத்தில் சொல்லப்படுகிறார் சர்வக்ஞர்.

— ப்ரியன்

# இங்கிலீஷ், இங்கிலீஷ்!

"நீ என்னப்பா ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி. நீ நெனச்ச இடத்துக்கு நெனச்ச நேரம் போயிட்டு வருவே. உன்கிட்ட கார் இருக்கு."

"நீ நெனச்சதை சாதிக்கலாம். உனக்கு அந்த ஏரியால நெறய friends இருக்காங்க."

இது போல ஒருத்தர்கிட்ட இருக்கற பொருள், அவரது உறவுமுறை பற்றிக் குறிப்பிட 'have'ங்கற வார்த்தையை use பண்ணலாம்.

டிக்ஷனரியைப் புரட்டிப் பாத்திங்கன்னா 'have'ங்கற வார்த்தைக்கு அர்த்தம் 'பெறு', 'பெற்றிரு'ன்னு எழுதியிருப்பாங்க. ஆனா.... இந்த வார்த்தைக்கு ஏகப்பட்ட அர்த்தங்கள் இருக்கு.

ஒவ்வொண்ணாச் சொல்றேன். கவனமா கேளுங்க.

Possession, அதாவது உடைமைகளைக் குறிப்பிட 'have'ங்கற வார்த்தையை எப்படி use பண்ணணும்னு முதல்ல பார்க்கலாம்.

நம்மகிட்ட இருக்கற பொருட்களைப் பத்திப் பேசறப்போ அதாவது என்கிட்ட 'bike' இருக்குன்னு சொல்லணும்னா 'I have a bike'னு சொல்லலாம்.

அவரிடம், அவளிடம் என்று மூணாவது ஆளுங்களைப் பத்திப் பேசறப்போ 'has'ங்கற வார்த்தையை use பண்ணணும்.

'அவர்கிட்ட ஒரு கார் இருக்கு'-ங்கறதை He has a carன்னு சொல்லணும்.

இதே போல அவளிடம் ஒரு ஸ்கூட்டர் இருக்



குங்கறதை She has a scooterனு சொல்லுங்க.

ஞாபகத்துல வச்சுக்கங்க. He, she, It அதாவது அவன், அவள், அது என்று மூன்றாவது நபர்களைப் பற்றி நிகழ்காலத்தில் (present tenseல) பேசும்போது 'have'க்குப் பதிலா 'has'ங்கற வார்த்தையைத்தான் use பண்ணணும்.

ஆனா அவங்க(they)கிட்ட ஒரு Van இருக்குன்னு சொல்லும்போது They have a vanன்னு சொல்லணும். (He, she, it கூடத்தான் hasஐ use பண்ணணும்.)

சரி, ஒருத்தர்கிட்ட உள்ள பொருளைப் பத்தி இதுவரை பார்த்தோம்.

ஒருவரது உறவுமுறைகளைப் பத்திப் பேசறப்போ have, hasங்கற வார்த்தையை use பண்ணலாம். உதாரணமா "எனக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள்" என்பதை I have two brothers'னு சொல்லலாம். இதே போல She has two brothers. அவளுக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.




எனக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருக்கிறார்கள் என்பதை 'I have two brothers and three sisters' என்று சொல்லலாம். 'அவளுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன' என்பதை 'She has two children' என்று சொல்லுங்கள்.

அவனுக்கு பம்பாயில் sorry, மும்பையில் ஒரு நண்பன் இருக்கிறான் என்று எப்படிச் சொல்வீர்கள்? ரொம்ப simple.

He has a friend in Mumbaiனு சொல்லலாம்.

இதே போல எனக்கு இங்கே நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதை I have a lot of friends here என்று சொல்லலாம்.

சரி, இப்போ நான் உங்ககிட்டே சில தமிழ் வாக்கியங்களைச் சொல்றேன்.

எல்லாத்தையும் டக் டக்குனு இங்கிலீஷ்ல சொல்லுங்க பார்க்கலாம்.

1. அந்தக் கம்பெனிக்கு இந்தியாவில் 12 கிளைகள் உள்ளன; 2. அவருக்கு சென்னையில் மூன்று வீடுகள் உள்ளன; 3. என்னிடம் நிறைய புத்தகங்கள் உள்ளன; 4. எனக்கு ஒரே ஒரு சகோதரன்தான் இருக்கிறான்; 5. என்னிடம் ஒரு பூட்டும், சாவியும் இருக்கிறது.

என்ன answer ரெடியா? சரி, மடமடன்னு சொல்லுங்க...

1. That company has 12 branches in India. அந்தக் கம்பெனிக்கு இந்தியாவில் 12 கிளைகள் உள்ளன.

2. He has three houses at Chennai. அவருக்கு சென்னையில் மூன்று வீடுகள் உள்ளன.

3. I have a lot of books. என்னிடம் நிறைய புத்தகங்கள் உள்ளன.

4. I have only one brother. எனக்கு ஒரே ஒரு சகோதரன்தான் இருக்கிறான்.

5. I have a lock and key. என்னிடம் ஒரு பூட்டும், சாவியும் இருக்கிறது.

சரி, We have a lot to see.

அடுத்த வாரம் பார்க்கலாம்.

வி. ராஜகோபாலன்

தேவி தியேட்டரில் பகல் காட்சி தொடங்குவதற்கு முன், சிநேகிதியே கேஸட் வெளியீட்டு விழாவை முடித்து விடலாம் என்ற திட்டத்தோடு காலை பத்து முப்பது மணி என்று அழைப்பிதழில் போட்டிருந்தார்கள். இதை மனத்தில் கொண்டு சரியான நேரத்திற்கு தியேட்டருக்குள் நுழைந்தால்... பத்து பேர் உட்கார்ந்திருந்தார்கள்! திரைக்கு முன் ஒளி ஒலி அமைத்தவர், 'மைக் சோதனை' செய்து கொண்டிருந்தார். வெறுத்துப் போய் வெளியே வந்து நின்றால், ஒரு வெளிநாட்டுக் காரிலிருந்து டைட் பேண்ட், டாப்ஸ் சகிதம் ஜோதிகா வந்து இறங்கினார். விழா அழைப்பாளர்கள் அவரை உள்ளே அழைத்து வந்து உட்கார வைத்ததுதான் தாமதம், அவ்வளவு கூட்டமும் எங்




# 'காட்ஃபாதர்' ப்ரியதர்ஷன்!

கிருந்துதான் வந்ததோ... கணத்தில் தியேட்டர் நிரம்ப, திடீரென்று விளக்குகள் அணைந்து, திரையில் வெளிச்சம் படர்ந்தது. ப்ரியதர்ஷனின் கவித்துவ இயக்கத்தில், ஜீவாவின் ஜீவனுள்ள ஒளிப்பதிவில், வைரமுத்துவின் டைமண்ட் வரிகளில், வித்யாசாகரின் விஸ்வரூப அதிரடி இசையில், சிநேகிதியே படத்திலிருந்து மூன்று பாடல்களைப் போட்டுக் காட்டினார்கள்.

"பாட்டிலேயே கதை தெரிகிறது. ப்ரியதர்ஷனிடம் முதிர்ச்சி தெரிகிறது. காதல், காமெடி, சமூகம், வரலாறு என்று எந்த மாதிரிப் படமெடுத்தாலும் தனித்துவத்துடன் தன்னை வெளிப்படுத்தும் ப்ரியதர்ஷனின் 'சிறைச்சாலை' படத்தை யாராலும் மறக்க முடியாது. அப்படிப்பட்ட நல்ல கலைஞரின் இன்னொரு சோதனை முயற்சி இது. 'கதை வரும் காலத்தில், பெண்களை மட்டுமே வைத்து சோதனை முயற்சியைச் செய்திருக்கும் இவரை ஒரு விஷயத்திற்காக பாராட்ட வேண்டும். "படம் முழுவதும் இளமை ததும்புகிறது... வெற்றி உறுதி" – சர்டிபிகேட் கொடுத்தவர் கமல்ஹாசன்.

வைரமுத்து அவருக்கே உரிய ஆய்வு கட்டுரை வாசிக்கும் பாணியில் பேசினார். "வயதை பல விதமாகப் பிரிக்கலாம். சிலர் இருபது வயதில் எழுபது வயது போல் தெரிவார்கள். இன்னும் சிலர் எழுபது வயதில் இருபது போல் தெரிவார்கள். இதில் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர் ப்ரியதர்ஷன். அவரது மனசு இளமையாக இருக்கிறது. அவரது தோற்றமும் இளமையாக இருக்கிறது. எனவேதான் இளமையாகவே படமெடுத்திருக்கிறார். அவர் தனது ஐம்பதாவது படத்தைத் தமிழில் எடுக்க வேண்டும்" என்றதும், எல்லோரும் வஞ்சகனை இல்லாமல் கை தட்டினார்கள்.

கொஞ்சிக் கொஞ்சி ஆங்கிலத்தில் பேசிய ஜோதிகா, "என்னைக் கண்டுபிடித்து சினிமாவில் அறிமுகப்படுத்தியவர், எனது குரு காட்பாதர் ப்ரியதர்ஷன்தான், அவரே எனக்கு மீண்டும் வாய்ப்பு கொடுத்திருக்கிறார். இதனால் எல்லா மாநிலத்திலும் எனக்கு அறிமுகம் கிடைக்கும்" என்றதும், ப்ரியதர்ஷன் முகத்தில் ஐஸ்கிரீம் ரேகைகள் ஜொலித்தன. இறுதியில், கமல் வெளியிட, சிநேகிதியே ஒலிப் பேழையை ராஜீவ்மேனன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் ஒரு சோகமும் உண்டு. ஆங்கிலச் சொற்களே கலக்காமல், தூய தமிழில் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய டி.வி தொகுப்பாளினி ராதிகாவை யாரும் பாராட்டவே இல்லை.

— விஷுவல்தாசன்
படம்: வெங்கடேஷ்

# ஸ்ரீ டிராவல்ஸ்

194 - அ. முதல் மாடி, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.
போன்: 5568620; பேஜர்: 9632 - 727724; இ - மெயில்: sritrave@satyam.net.in

தசரா விடுமுறையை உங்கள் குடும்பத்துடன் குதூகலத்துடன் கண்டு மகிழுங்கள்

அந்தமான் தீவின் இயற்கை அழகை கப்பல் மற்றும் விமானப் பயணத்தின் மூலம் கண்டு களியுங்கள்

சென்னை - போர்ட் பிளேர் - சென்னை

பயணக் கட்டணம்:ரூ.11,500/- பயண நாட்கள்:10

புறப்படும் தேதி: 29.9.2000

**தூரக் கிழக்காசிய சுற்றுலாக்கள்**

சென்னை - பாங்காக் - பட்டாயா - சிங்கப்பூர் - கோலாலம்பூர் - சென்னை

பயணத் தொகை:ரூ.38,000/- பயண நாட்கள்:11

புறப்படும் தேதி: 29.09.2000

(விமானக் கட்டணம், உணவு, விமான நிலைய வரிகள், விசா, உட்பட) பாஸ்போர்ட் உள்ளவர்களுக்கு மட்டும்

**பூடான், சிக்கிம், டார்ஜிலிங் சுற்றுலா**

சென்னை - பூரி - புவனேஷ்வர் - கல்கத்தா - டார்ஜிலிங் - கேங்டாக் (சிக்கிம்) - திம்பு (பூடான்) - சென்னை

பயணத் தொகை:ரூ.6,000/- பயண நாட்கள்:10

புறப்படும் தேதி: 18.10.2000

**சிக்கிம், டார்ஜிலிங், நேபாள சுற்றுலா**

சென்னை - பூரி - புவனேஷ்வர் - கல்கத்தா - டார்ஜிலிங் - காத்மாண்டு - போக்ரா - வாரணாசி - அலகாபாத் - சென்னை

பயணத் தொகை:ரூ.6,900/- பயண நாட்கள்:18

புறப்படும் தேதி: 10.09.2000

(விமானப் பயணம் வேண்டுவோருக்கு பிரத்தியேக வசதி உண்டு)

**காசியில் தீபாவளி கங்கா ஸ்நானம் முடித்து, நேபாளத்தில் பசுபதிநாதரையும் தரிசனம் செய்யுங்கள்**

சென்னை - வாரணாசி - அலகாபாத் - கயா - காத்மாண்டு - போக்ரா - கோரக்பூர் - சென்னை

பயணத் தொகை:ரூ.6,000/- பயண நாட்கள்:10

புறப்படும் தேதி: 28.10.2000

(வாரணாசி - காத்மாண்டு - வாரணாசி விமானப் பயணம் வேண்டுவோருக்கு பிரத்தியேக வசதி உண்டு)

மேற்கண்ட அனைத்து சுற்றுலாக்களுக்கும் அருமையான தங்கும் அறைகள், தென்னிந்திய சைவ உணவு, ரயில் கட்டணம், இடங்களைச் சுற்றிப் பார்க்கும் வசதி அனைத்தும் பயணக்கட்டணத்துக்குட்பட்டவை.

[illegible]

LTC வசதி உண்டு

உங்கள் குடும்பத்துடனோ மற்றும் நண்பர்களுடன் சுற்றுலா மற்றும் அனைத்து இடங்களுக்கும் செல்ல எமது சொகுசு பேருந்தை (12 Seater - A/C Push Back Coach) பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

---

# SAMLESHWARI PACKAGING PVT.LTD

**6-7 INDUSTRIAL AREA, GOTAN - 342902**
**DISTT: NAGAUR - RAJASTHAN**
**PHONE: 01591 - 64410-64710-30310**
**FAX: 01591 - 30110**

Manufacturer & Supplier of

***PAPER LAMINATED HDPE BAGS***
***MULTIWALL PAPER BAGS***
***LAMINATED JUTE BAGS***
***BOPP LAMINATED PAPER***
***HDPE/PP BAGS***
***CO-EXTRUSION & LAMINATION***

Delhi office:
426 - SOUTH EX PLAZA - II
N.D.S.E - PART - II
NEWDELHI - 110049
PHONE : 011-6258810/6256349

# அலை உறங்கும் கடல்

"சொல்லு! நீ யாராவது வேத்து ஜாதிக்காரனைக் கல்யாணம் பண்ணிண்டு ஓடிப் போயிடலாம்னு திட்டம் வெச்சிருக்கியா?" என்று நீலுப் பாட்டி கேட்டாள்.

குலைநடுங்கிப் போய், பேச்சற்றவளானாள் உமாதேவி. வாழ்வில் எதிர்வரப் போகும் தினங்களை முன்னதாகக் கனவில் வாழ்ந்து பார்த்துச் சொல்வது அவளது வழக்கமாகி விட்டது. இது பலமுறை நிரூபணமான போதிலும் ஒவ்வொரு முறையும் அதிர்வேற்படுத்தத் தவறுவதில்லை, பிறருக்கு.

இதுகாறும் தன்னுடையதும் அருள்தாஸுடையதுமான மனங்கள் மட்டுமே உணர்ந்த ஒரு சிறகடிப்பு அது. அடுத்து இன்னது செய்யப் போகிறோம் என்ற சிந்தனையே அற்று, நிகழும் கணங்களில் களி கொண்டாடும் சித்தம். நெஞ்சப் படபடப்பும் மிதமான பயமும் மேலான பரவசமுமாக சவுக்குக் காடுகளில் இருவர் மட்டும் கைகோத்துத் திரிந்த காட்சியை - கடவுளே! பாட்டி தன் கனவில் பார்த்து விட்டாளா?

"சொப்பனங்கள்ல ஏழு விதம் இருக்கு. அர்த்தமில்லாதது ஒரு வகை. புரியாதது இன்னொரு வகை. மனசுல இருக்கறதோட மறு வடிவமா வரது வேறொரு வகை. அமானுஷ்யம் நாலாவது. அர்த்தபூர்வம் அஞ்சாவது. சமிக்ஞை ஆறாவது, சங்கேதம் ஏழாவது. கடைசி ரெண்டு வகைதான் எனக்கு வர்றது. அது பலிக்கும். நிச்சயம் பலிச்சே தீரும். இன்னிக்கு என்ன கனா தெரியுமோ? நம்மாத்து வாச ஜன்னலுக்குப் புதுசா ஒரு கண்ணாடித் திரை போட்டிருக்கு. ஜன்னலே தெரியாம வெறும் கண்ணாடிதான். வெளில பெரிசா மழை கொட்டறது. தண்ணி படிஞ்சி ஒழுகற கண்ணாடில சுவாமி புறப்பாடு மங்கலா தெரியறது. இப்ப உற்சவம் ஒண்ணும் இல்லியேன்னு ஒரு பக்கம் யோசிச்சுண்டே இருக்கேனா, சடார்னு ஒரு அண்டங்காக்கா பறந்து வந்து கண்ணாடியை மூக்கால குத்தறது, குத்தறது, அப்படிக் குத்தறது! தடி எடுத்துண்டு வந்து விரட்டலாம்னு நான் உள்ளே போறேனா - அங்க ஒரு அதிசயம்! உன் புடைவை ஒண்ணு பட்டாம்பூச்சியா மாறி, பறந்து வரது. இது ஏதுடா பிரமாதமா இருக்கேன்னு திரும்ப ஓடி வந்தா, அதுக்குள்ள அந்தக் காக்கா, ஒரு பட்டாம்பூச்சி நுழையற அளவு துவாரம் போட்டிருக்கு! கட்டேல போக! என்ன பண்ணட்டும் நான்? பரிதவிச்சி நிக்கறேன். இருக்கறதே உனக்கு ரெண்டு புடைவை. அதுல ஒண்ணு இப்படிப் போறதுன்னா...? நாளைக்கு நீ பாதி குளிச்சிண்டே பாத்ரூம்லேருந்து, 'பாட்டி புடைவை எடுத்துண்டு வர மறந்துட்டேன், கொண்டு வா'ன்னு கத்தினா என்ன பண்ணுவேன்? பைத்தியம் மாதிரி, 'போகாதே போகாதே, காக்கா பொல்லாது'ன்னு கத்தறேன். ஆனா, பட்டாம்பூச்சி அந்த துவாரத்துல நுழைஞ்சு வெளியே போய் அந்த காக்காவோட ரெக்கைல உட்கார்ந்துடுத்து. ஐயோ, புடைவை மழைல நனையறதேன்னு அப்பவும் அபத்தமாத்தான் தவிச்சேன். திடும்னு அந்தக் காகம் ரெக்கை விரிச்சிப் பறக்க ஆரம்பிக்கவும்தான், அது புடைவையாகவும் இல்லாம, பட்டாம்பூச்சியாகவுமில்லாம வேற மாதிரி இருக்கறது தெரிஞ்சுது. உடனே முழிச்சுண்டுட்டேன். சொல்லு! நீ யாரோட ஓடப் போறே?"

இந்தக் கணம் பாட்டி இறந்து விட்டால் தேவலாம் போலிருந்தது உமாவுக்கு. ஒரு மந்திரவாதியாகவோ, சூனியக் கிழவியாகவோ காட்டுக் குகைகளில் மண்டையோடுகளின் நடுவே வாழ வேண்டியவள் நகருக்குள் ஏன் வசிக்கத் தலைப்பட்டாள் என்றிருந்தது.

"உனக்கு வேற வேலை இல்ல பாட்டி. உன் கனவைக் கொண்டு போய் வெந்நீர் அடுப்புல போடு!" என்று அகம் மறைக்கும் திரையொன்றை முகத்துக்கு மாட்டி, போலிச் சலிப்பைக் குரலில் கொண்டு வந்து மிரட்டி விட்டு

வாசலுக்குப் போனான்.

விநாடிக்கு விநாடி அவள் கலவரப் புயலில் சிக்கிச் சிதறிக் கொண்டிருந்தாள். அருள்தாஸ். அவனுக்கு என்னவோ ஆகி விட்டிருக்கிறது. இலங்கைக் கடற்படையினர் பிடித்து விட்டதாக வந்த செய்தி பொய்யாயிருக்காதா என்று தேம்பினாள். யாரைக் கேட்பது? எங்கு விசாரிப்பது?

ஒரு தீர்மானமும் தெளிவுமில்லாமல் கால் போனபடி தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தாள். உணர்வு மீண்ட போது அவள்



3

பா.ராகவன்

"பொண்ணு பார்க்கப் போனியே, ஏன் உடம்பெல்லாம் கட்டு?"
"கராத்தே தெரியுமான்னு ஒரு கேள்வி கேட்டுத் தொலைச்சேன்!"
- எஸ்.மோகன்



வேர்க்கோடு மார்க்கெட்டின் பின்புறமிருந்த குடிசைப் பகுதிக்கு வந்திருந்தாள். அந்தோணியார் கோயிலை ஒட்டிய அருள் தாஸின் வீடு.

அற்புத மேரியைப் பார்க்க வந்தது போலச் சொல்லலாமா என்று யோசித்தபடி நடக்க, அவளே கோயிலின் வெளியே இருந்த மாதாவுக்கு முன் மெழுகுவர்த்தி ஏற்றித் தொழுது கொண்டிருக்கக் கண்டாள். அருகே சென்று 'மேரி' என்று கூப்பிட்டாள்.

உடனே கையைப் பிடித்துக் கொண்டு அழத் தொடங்கியவள், அருள் கடற்படையினரிடம் சிக்கிக் கொண்டதை மீண்டும் உறுதி செய்தாள்.

அவளைத் தேற்றுவதா, தன் தேறுதலுக்குத் தோள் உண்டா என்று விளங்காமல் பிரமை கொண்டு நின்றாள் உமாதேவி.

"உனக்கு யார் சொன்னாவ?" என்று அற்புத மேரி கேட்டாள்.

''நேத்து ராத்திரி கேள்விப்பட்டேன் மேரி. சங்குமால்ல பேசிக்கிட்டாங்க.''

''அண்ணன் இப்பல்லாம் எல்லை தாண்டறதே இல்லை தெரியுமா? எப்பிடிப்போச்சு, எப்பிடி சிக்கிச்சின்னே தெரியலை. ஒரு தகவலும் இல்லை?''

''கூடப் போனவங்களுக்கு விவரம் தெரியலையா?''

''இல்லையே? முந்திநேத்து மதியம் கச்சத்தீவுல இறங்கி ஒண்ணாத்தான் சாப்ட்ருக்காவ. பொழுது சாய்ஞ்சி மூணு மணி ஆனதும் திரும்பிடலாம்னு பேசிக்கிட்டு மறுபடி தெக்கால போயிருக்காங்கோ. அந்தால ஆளுக்கொரு சைடு போனதுல அண்ணன் போட்டு போன சாடு புரிபடல்லே. வனில சுட்டுத் திம்பேன்னு ரெண்டு பெரிய மீனை எடுத்து எஞ்சின் மேல வெச்சானாம். அப்பத்தான் கடேசியா பாத்திருக்காவ. வல்லே...''

குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினாள் அற்புதமேரி. அவளை அணைத்தபடி குடிசையை நோக்கி நடந்த உமா, ''கம்ப்ளைண்டு குடுத்தாச்சில்ல?'' என்று கேட்டாள்.

"ஆச்சுது. ஆனா பயனில்ல. கவர்மெண்டும் கவர்மெண்டும் பேசி முடிச்சி ஆகிற காரியம். எத்தினி பேரு இப்படிக் காணாம ஆனாங்க தெரியுமா?"

சூட்சுமங்கள் விளங்காததொரு மாய முக்கோணத்தில் தான் நிறுத்தப்பட்டிருப்பதாக உணர்ந்தாள் உமா. அருள்தாஸ் காணாதது மட்டுமே பிரத்யட்சம். அவனை இலங்கைப் படை கைப்பற்றி விட்டதாகச் சொல்வது அனுமானம். அதற்கு சாட்சியேதும் இல்லை. ஆனால் எல்லை தாண்டிச் சென்றிருக்கிறான். அது உறுதி. அதனாலேயே இம்முடிவுக்கு வரவேண்டியதாயிருக்கிறது.

"பிடிச்சிட்டுப் போறதுன்னா ஆளைத் தானே? அப்ப போட்டு?"

அற்புதமேரி அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

"அதென்ன பேப்பர் கப்பலா, விட்டுட்டுப் போவ? அதையுந்தான்... சேத்துத்தான் ஓட்டிப் போவாக. திரும்பறப்ப, போட் ஒண்ணு குறையுதேன்னு தேடிப் பார்த்தப் பறம்தானே நம்மாளுவ நேரா நேவி ஆபீசுக்குப் போயிட்டு வந்தாவ. யேசுவே! நான் என்ன செய்குவேன்! வீட்டுல அம்மை சோறு திங்காம முடங்கிக் கிடக்கா உமா! வந்து பாரு!"

அருள்தாஸின் குடிசை பத்தடி விஸ்திரணமுள்ளதாயிருந்தது. அலுமினியத்தாலான பாத்திரங்களால் மண் தரை நிரம்பியிருக்க, சுவரில் இறந்த அவனது தந்தையின் சிவப்பு நிற பென்சில் ஓவியம் சட்டமிடப்பட்டு மாட்டியிருந்தது. இரு பூனைகள் கேட்பாரற்று உள்ளே நுழைந்து, பின்புறமாக வெளியேற, 'அம்மே' என்றாள் மேரி.

பின்புறக் கதவருகே விசும்பலுடன் ஒரு கந்தல் சுருளாகப் படுத்திருந்த ரீட்டா கண்திறந்து, பின் எழுந்தாள்.

ஒருகணம், இவள் தன் வருங்கால மாமியார் என்கிற உணர்வு உமாவுக்கு

மேலோங்க, திரைப்படம் போன்றே சம்பவங்கள் இனி தன் வாழ்வில் நிகழுமோ என்று ஐயங்கொண்டாள்.

"ஆரு?"என்றாள் அருள்தாஸின் தாய்.

"உமான்னு என் சிநேகிதி அம்மை. தைய வகுப்புப் பழக்கம்" என்று மேரி சொன்னாள்.

"உக்காரும்மா" என்றவள், "என் மவனைக் கொண்டு போயிட்டாவளே!" என்று உரத்த குரலில் அழத் தொடங்கினாள்.

"அழாதீங்கம்மா!" என்று உமா சொன்னாள். உண்மையில், எல்லாரையும் அமைதியாக எதிரில் உட்காரச் சொல்லிவிட்டுத் தான் கதறி அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு. அது தனக்காகவா, அருள் தாஸுக்காகவா ஏற்பட்டு விட்ட தொடர்புக்காகவா, நேரப் போகும் பின்விளைவுகளுக்காகவா என்று அவளுக்குப் புரியவில்லை. காகத்தின் இறக்கை பற்றிப் பேசும் பாட்டி, காகம் எங்கே என்றும் கண்டுபிடித்துச் சொன்னால் தேவலை.

நேவிக்காரர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டிருப்பதாக அருள்தாஸின் அம்மா சொன்னாள். சிவலிங்கம் போன்ற மேனியும் கனத்த ஆகிருதியும் உயரமுமான ஒரு பெண்மணி, மூக்கொழுகுவதைத் துடைக்காமல், தலை முடியாமல், அழுதபடி பேசுவதைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது உமாவுக்கு. அற்புதமேரிக்குக் கூட அவளது அம்மாவின் முகஜாடைதான். அருளுக்கு மட்டும் எப்படி இந்த வம்சம் காணாத தொரு பொலிவு முகத்துக்கு வாய்த்தது என்று தோன்றியது. கூடவே, இப்போது கையாலாகாதவளாக அழுகிற இப் பெண்மணி, தான் மருமகளாக வந்தால், சண்டைக்காரி அவதாரமெடுக்கக் கூடுமென்றும் தோன்றியது.

தனியே ஒரு வீடு. ராமேஸ்வரம் வேண்டாம். கடல் வேண்டாம். மீன் வேண்டாம். மண்டபம் தாண்டி வேறெங்காவது ஒரு வீடு. பிழைப்புக்கொரு சிறு கடை. எளிய வாழ்க்கை. இனிய புன்னகை. இதமான சொற்களில் மேலான தாம்பத்யம். கேட்கும் விதத்தைப் பொறுத்து அருள்தாஸ், இதற்கு ஒப்புக் கொள்ளக் கூடுமென்றே அவள் நினைத்தாள். அந்தோணியாரோ, நம்பு மாரியம்மனோ, ராமநாதரோ, இதற்கு உதவித் தானாக வேண்டும். அவனைச் சந்தித்த நாள்தொட்டு, முடிந்து வைத்த ஒரு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை ஏறிக் கொண்டே வருகிறது. ஒரு மாறுதலுக்கு ஏற்றி வைத்து உருகிய மெழுகுவர்த்திகள் மனத்தில் இன்னும் நின்று எரிகின்றன, சுடர் விட்டு.

அருள்தாஸின் அம்மா கேட்டாள். "ஐயரு பொண்ணா நீயி? நம்ம வீட்டுக்கெல்லாம் வரே? காப்பித் தண்ணி குடுக்கமா?"

"வேண்டாம்மா" என்று உடனே மறுத்தவள், சட்டென்று "சரி குடுங்க" என்றாள் சம்மணமிட்டு உட்கார்ந்தவண்ணம்.

"உங்க பையன் வந்துருவாரும்மா. கவலைப்பட்டுட்டே இருக்காதீங்க. மேரி சொல்லியிருக்கா, அவங்கண்ணனைப் பத்தி. சுறா மீனோடவெல்லாம் எம்.ஜி.ஆர். மாதிரி சண்டை போட்டவராமே?"

இப்போது அவள் முகத்தில் இலேசான புன்னகையொன்று உதித்து, இறுக்கம் இளகியது. மூக்கைத் துடைத்துக் கொள்ளவும் இம்முறை தவறவில்லை.

**கை நழுவிய பரிசு!**



**மீரா நாயர் ஞாபமிருக்கிறதா? சலாம் பாம்பே படம் எடுத்தவர். அவருக்கு அண்மையில் அமெரிக்காவில் ஓர் இலக்கிய அமைப்பு நடத்திய அறிமுக எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு அறிவிக்கப்பட்டது. ஆனால், அவர் எழுதிய சிறுகதை ஒன்று ஒரு பத்திரிகையில் பிரசுரமாகி உள்ள விஷயம் தெரியவர, பரிசு பெறும் தகுதி இழந்துவிட்டார். இரண்டாம் இடம் பிடித்தவருக்கு முதல் பரிசு வழங்கப்பட்டுவிட்டது.**

**- எம்.**


மறக்காமல் கையைக் கழுவிக்கொண்டே காப்பித் தூளைக் கொதிக்கும் நீரில் போட்டாள். அருந்தி விட்டு, மேலும் ஆறுதல் சொல்லிப் புறப்பட்டபோது அற்புத மேரி, மெயின் ரோடு வரை உடன் வந்தாள்.


சற்றும் எதிர்பாராததொரு கணத்தில் அடர்ந்திருந்த மௌனத்தைக் கலைத்தவளாக உமாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னாள்: "எனக்கும் அம்மைக்கும் தெரியும் உமா. அண்ணன் உங்க விசயத்தைச் சொல்லீருக்கு மின்னமே. உன் துக்கத்தை மறைச்சி மறைச்சே வெக்காத. அளுதுரு. எங்கிட்டவே அளுதுரு; இல்லே வெடிச்சிப் போவும் மனசு!"

உறைந்து நின்றாள் உமா.

(தொடரும்)







# அத்வானி ராஜினாமா?

அமர்நாத் யாத்ரிகர்கள் படுகொலை விஷயத்தில் டென்ஷன் ஆன மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி பதவியை ராஜினாமா செய்ய விருந்தார். விஷயம் கேள்விப்பட்ட பிரதமர் வாஜ்பாய் "ராஜினாமா? ம்ஹூம். ஏற்க மாட்டேன்'' என்று கூறி விட்டு நிறைய அட்வைஸ் செய்தாராம் அத்வானிக்கு!

"இந்த நேரத்தில் நீங்கள் ராஜினாமா செய்தால் மத்திய அரசின் உள்துறை அமைச்சரே காஷ்மீர் விஷயத்தில் தோற்று விட்டார் என்ற பிரசாரம் விஸ்வரூபமெடுக்கும். பிறகு அரசுக்கு அதுவே பெரிய நெருக்கடியை ஏற்படுத்தி விடும்'' என்றாராம் வாஜ்பாய். தர்பார் வட்டாரக் கிசுகிசு இது!

ஆனால் இந்த ராஜினாமா விஷயத்தில் ஒரு நாடகம் நடந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, அப்போதைய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவாண் காஷ்மீர் விவகாரத்தில் தோல்வியடைந்தார். என்ன செய்யலாம் என்று யோசித்த ராவ், 'காஷ்மீர் துறை' என்று ஒரு தனிப் பிரிவையே ஏற்படுத்தினார்.

இந்தப் பிரிவில் மத்திய உள்துறை, பாதுகாப்பு அமைச்சகம், வெளியுறவுத் துறை, புலனாய்வுத் துறை ஆகியவைக் கூடி முடிவெடுக்கும். இதே மாதிரி இப்போதும் காஷ்மீர் பிரச்னை பிரதமரின் நேரடி பார்வைக்கு வரும் என்று ஒரு பேச்சு எழுந்தது. இதை உறுதிபடுத்தும் விதமாக அமர்நாத் யாத்ரிகர்கள் படுகொலை நடந்த இடத்தைச் சென்று பார்த்த வாஜ்பாய் அறிக்கையெல்லாம் விட, ஒரு நிமிடம் ஆடிப் போய் விட்டாராம் அத்வானி.

அரசியல் நிர்ணய சாசனத்தின் அடிப்படையில் பேச்சு வார்த்தை இல்லை என்பதுபோல் ஒரு பிரதமரே பேசியது இதுதான் முதல் தடவையாம்!

ஃபாரூக்கின் பேச்சு இதைவிட அதிர்ச்சியளித்திருக்கும் அத்வானிக்கு! பின்னே, 'யாத்ரிகர்க்ள் கொலையில் ராணுவத்துக்கும் பங்கு உண்டு'' என்று சொன்னால் எப்படி! உண்மையில் மாநில போலீஸ் தற்காப்புக்காகச் சுடப் போய் உயிர்ச்சேதம் அதிகமாயிற்றாம். தம் மேல் பழி விழுமுன் மத்திய அரசைக் குற்றம் சாட்டிவிட வேண்டும் என்கிற அவசரம்தான் அப்துல்லாவுக்கு என்பதும் தர்பார் கிசுகிசு!

— இந்த்ரப்ரஸ்தன்

# "என்னமோ செய் கபாலி!"



"நீங்க எப்படி டைரக்‌ஷன் தொழிலுக்கு வந்தீங்க?"

"அது ஒரு பெரிய கதை."

"உங்க படத்துலதான் கதை இருக்காது; இந்தக் கதையையாவது சொல்லுங்க!"

– வந்தவாசி பா. ஜெயக்குமார்

"மத்தவங்க மாதிரி பைக், கார்'ன்னு சின்னதா திருடாம கொஞ்சம் பெரிசா திருடலாமே'ன்னு நெனச்சு திருடப்போய் இப்படி வசமா போலீஸ்ல மாட்டிக்கிட்டேன்."

"அப்படி என்ன நீ லாரியையா திருடினே?"

"இல்லே.... ரோடு ரோலரை!"

– ராசிபுரம் சம்பத்குமார்.





"நான் திருடறதை விட்டுடலாம்னு இருக்கேன் சார்!"

"என்னமோ செய் கபாலி... ஆனா மாமூல் மட்டும் ரெகுலரா கொடுத்திடு!"

– ஜூனியர் சக்தி

"ரொம்ப மாடர்ன் கல்யாணமா, எப்படி சொல்றே?"

"நலங்கு விளையாட்டுக்குப் பதிலா பொண்ணும் மாப்பிள்ளையும் கம்ப்யூட்டர் கேம்ஸ் ஆடிட்டு இருக்காங்களே!"

– 'அஜந்தா' மஹேந்திரநாத் ராவ்



''லேடீஸ் ட்ராமா'' என்றதுமே வயிற்றைக் கலக்கியது. ''அவசியம் வர வேண்டும்'' என்றவுடன் கலக்கம் இரட்டிப்பானது. எழுதுவதற்கு ஏதாவது நல்ல விஷயம் அகப்பட்டால் திருச்செம்பூர் முருகனுக்கு, குழுவில் யாரையாவது இளநீரை பால் காவடி எடுக்கச் சொல்ல வேண்டும் என்ற பிரார்த்தனையுடன்தான் மும்பை சிவகாமி ஆடிட்டோரியத்தில் காலை வைத்தோம்.

ஆனால்... செம்பூர் ஃபைன் ஆர்ட்ஸின் மகளிர் அணி அரங்கேற்றிய 'சப்தபதி' நாடகத்தைப் பார்த்த பிறகு, குழு மொத்தத்தையுமே பால் அபிஷேகம் பண்ணச் சொல்லலாம் போலாகிவிட்டது.



எதிர்பார்ப்பு குறைவாயிருந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியான மகிழ்ச்சியெல்லாமில்லை. ஒன்றரை மணி நேரமும், நெளியாமல், பாப்கார்ன் சாப்பிடப் போகாமல், ஸீட்டில் கட்டிப் போட்டு ஆடியன்சை நாடகத்தில் ஒன்றச் செய்ததென்பது இந்தப் பெண்களின் இமாலய வெற்றிதான்.

வெற்றியில் பெரும்பங்கு நாடகத்தை எழுதி, இயக்குவதிலும் ஒத்துழைத்த 'பாம்பே சாணக்யா'வைச் சாரும். தாய் மண்ணை மறக்காமல் இந்தத் தாய்க்குலங்களுக்கு கை கொடுத்திருக்கிறார். பாலசந்தரின் அஸிஸ்டெண்டாகப் பணிபுரியும் இவரின் ''டைரக்டோரியல் டச்'' ஆங்காங்கே பளிச் பளிச் சென்று மின்னுகிறது.

'நறுக், சுருக்' வசனங்கள், 'சிக்' கென்ற செட் - ஒரு மேடையில் இரு வீடுகளை அமைத்திருப்பது - ப்ளஸ் பாயின்டுகள். நடித்தவர்களின் உழைப்பு, கூடுதல் போனஸ்.

சாதாரணக் கதைதான். இரண்டு குடும்பங்கள் - ஒன்றில் ஆணாதிக்கம், மற்றொன்றில் பெண்ணாதிக்கம். ஒரு கால கட்டத்தில் ஆட்சி மாறுகிறது.

அதாவது, இங்கே பெண்ணின் கையும் அங்கே ஆணின் கையும் ஓங்குகிறது. இதனால் ஏற்படும் குழப்பங்கள், சுவாரஸ்யமான திருப்பங்கள், முடிவில் முடிச்சவிழ்ந்து சுபம். ஆணாதிக்க டீமில் ஒரு கணவன், மனைவி, மகன், மாமியார். பெ.ஆ. டீமில் கணவன், மனைவி, அம்மா, மைத்துனி, செக்ரட்டரி.



முதல் முறையாக அரங்கேற்றுகிறார்களே.. டயலாக்கை மறந்துவிட்டு ஒரு திரு... திரு... ஒன்றுக்கொன்று உளறி விட்டு ஒரு பேய் முழி; அட்லீஸ்ட், (மும்பைத் தமிழர்களுக்கேயுரிய) தமிழிலாவது ஒரு பாலக்காட்டுத்தனம்...?

ஊ ஹூ ம் !

# சப்தபதி!

நூறாவது முறையாக அரங்கேற்றுவது போல் ஒரு லாகவம்.. ஒரு இயல்பு..

"உண்மையில், நூறுக்கு மேலாக பல முறை நடித்திருப்போம். அப்படி ராப்பகலாக ப்ராக்டீஸ்" என்கிறார் இந்தக் குழுவின் முதுகெலும்பாய்த் திகழும் ஜானகி ராமகிருஷ்ணன். சாதுக் கணவன் ரோலை சாத்வீகமாகச் செய்து, சாது மிரளுவதையும் சாதுர்யமாகக் காட்டியிருக்கிறார். இவரது மனைவியாக வரும் மீனலோசனி நடிக்கவே யில்லை. அந்த அதட்டலும் உருட்டலும் மிரட்டலும் அவ்வளவு இயற்கை. ஒரே அடாலடிதான்.




அதிகாரக் கணவனான லக்ஷ்மி கண்ணனுக்கு, பாத்திரப் படைப்பு மட்டுமல்ல, மக்கப்பும் மிக கச்சிதம். அந்த சிடுசிடுப்பும், மிகடுப்பும், சிக்கன நடவடிக்கையும், அடக்கி ஆள்வதிலேயே அன்பை வெளிப்படுத்துவதும் தூள்தான். இவரது அடக்கமான மனைவியாக ஆரம்பித்து, பின் அடங்காப் பிடாரியாக மாறும் கல்யாணி ராமானுஜம் அலட்டாமல் செய்திருக்கிறார். சதா டெலிஃபோனில் லொடலொடக்கும் அந்த இளைஞி காயத்ரி கண்ணன் படு நாச்சுரல். ஆனால் எல்லோரையும் தூக்கிச்சாப்பிடுவது மடிசார் மாமியாக வரும் திருமதி நீலகண்டன்தான். அந்தக் காலத்து இங்கிலீஷில் பிளந்து கட்டிக் கொண்டு, மாடர்ன் பாட்டியாக பேத்தியுடன் போட்டி போட்டுக் கொண்டு பெண்ணும் மாப்பிள்ளையும் போடும் சண்டைக்கு டீ.வி.யில் மாட்ச் பார்த்தவாறே எக்ஸ்பர்ட் கமெண்ட்ஸ் கொடுப்பது 'பிரமாதம்'. கடைசி காட்சியில் இரு பெரிசுகளும் - அங்கே கல்யாணி விஸ்வநாதன், இங்கே நீலகண்டன் மாற்றி மாற்றி, சப்தபதிக்கு அர்த்தம் சொல்லி தம் மக்களைத் திருத்துவது பொருத்தமான முடிவு.

நாடகத்தில் ஆண் ஆதிக்கம் Vs பெண் ஆதிக்கமாக இருந்தாலும், முழுவதுமாக பெண்களின் ஆதிக்கம்தான்.

— ஜெ.ஆர்.

"அய்யா! பயிரைப் பாருங்க சாமி யோவ்! எளங்கதிரு. மூக்கா திட்டம் பால் புடிச்சிப் போச்சி. ரெண்டேரெண்டு தண்ணிவுட்டு நனைச்சிட்டாப்போறும். படிக்குப் பாதியாவது தேறும். கொஞ்சம் தண்ணிவுடுங்க சாமியோவ்!"

"ஏய் கிழவா! நவுரு. உம்மோட் டாங்கால் பயிருக்குத் தண்ணி கிடையாது. பள்ளக்கால் பயிருக்கு மட்டுந்தான் தண்ணி தெரியுமில்ல?"



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு ரூ 2000/- பெறும் கதை.

# மடை

**செய்யாறு தி.தா. நாராயணன்**

"பெரிய மனசு வையுங்க சாமீ! ஊருக்கு ஒத்தைக்குடி அண்டிப்பொழைக்க வந்தவன். நீங்களே ஒத்தாசை பண்ணலேன்னா எப்படி சாமீ?"

"டேய்! இன்னா பதிலுக்கு பதில் நின்னு வாயாட்ற? காரியம், கருமாதிக்கு வந்து தொலைக்கற. சரி, அதுக்குத்தான் மேரை குடுத்திட்றோமில்ல? நவுரு."

எனக்குக் கிழவனைப் பார்க்கப் பாவமாயிருந்தது. ஊரில் எல்லோரும் ஏரியிலிருந்த இரண்டுமாதத் தண்ணீரை நம்பி நாற்று நட்டு விட்டார்கள். எப்படியும் புரட்டாசியில் பெய்யும் மழை வந்து கோத்துக் கொள்ளும் என்று நம்பியது பிசகாய்ப் போயிற்று. ஊர் வழக்கப்படி சில அடாவடிகள், வெல்லுவாயன்கள் மேற்பார்வையில் முறை வைத்துத் தண்ணீர்விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ராப்பகலாய்க் காவல். கிழவன் மீண்டும் மீண்டும் அவர்களிடம் போய் நச்சரித்துக் கொண்டிருந்தான்.

"தூத்தெரி! டேய்! செயவனை ரெண்டு போட்டு ஓட்றா."

ஒருத்தன் எழுந்து லுங்கியை மடித்துக் கட்ட, கிழவன் பயந்து தூர ஓடிப்போய் நின்றான்.

**ம**றுநாளே மீண்டும் அந்தக் கிழவனைப் பார்க்க நேரிட்டது. காங்கியாத்தா கோவிலின் திட்டில் உட்கார்ந்து கொண்டு, புகையிலையை அதக்கிக் கொண்டு, நேற்றைய கவலையை மறந்தவனாய் கூத்துப் பாட்டொன்றை சத்தம் போட்டுப் பாடிக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் சிநேகமாய்ச் சிரித்தான்.

"வாங்க தம்பி! அப்புறந்தான் கேள்விப் பட்டேன் சுந்தர வாத்தியார் வூட்டுப் புள்ளையாமே. பம்பாயில இருக்கிறதா முருகேசு தம்பி சொல்லிச்சி, வாஸ்தவம் தானா? குழந்தையில பார்த்தது."



"பம்பாயிலதான் இருக்கோம்! ஆமா நேத்து கம்மாங்கரையில அப்படி கெஞ்சினீங்களே அவங்க விடலைப் பசங்க, உங்க பேச்சு எடுபடாது. உங்கப்புள்ளைய அனுப்பிப் பாருங்க."

கிழவன் உடனே அழ ஆரம்பித்துவிட்டான்.

"புள்ள பாக்கியம் இல்ல தம்பி! மூணும் பொம்பளைங்க. ரெண்டைக் கட்டிக் குடுத்துட்டேன். கடைசி மருதாம்பு-காமாட்சி. அவங்க ஆத்தாளும் புண்ணியவதியாப் பூட்டா"- அவன் அழுகை நிற்கவில்லை. ஏன்டா கேட்டோம் என்றாகிவிட்டது.

அதற்கடுத்த நாள் கழனிப் பக்கம் போனபோது கிழவனும் அவன் மகளும், ஆளுக்கொரு கழியில் இரண்டு பக்கங்களிலும் பிளாஸ்டிக் குடங்களைக் கட்டிக் கொண்டு, ஏரிக்குத் தெற்கே இருந்த தாங்கலில்(குட்டை) இருந்து தண்ணீர் சுமந்துவந்து கழனியில் விசிறிக் கொண்டிருந்தார்கள். காமாட்சி வியர்வையிலும், தண்ணீரிலும் தெப்பமாய் நனைத்து போயிருந்தாள். சில இளவட்டங்கள் மதகுமேல் உட்கார்ந்து அவளை ரசித்துக் கொண்டிருந்தனர். எனக்கு எரிச்சல் கொப்பளித்தது. வேகமாய்ப் போய் கிழவனை மடக்கினேன்.

''அடக்கூறுகெட்டவனே! இப்படி தண்ணி சேந்தி ஊத்தியேவா பயிரைக் காப்பாத்தப்போற? ஆவற காரியமா? உனக்குப் புத்திகெட்டுப் போச்சா?''

"தம்பி! வேற வழியில்ல. ரெண்டு போகமும் சாவியாப் போச்சி. இத்தையாவது காப்பாத்தினாத்தான் பொயக்க முடியும். ஊரைச்சுத்தி கடன். ஆனவரைக்கும் பார்க்கிறோம்; அப்புறம் பெருமான்வுட்ட வழி."

நான் முருகேசவிடம் போய்ப்பேசினேன். அடாவடி கோஷ்டியில் ஒருத்தன் என் பள்ளி சிநேகிதன்.

'அட! நீ சும்மாயிருப்பா. அவன் இன்னா நம்ம ஜாதியா ஜமாத்தா? ரெண்டு போகமா இங்க யாரும் ஒரு மணி நெல்லைவூட்டுக்குக் கொண்டு போவல தெரியுமா? எல்லாவூட்லயும் ரேஷன் கடை அரிசியிலதான் உலை கொதிக்குது. மூட்டை மூட்டையா கொட்னஎரு மண்ணாப் போச்சி. இந்தக் கெயவன் மட்டும் இன்னா கொம்பனா? ஆவற காரியத்தைச் செய்றானா பாரு?''

**கா**லையில் பஸ் ஸ்டாண்ட் பக்கம் ஜேஜேவென்று கூட்டம். பஸ்கள் வரிசையாய் வந்து மக்களை டவுனுக்குள் வாரிச் செல்கின்றன. பிழைப்புத் தேடி நாலாபுறமும் சிதறும் மக்கள். மேஸ்திரி, சித்தாளு, ஆண் கூலி என்று ஏதாவது கிடைக்கும். அங்கேயும் போட்டி. எப்படியும் பத்துல ஏழுக்கு வேலை கிடைத்துவிடும். மிச்சம் பத்துமணி ஈஸ்வரி பஸ்ஸில் சோர்ந்து போய் திரும்பும். அப்புறம் பொழுதுக்கும் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டு, ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொண்டு...

"**வி**வசாயம்னா ஏன் தூர ஓட்றானுங்க?'' மொட்டைச்சி வாயைக் கிளறினேன்.

"அறப்புக்கா? தூ! நாயா பேயா ஓடியாடி நெல்லை ஒப்படிப்பு பண்ணிட்டு சாயங்காலம் போய் நின்னா, தலைக்கு மூணு படி நெல்லு கட்டுமா? ராசா! அங்க வந்து பாரு! ஜல்லிபோட்றப்பவெல்லாம் வடைபாயாசத் தோட சாப்பாடு போட்டு சுளையா நூறு ரூவா கூலி. பத்துமணிக்கெல்லாம் ஜில்லுன்னு கோலா கலரு. இங்க இன்னா போடுவான்? நம்ம ஜனங்க எங்க ஓடும்? சொல்லு நைனா!"



எதிர்ப்பக்கத்து நியாயத்தைக் கேட்டேன்.

''அவனுங்க கேக்குற கூலியக் குடுத்துட்டா அப்புறம் செலவுபோக இன்னா மிஞ்சும்? நாண்டுக்கிட்டுச் சாவ வேண்டியதுதான். பொழப்பா இது? இந்த நாட்ல நெல்லுக்கு மட்டும் வெல்கெடையாதுப்பா! வெங்காயம் கூட நாற்பது ரூபாய்க்கு விக்கும்.''

ஏரிக் கரையில் நின்று பார்க்க, கீழே திட்டுத்திட்டாய் விளை நிலங்கள் பயிரிடப்படாமல் முள்ளுச் செடிகள் மண்டிக் கிடக்கின்றன. பயிரேற்றி பல வருஷங்களாகியிருக்கும்போல. வேதனையாயிருந்தது. இப்படி இங்கே நாட்டின் ஆதார வேர்கள்

கொஞ்சம் கொஞ்சமாய்ச் செல்லரித்துக் கொண்டு வருவதை மேலிருப்பவர்கள் உணர்ந்திருப்பார்களா?

ஆயிற்று. அறுவடை துவங்கிவிட்டது. பள்ளக்காலிலும், பம்ப்செட் நிலங்களிலும் கதிர்கள் சாய்ந்து கிடக்கின்றன. எனக்கு கிழவனை நினைக்கையில் பிரமிப்பாயிருந்தது. அந்த தளர்ந்த மனிதருக்குள்தான் எத்தனை வைராக்கியம்? எல்லோருடைய கேலிப் பேச்சுக்களையும் தாண்டி தண்ணீர் சுமந்து வந்து ஊற்றியே பயிரைக் காப்பாற்றி விட்டானே. ஊரில் பலபேருக்கு இவன்மேல் காய்ச்சல்.

நிறைய பேர் பஸ் ஸ்டான்ட் பக்கம் நின்று அறுவடைக்கு ஆள் பிடிக்க கெஞ்சிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இவர்களைப் பார்த்து எக்காளம் போட்டுச் சிரித்துவிட்டு பஸ் ஏறினார்கள். கண்கலங்கி நிற்கும் இவர்களைப் பார்க்கப் பாவமாயிருந்தது. வீட்டிற்குத் திரும்பினேன். எதிரே

**''சே! இந்தப் பத்திரிகைக்காரங்க அநியாயம் பண்றாங்க சார்.''**

**''என்ன விஷயம்?''**

**''நடிகை நளினாஸ்ரீ முழுகாமல் இருக்காங்கன்னு கொட்டை எழுத்துல எழுதிட்டு, உள்ளே படிச்சுப் பார்த்தால், 'நடிப்புக்கு நான் முழுக்குப் போடலை'னு அந்த நடிகை சொன்னதை எழுதியிருக்காங்களே!''**

**- சீர்காழி வி.ரேவ்தி**

கிழவன் வந்து வழிமறித்தான்.

''நேத்திக்கு அறுத்து ஒப்படிப்பு பண்ணி முடிச்சுட்டேன் தம்பி!''- முகத்தில் பெருமிதம் என்னமாய்ப் பொங்கி வழிகிறது? நினைத்ததை சாதித்துவிட்ட கர்வம்.

''கேள்விப்பட்டேன்! சுமாரா ராசி யாச்சாமே? ஊர்ல பேசிக்கிறாங்க.

''உங்ககிட்ட சொல்றதுக்கென்னப்பா? கூலி போவ கட்டு மூட்டையில இருபத்தொண்ணு தேறிடுச்சி தம்பி! எடை போட்டா என்ன தேறுமோ? கமிட்டிக்கு ஓட்டலாம்னா சத்த வண்டி கெடைக்கல வூட்லதான் அடுக்கி வெச்சிருக்கேன். ஏதோ படிக்குப் பாதியாவது தேறிச்சே.''

''ஊர்ல என்ன பேசிக்கிறாங்க தெரியுமா? நீயும் தலைவர் மாதிரி அடாவடி கோஷ்டிய கைக்குள்ள போட்டுக்கிட்டு தண்ணி பாய்ச்சிக்கிட்டியாம்.''

அதிர்ச்சியாய் நிமிர்ந்தவன் ஒருவினாடி பொலபொலவென்று கண்ணீர் உகுத்து விட்டான்.

''இது அடுக்காதுப்பா. நானும் காமாட்சியும் இந்த ஒரு மாசமாப் பட்ட பாடு இருக்குதே''- மேல் துண்டை எடுத்துக் காட்டினான். தோள் பட்டை புண்ணாகி, ரணத்தில் நொளநொளவென்று சீழ் வடிந்துகொண்டிருந்தது.

''நான் நட்டது டிசினி நெல்லு தம்பி! இங்க எல்லார்க்கும் தெரியும். புழுதிக்கால் பயிறு. ரெண்டு சாலு ஓட்டி வெரை விட்டால் மழைத் தண்ணியிலேயே வந்து விடும்னு சொல்றது. சொற்பத் தண்ணி போதும். ம்..ம்... இன்னா வெல போவுமோ? எது எப்படின்னாலும் காமாட்சிக்கு ஒஸ்தியா ரெண்டு சீலை எடுத்துடணும்பா! சாயம் போன துணிய சுத்திக்கிட்டுக் கிடக்கா. நான் வர்றேன் தம்பி!''

ஆனால் கிழவன் பட்ட பாடுகள் அத்தனையும் வியர்த்தமாய்ப் போய்விட்டதை முருகேசுதான் வந்து சொன்னான். கிழவன் வெளியில் கட்டில் போட்டு நெல்லுக்குக் காவலாய்ப் படுத்திருக்கும்போதே இது நடந்து விட்டிருக்கிறது. மறுநாள் கமிட்டிக்கு ஏற்ற வேண்டிய நெல்லு தாழ்வாரத்தில் இருக்கிறது. காமாட்சி பின் கட்டில் படுத்திருக்கிறாள். மாசிகவுண்டர் வண்டிக்கும் சொல்லியாகிவிட்டது. உள்ளே இறங்கியிருந்த ஆந்திரா சரக்கு ஜில்லென்று தூக்க, கண் அசந்த நேரத்தில், நடுராத்திரியில் பத்து மூட்டைகள் களவாடப்பட்டுவிட்டன. இவன் கண் முழிக்கும்போது எல்லாம் முடிந்து போய், சரிந்து கிடந்த மூட்டை தான் கண்ணில் பட்டது. யாரென்று சொல்ல முடியும்? அய்யோ பாவமே?!

மனசு பதற நான் அவன் வீட்டிற்குப் போன போது கிழவன் கோபமாய்த் திட்டிக் கொண்டிருந்தான்.

இந்தப் பழுத்த உடம்புபட்ட பாட்டையும், சிந்திய வியர்வையையும், இந்த இளம் பெண்ணின் உழைப்பையும் திருடிய திருடர்கள் இந்தக் கூட்டத்தில் யார்? கிழவன் அதற்கப்புறம் எதுவும் பேசவில்லை. துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு மந்தை வெளிப்பக்கம் நடக்க ஆரம்பித்தான். எனக்

குத் தெரியும். இவன் நேராய் சாராயக் கடைக்குத்தான் போவான். இவன் மட்டுமல்ல நெல்லைத் திருடியவன்களும் அங்குதான் குடித்துக் கொண்டிருப்பார்கள்!

இது நடந்த மூன்றாம் நாள் பெரிய கோவிலினுள் ஊர்க் கூட்டம். முதல் வழக்கே கிழவனுடையதுதான். ஊர்ப் பெருந்தனங்களின் முன்பாக கிழவன் கையைக் கட்டி நின்றிருந்தான். பெரிய பண்ணை பொன்னுசாமி கவுண்டர் பேச ஆரம்பித்தார்.

''டேய்! உன் வூட்ல திருடுப் போனா அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும்? நேத்து குடிச்சிப்புட்டு எங்களை மட்டு மருவாதியில்லாமல ஆத்தா, அம்மான்னு திட்டியிருக்கிற... ஆங்.''

''ஊர்ல போட்ற எச்சி சோத்துல வயிறு வளர்க்கிற நாய்க்கு அம்மாத்திமிரா? டாய்!''– முருகேச கிழவனை அடிக்க ஓடினான். நான் பிடித்துக் கொண்டேன்.

''எல்லாம் நாம குடுக்கிற மேரை பண்ற வேலைப்பா. இனிமே கழனியாண்ட 'அரி போடு சாமியோவ்'னு வந்து நிக்கட்டும், சொல்றேன்.''

''இன்னாய்யா சொல்ற? வாயில என்ன கொழுக்கட்டையா? பேசண்டா!'' பெரிய பண்ணை சீறினார்.

கிழவன் தலை நிமிர்ந்து கூட்டத்தை ஒருமுறை பார்த்தான்.

''எப்பா! எதுவும் வில்லங்கமாப் பேசி மாட்டிக்காத. மன்னிப்பு கேட்று.'' காமாட்சி ஓடிவந்து அவன் காதில் சொல்லிவிட்டு விலகினாள்.

கிழவன் குனிந்து எல்லோரையும் கும்பிட்டான். பண்ணைகளைப் பார்த்தான்.

''சாமி! மூணு தலைமுறையா நாங்க இங்க ஊர்வேலை செய்து வர்றோம். எங்க பாட்டன் ஆறுமுகப் பண்டிதன் சம்பாரிச்ச நெலம் இது. கீழ் ஜாதிதான் சாமி! முருகேசத் தம்பி சொன்னாப்பல உங்க வூட்டு எச்சி சோத்துல வயிறு வளர்க்கிற நாயிங்கதான் நாங்க. ஆனா இன்னிக்கு அந்த நாயிங்க சோத்த நீங்களே திருடிப்புட்டீங்களே. இது அடுக்குமா சாமீ? குடங்குடமா ஊத்திக்காப் பாத்தினத கொள்ளைவுட்டுட்டு நிக்கிறேனே. இது யார் வேலை?ன்னு உங்களுக்கெல்லாம் தெரியும். பத்து மூட்டை நெல்லை அவ்வளவு சுலுவா மறைச்சிருக்க முடியாது. நகை நட்டா ஜோபியில போட்டுக்குனு ஓட்றதுக்கு. அதனால இது அசலூர்க்காரன் வேலை இல்லை. இல்லீங்களா சாமீ?''




''நம்ம மளிகை மன்னாரு, அரசியல்வாதிங்ககிட்ட நிறைய கத்துக்கிட்டிருக்கிறாரு.''

''எப்படிச் சொல்றே.''

''மிளகாய்த்தூள் விலை அதிகமா இருக்கேன்னு கேட்டேன். உடனே, ஆந்திரா, கர்நாடகாவை விட என் கடைல மிளகாய்த்தூள் விலை கம்மிங்கறாரு!''

- வந்தவாசி பா. ஜெயக்குமார்

''டேய்... டேய்! அளந்து பேசு. ஊர் வேலை செய்ற கீழ் ஜாதிக்காரன் நெல்லு மேல கை வெக்கிற சன ஜென்மம் எவனும் இங்கில்ல. இது ஏதோ அசலூர்க்காரன் வேலைதான். சரி காவலுக்குப் படுக்கிறவன் புல்லா தண்ணியடிச்சிட்டு மெலாந்துட்டா அது யார் குத்தம்? ஆங்!''

''அப்ப உள்ளூர்காரன் இந்த வேலையைச் செய்யலேன்றீங்களா சாமீ?''

''டேய்... டேய்... பொழைக்க வந்தவன் நம்மளப் பார்த்து ஆதாரமில்லாம திரும்பத் திரும்ப திருடன்றான் பார்த்துக்குனு நிக்கிறீங்களே. போட்றா செயவனை.''

நாலைந்து இளவட்டங்கள் கையை முறுக்கிக் கொண்டு ஓடி வந்தன. கிழவன் இதற்கெல்லாம் மசிந்தவனாய்த் தெரியவில்லை. இப்போது அவனுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்பில் கழுத்து நரம்புகள் புடைத்துக் கொள்ள, அவன் குரல் உச்சஸ்தாயிக்கு ஏறியது.

''உள்ளூர்க்காரன் திருடலேன்னு சொல்லிட்டீங்க இல்ல சாமீ? அப்ப எனக்கு வழிவுட்டு நில்லுங்க. இன்னும் ஒரு மணி நேரத்தில எம் மூட்டைய நடுத் தெருவுக்கு இழுத்தாறேன். என் நெல்லு எனக்குத் தெரியும். கோணிப்பையைத்தான் மாத்தியிருப்பானுங்க. ஊர்லயே டிசினி அறப்பு என்னுது மட்டுந்தான். என்ன? செய்யட்டா? இதுக்கு நீங்கள்லாம் உத்திரவு குடுக்கணும் சாமியோவ்!''

திடீரென்று கூட்டம் அடங்கியது. நிசப்தம். ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்

டனர். பண்ணைகள் முகத்தில் ஈயாட வில்லை.

அட! அன்றைக்கு அடிக்கு பயந்தோடிய கிழவனா இவன்? எனக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை.

"என்னய்யா இது? எக்குத்தப்பாய் மாட்டிக்கிட்டா மானம் போயிடும்யா. ஏதோ பொலம் தெரிஞ்சித்தான் செயவன் இந்த எகிறு எகிறாம் போல. எந்த மானங்கெட்டவன் இந்த வேலையச் செய்தான் தெரியலையே. ச்சீ. பக்கத்தூர்க்காரன்லாம் காரித்துப்பு வான்யா"- பெரிய பண்ணை பக்கத்திலிருந்தவனிடம் அடித் தொண்டையில் புலம்பிக் கொண்டிருந்தார். அவருக்குக் கைகொடுக்கிறமாதிரி சில அடாவடி ஆட்கள் சீறிக் கொண்டு வந்தனர்.


"டேய்! வுடாதே அவனை. செயக்கயுதைக்கு இன்னாத் திமிரு? எங்காளுங்க வூட்டுக்குள்ள வந்து செக் பண்ணப் போறியா? அம்மாந்திமிரா? ராஸ்கோலு நாங்கள்லாம் திருடனாத் தெரியுதா உங்கண்ணுக்கு?"- ஒருத்தன் கிழவனைப் பிடித்துத் தள்ளினான். கிழவன் நிலைகுலைந்து போய் தூர விழுந்தான்.

கூட்டம் குபீரென்று எழுந்து கொண்டது. ஆட்கள் மூலைக்கு மூலை எழுந்து கத்த ஆரம்பித்தார்கள். கிழவனுக்கு ஆத்திரமாயிருந்தது. அடக்கி வைத்திருந்தது அழுகையாய் வெடித்தது.

"தெரியும்யா எடங்குடுக்க மாட்டீங்க. ஊர் மானத்துக்கோசரம் திருட்டுக்குத் துணை போவீங்க. இதுவும் திருட்டுதான்யா. போனா போவட்டும். பத்து மூட்டைதானே? ஒழிஞ்சி போவட்டும்... ஒழிஞ்சி போவட்டும்"- கண்ணீருடன் ஓவென்று இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தவனை காமாட்சி ஓடி வந்து தாங்கிக் கொண்டு ஆசுவாசப் படுத்தினான். கைகள் உதறிக் கொண்டிருந்தன. ஒரு நிமிஷம் நின்று சுதாரித்துக் கொண்டு, திரும்பிநின்று கூட்டத்தை நோக்கி சாஷ்டாங்கமாய்க் கும்பிட்டான்.

"நான் பேசனதுக்குத் தப்பு வாங்கிக்கறேன் சாமி! மன்னிச்சிவுட்டுறுங்க. எம்மா காமாட்சி! பத்து மூட்டைக்கோசரம் அழுவாத. சந்தோசமா நாம இவங்களுக்கு மேரை குடுத்துட்டதா இருக்கட்டும். இன்னா? வாங்கிக்கினவங்க வயிறு ரொம்பட்டும்"- அவர்கள் கூட்டத்தை விட்டு விலகி நடந்தார்கள். ⭘


ஸ்ரீ சுந்தர விநாயகர் துணை



குடந்தை/கோனேரி ராஜபுரம் அருகே அமைந்துள்ள சிவனாரகரம் (நாகை மாவட்டம் – மயிலாடுதுறை வட்டம்) ஸ்ரீ சுந்தர விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் கிராமவாசிகள் மற்றும் இறைவன் நற்பணி மன்றத்தின் சார்பாக வரும் 20.8.2000 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்குள் நடைபெறவுள்ளது.

இதை அடுத்து இதே ஊரில் குடிகொண்டுள்ள ஜலமுகுளாம்பிகே ஸமேத ஸ்ரீ வாருணேச்சுவர் (வருண தீர்த்தம்) கோயில் மிகவும் சிதில மடைந்து இருப்பதால் அதையும் சீர் செய்து வருகிற 2001 – ஏப்ரல்/மே மாதங்களில் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசித்துள்ளோம். இதற்கு இதை கண்ணுறும் பக்தர்கள்/அன்பர்கள் தங்களால் இயன்ற பண உதவியை **Cheque/ DD** மூலமாக **Varuneswar Temple Renovation Fund A/C No. 115, Bharat Overseas Bank Ltd., Big Street, Kumbakonam - 612 001** என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்.

இப்படிக்கு,

இறைவன் நற்பணி மன்றம்

**மேஷம் :**

இந்த வாரம் உங்களுக்குப் பணப் பிரச்னை இல்லை. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புஇருக்கு. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரலாம். பேச்சுல திறமை வெளிப்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு. நகை நட்டு ஏதாவது வாங்கலாம். பத்திரிகையாளர்கள் எழுத்தாளர்களுக்கு நல்ல நேரம் இது. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. உஷ்ண சம்பந்தமான நோய்கள் வரவாய்ப்பிருக்கு.

**ரிஷபம் :**

மனசுல துணிச்சல் ஏற்படும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. இருந்தாலும் செலவு அதிகமாகும். கவனமா இருங்க. காவல் துறை, இராணுவத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றமான வாரம். சிலர் சொத்துக்கள் ஏதாவது வாங்க சான்ஸ் இருக்கு. மனசுல சின்னக் குழப்பம் வந்து வந்து மறையும். புதுசா வர்றவங்ககிட்ட பழகும் போது எச்சரிக்கையா இருங்க. சாப்பாடு விஷயத்துல கொஞ்சம் கட்டுப்பாடா இருந்துக்குங்க.



மேஷ ராசிக்காரரான நக்கீரன் கோபால் வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லதாம்!

**மிதுனம் :**

பேச்சுல நிதானம் அவசியம். உங்க புகழ், அந்தஸ்துக்குக் களங்கம் ஏற்படற மாதிரி ஏதாவது சங்கடங்கள் நடக்கும். கவனமா இருங்க. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. நண்பர்கள்கூட எதிரிகள் ஆகலாம். யார்ட்டயும் வெளிப்படையா பழக வேண்டாம். வயிறு சம்பந்தமான வியாதிகள் வர சான்ஸ் இருக்கு. டென்ஷன் ஆகற மாதிரி நிறைய சம்பவங்கள் நடக்கலாம். அமைதி முக்கியம்.

**கடகம் :**

உங்களோட திட்டங்கள் எண்ணங்கள் இந்த வாரம் நிறைவேறும். துணி வகைகள் வாங்க வாய்ப்பு இருக்கு. பொருளாதார விஷயத்தில் ஏதும் பிரச்னை இல்லை. பணம் கொடுக்கல் வாங்கல்ல ஆதாயம் இருக்கு. எதிரிகள் அடங்குவாங்க. கம்ப்யூட்டர், விஞ்ஞானத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு.

**சிம்மம் :**

கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றமான வாரம். தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் பளிச்சினு தெரியும். பிற மொழி, மதத்தவங்க உங்களுக்கு உதவ முன்வருவாங்க. உடல் ஆரோக்கியத்துல கவனம் அவசியம். உஷ்ண சம்பந்தமான பாதிப்புகள் வரலாம். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கையா இருங்க. வீண் வம்புகள்ல தலையிடாதீங்க. பயணத்தைத் தவிர்த்திடறது நல்லது.

**கன்னி :**

சின்ன சின்னதா பிரச்னைகள் வந்தாலும் அதை சமாளிச்சுடுவீங்க. பொருளாதாரப் பிரச்னை ஏதும் இல்லை. மருத்துவம், விஞ்ஞானம் ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கும் நல்ல முன்னேற்றம் இருக்கு. உற்சாகமான தகவல் ஒண்ணு

## ஆகஸ்ட் 16 முதல் 22 வரை

## அக்னிசர்மா பக்கம்

# நடக்குமென்பார், நடக்கும்!

வந்து சேரும். வீட்ல விஷேஷம் நடக்கலாம்.

**துலாம் :**

எந்தக் காரியத்தையும் எப்பாடுபட்டாவது நிறைவேற்றி வெற்றி காண்பீங்க. எதிர்ப்புகள் இருக்காது. அரசியல் வாதிகளுக்குப் பெயரும் புகழும் கூடும். சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம். கம்ப்யூட்டர், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல நேரம் இது. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பெயர் புகழ் கிடைக்கும். மனசுல ஏதாவது ஒரு குழப்பம் வந்துட்டே இருக்கும். கண்டுக்காதீங்க.

**விருச்சிகம் :**

உங்க புத்திசாலித்தனம் பளிச்சிடற மாதிரி இந்த வாரம் ஏதாவது காரியம் பண்ணுவீங்க. பொருளாதாரப் பிரச்னை திருப்தியா இருக்கும். இதுவரை இருந்த பிரச்னைகள்லாம் இப்ப தீரலாம். சிலருக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கலாம். வெளிநாட்டுத் தொடர்பு மூலமா பயன் கிடைக்கும். குடும்பத்துல சின்ன சின்ன பிரச்னைகள் வரலாம். பொறுமையைக் கடைபிடிங்க. நிதானம் அவசியம். பயணத்தை ஒத்தி போடறது நல்லது.

**தனுசு :**

உங்க முக வசீகரம் அதிகரிக்கும். அடிக்கடி கண்ணாடி பார்ப்பீங்க. எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டுக்கு வாய்ப்பு இருக்கு. உடல் நலன்ல கவனம் வையுங்க. வெளியூர்ப் பயணம் இருந்தால் ஒத்தி வச்சுருங்க. விபத்து நடக்கலாமாம்.

**மகரம் :**

நல்லவங்களோட உதவி திடீர்னு உங்களைத் தேடி வரும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. கொடுக்கல் வாங்கல்ல லாபம் இருக்கு. புதிய ஆடை அலங்காரப் பொருட்கள் வாங்க வாய்ப்பிருக்கு. சிறு சிறு சங்கடங்கள் வரலாம். அதைப் பக்குவமா சமாளிச்சுடுவீங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றமான வாரம் இது.

**கும்பம் :**

தன்னம்பிக்கையோடு, எடுத்த காரியத்தை வெற்றிகரமா செய்து முடிப்பீங்க. அரசியல்வாதிகளுக்கு வரவேற்பு அதிகரிக்கும். சொத்து வாங்கறதுக்கு நல்ல நேரம் வந்திருக்கு. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு வெற்றி வாய்ப்பு அதிகமா இருக்கு. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க. பயங்கரமா செலவு ஆகும். கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம்.

**மீனம் :**

உங்களோட புத்தி கூர்மை வெளிப்படும் நேரம் இது. இயந்திரப் பணியாளர்களுக்கு முன்னேற்றமான வாரம். உற்சாகமான சூழ்நிலை உருவாகும். மனசுல சின்னக் குழப்பம் இருந்துட்டே இருக்கும். பண விஷயத்துல எச்சரிக்கை அவசியம். புதிய திட்டங்கள்ல இந்த வாரம் ஈடுபட வேண்டாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது சோதனைக் காலம்.

● **பி. மீனா கணபதி, நெல்லை டவுன்.** ●

? ***குடும்பக் கட்டுப்பாடு கெடுபிடி ஒரு பக்கம். அக்கெடுபிடி இல்லாமல் மதத்தின் கோட்பாடைக் காட்டி மக்கள் தொகையைப் பெருக்கிக் கொண்டே போகும் இஸ்லாம் மக்கள் இன்னொரு பக்கம். இப்படியே போனால் ஒரு காலகட்டத்தில் இந்துக்களே இல்லாமல் இஸ்லாமியர்களின் பெரும்பான்மை கொண்ட இந்தியா உருவாகும் இல்லையா...?***

! இதுபோன்ற பயங்களைப் போக்கத்தான் uniform civil code தேவை என்பது. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு எனில், எம்மதமும் சம்மதம் எனில், அனைத்துக்கும் பொதுவான சட்டங்கள் அமைவதே சரி.

● **கே.ஆர். வேலுச்சாமி, அன்னூர்.**

? ***சோனியாவின் வருகையால் தமிழக காங்கிரஸ் பலப்படுமா...?***

! தி.மு.க.வையும் பி.ஜே.பியையும் நன்றாகத் தட்டிக் கேட்டு கோவையில் ஒரு கலக்கு கலக்கியிருக்கிறார் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவர் அ.தி.மு.க.வுக்கு வால் பிடிப்பதுதான் கசப்புணர்வை அதிகரிக்கச் செய்கிறது. காங்கிரஸ், த.மா.கா. ஆதரவாளர்கள் கூட தங்கள் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளருக்கு வாக்களிக்காமல் புறக்கணித்தால் தமிழகம் சிறக்கும்! அத்தகைய புத்திசாலித்தனமான செயல்பாட்டைத்தான் வாக்காளரிடம் எதிர்பார்க்கிறேன்.

● **பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.**

? ***'குற்றவாளியை (வீரப்பன்) கதாநாயகனாக்குவதா?' என்று வீரப்பனால் கட்டுக் கொல்லப்பட்ட அதிரடிப் படைத் தலைவர் ஹரிகிருஷ்ணாவின் மனைவி ப்ரீதா கேட்டுள்ளது பற்றி...?***

! அப்படியில்லையே, கன்னட திரைப்படம் ஒன்றில் கூட வில்லனாகச் சித்திரித்திருப்பதாகத்தான் படித்த ஞாபகம்.

● **கே. சஞ்சீவி பாரதி, அவ்வையார்பாளையம்.**

? ***ஷேன் வார்னே...?***

! ஷேம் வார்னே!


● **இரா. நல்லகண்ணு, பாளையங்கோட்டை.**

? ***இளையராஜா பெயரில் நூறு கோடி செலவில் இசை ஆய்வு மையம் அமைக்க இருப்பதாக காஞ்சி சங்கராச்சாரியார் அறிவித்துள்ளது பற்றி...?***

! ஆச்சார்யர்கள் அரசியல்வாதிகள் போல் திட்டங்



• கோவை கலக்கல்



• 'வில்ல'ன்!

# செங்கோட்டையன் பெற்ற தண்டனை குறித்து..?

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
அ. ஜெகதீசன்,
76-எ-5, கோபால் தெரு,
பொன்னம்மாபேட்டை,
சேலம் - 636 001.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
பி. மீனா கணபதி,
திருநெல்வேலி டவுன்.

களை அறிவிக்கக் கூடாது. மௌனமாக நடத்திக் காட்ட வேண்டும்.

● அ. ஜெகதீசன், சேலம் - 1. ❑

*? அரசியல் தலைவர்களால், ஆட்சியாளர்களால், அதிகாரிகளால் முடியாததை சந்தனக் கடத்தல் வீரப்பன் சாதிப்பான் என்று தோன்றுகிறது. தமிழ் நாட்டுக்குக் காவிரி நீரை விட வேண்டும் என்று அவன் நிபந்தனை விதித்தால், அது உடனே நிறைவேறிவிடும் அல்லவா...?*

! ஒரு தமிழ்த் தீவிரவாத அமைப்பால் இயக்கப்பட்டு வீரப்பன் பேசுகிறான் என்பது மிகத் தெளிவாகத் தெரியவில்லையா? தீவிரவாதமே கண்டனத்துக்குரியது. அது சமூக விரோத குற்றத்துடன் கைகோத்துக் கொண்டு பிளாக்மெயில் செய்வது அருவருப்பானது. தமிழர் கௌரவத்துக்கு இதைவிடப் பெரிய இழுக்கு இருக்க முடியுமானால், இந்த நடவடிக்கைகளை நெடுமாறன் போன்ற தலைவர்கள் ஆதரிக்கும் கூத்து தான்!

● ரு. கணேசன், பனங்காட்டூர்.

*? 'எனது ராஜினாமா அரசுக்கும் தேசத்துக்கும் பெரிய இழப்பு' என்று ராம்ஜெத்மலானி கூறியிருப்பது குறித்து...?*

! பூனை கண்ணை மூடிக் கொள்ளலாம்; அதனால் உலகமே அஸ்தமித்துவிட்டதாகக் கூறினால் எப்படி?

● கூ. சாந்தி, காட்பாடி.

*? ஜெயலலிதாவைப் பிரதமராக்குங்கள் அவர் தீவிரவாதத்தை ஒடுக்குவாரென்று பி.எச். பாண்டியன் பார்லிமெண்டில் பேசியுள்ளாரே?*

! ஹஹஹஹா! ஹிஹிஹி! ஹோ ஹோ ஹோ!


● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 84.


• சே!

*? சுதந்தர இந்தியாவின் முதல் கிரிக்கெட் அணியின் கேப்டனாக விளையாடி பல சாதனைகள் படைத்த லாலா அமர்நாத் அண்மையில் காலமாகி விட்டாரே... அவரைப் பற்றிச் சில வரிகள்?*


• நாற்பதுகளின் நாயகன்!


! ஒரு நாள் ஆட்டத்துக்கான திறமைகளும் தகுதிகளும் அன்றே (1940கள்) பெற்றிருந்த ஆல் ரவுண்டர். ஆட்டக்காரர், அணித் தலைவர், அணி மானேஜர், தேர்வுக் குழுத் தலைவர் என்று படிப்படியாகப் பல பொறுப்புகள் தாங்கி இந்திய கிரிக்கெட்டுக்குச் சேவை செய்தவர். ஆட்டத்துக்கு இரண்டு மகன்களையும் அளித்தவர்.


• தீர்ப்பே தண்டனை!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.


• அனாவசிய அறிவிப்பு!

*? ஜீவா போக்குவரத்துக் கழக ஊழல் வழக்கில் செங்கோட்டையனுக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கிடைத்துள்ளது பற்றி...?*


• தூங்கும் பூனை!

! நீதிபதி ஆறுமுகப் பெருமாள் ஆதித்தன் வழங்கியுள்ள நான்காண்டு கடுங்காவல் தண்டனையைக் காட்டிலும் அவரது தீர்ப்பின் வாசகங்கள் வலுவானவை. மானமுள்ளவர்களானால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகத் தோன்றும்.


**லாலு பிரசாத் யாதவ் 'உருவான' கதையை விவரமாகச் சொல்லும் புத்தகம் ஒன்று வெளிவந்திருக்கிறது. 'தி மேக்கிங் ஆஃப் லாலு யாதவ்; தி அன்மேக்கிங் ஆஃப் பீகார்' என்ற இப் புத்தகத்தை சங்கர்ஷன் தாகூர் என்பவர் எழுதியிருக்கிறார். லாலுவைப் பற்றி நிறைய சுவாரசியங்கள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.**

**1990**ம் வருடம், மார்ச் மாதத்தில் ஒரு நாள் பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம். கூட்டத்தில், "(அப்போதைய பீகார் முதலமைச்சர்) ஜகன்நாத மிஸ்ராவின் மக்கள் விரோத ஆட்சிக்கு முடிவு கட்டும் வரை நான் ஓயமாட்டேன். இந்த பீகாரையே மாற்றிக் காட்டுவேன்" என்று ஒரு அரசியல்வாதி அறை கூவல் விடுத்தார்.

முதலமைச்சரானவுடன் 'தான் சாமானியனின் பிரதிநிதி' என்று காட்டிக் கொள்ள அவர் அடித்த ஸ்டண்ட்கள் கொஞ்ச நஞ்சமில்லை. முதலமைச்சருக்குரிய அரசாங்க பங்களாவில் அவர் குடியேறவில்லை. பாட்னா கால்நடை மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்து வந்த அவரது சகோதரருக்கு அளிக்கப்பட்டிருந்த குவார்ட்டர்சிலேயே தங்கிக் கொண்டார். அந்தக் குடியிருப்பை ஒட்டிய மரத்தடியில்தான் அமைச்சரவைக் கூட்டமே நடத்துவார். ஒரு தடவை, லாலுவின் குழந்தைக்கு உடம்பு சரியில்லை. தானே குழந்தையைத் தூக்கிக்கொண்டு, அரசாங்க மருத்துவமனைக்குப் போய், புறநோயாளிகள் பிரிவில் நோயாளிகளுக்குரிய க்யூவில் நின்று கொண்டு, பரபரப்பூட்டினார்!

ஒரு முதலமைச்சர், கள்ளச்சாராய வேட்டைக்குப் போய்க் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? லாலு அதையும் செய்திருக்கிறார். இது போன்ற ஸ்டண்ட்

# கள்ளச்சாராய



களை அவர் தொடர்ந்து கொண்டிருப்பதற்கு உதாரணம்தான், பால் கறப்பது, சிறுவர்களுக்கு முதலமைச்சரே முடி வெட்டி விடுவது இவையெல்லாம்.

பத்தாண்டுகளுக்கு முன்பு, காந்தி மைதானத்தில் லாலு பேசியபோது இருந்த கல்வியறிவு இன்மை, ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டம், லஞ்சம், ஊழல் மற்றும் இதர பிரச்னைகள் இன்றளவும் பீகாரில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் ஒழிப்பதாக மக்களிடம் சொல்லி, முதலமைச்சராகி விட்ட லாலுவின் வாழ்க்கையில் ஏகப்பட்ட மாற்றங்கள். வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்து விட்டதாக லாலு தம்பதி மீது வழக்கு நடக்கிறது. அன்று ஜகன்நாத் மிஸ்ரா மீது லாலு சொன்ன குற்றச்சாட்டுக்களை இன்று மற்ற அரசியல் கட்சிகள் லாலு மீது சொல்கின்றன!

"**சி**ன்ன வயதில், தலையை

அழகாக வாரிக் கொள்ள வேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. தலை வாரி நல்ல உடையணிந்து, நான் எருமை மாடுகளை மேய்க்கப் போவேன். கிராமத்துப் பெரிய மனிதர்கள், "மாடு மேய்க்கிற பையனுக்கு, நல்ல துணி எதற்கு? தலைமுடியைக் கலைத்துக்கொள்!' என்று சொல்லி அடிப்பார்கள். தினமும் அடி வாங்குவேன். தாழ்ந்த ஜாதியில் பிறந்ததால்தானே இத்தனை சோதனைகளும் என்று நினைத்து மனம் வெதும்புவேன்.

"என்னைப் படிக்க வைக்க, என் குடும்பத்தினர் அனைவரும் கடுமையாக உழைத்தனர். உயர்ஜாதிக்காரர்களிலும் ஏழைகள் உண்டு. ஆனால் அவர்கள் கேட்டால், உணவும் மற்றவையும் கிடைத்து விடும். தாழ்ந்த ஜாதிக்காரர்கள் பிழைப்புதான் கஷ்டம். நான் படிக்க

# வேட்டையில் லாலு!

வேண்டும் என்பதற்காக மொத்தக் குடும்பமும் ஒருவேளைதான் சாப்பிட்டார்கள். இளமையில் நான்பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை" என்று கூறிய லாலுவின் இன்றைய நிலை என்ன தெரியுமா?

"என் இஷ்டப்படி தலைமுடியை வாரிக் கொள்வேன். மிகச் சிறந்த மஸ்லின் துணியில் உடை அணிகிறேன். என் கன்னம் இரண்டிலும் எத்தனை பளபளப்பு? நான் மிகச் சிறந்த தேன் சாப்பிடுவதுதான் அதன் ரகசியம்" என்கிறார்.

"உயர்ஜாதிக்காரர்கள் என்னை வெறுக்கிறார்கள். என்னை ஒழித்துக் கட்டப் பார்க்கிறார்கள். ஆனால் அது நடக்காது. இன்னும் இருபது வருடங்களுக்கு நான் அவர்கள் மார்பு மீது ஏறி கம்பீரமாக நின்று கொண்டிருப்பேன்! எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இன்னும் இருபது வருடங்கள்!" கொக்கரிக்கிறார் லாலு!

தான் விரும்பிய இடங்களுக்குப் போய் வர வாங்கிய சிறு விமானத்துக்கு லாலு சூட்டிய செல்லப் பெயர்: பறக்கும் மிஷின். பாட்னா நகர வீதிகளில் சைக்கிளில் சுற்றுவது போல ஆறு பேர் பயணம் செய்யும் குட்டி விமானத்தைப் பயன்படுத்துவார் லாலு. திடீரென்று அதில் ஏறிக்கொண்டு, டெல்லிக்குப் புறப்பட்டு விடுவார். விமானத்தின் உள்ளே நிறைய சாக்லேட் வைத்துக்கொண்டு, கூட வருகிறவர்களுக்குக் கொடுத்து, "இந்த சாக்லேட், எருமைப்பாலிலிருந்து செய்யப்பட்டது. ஜாலியாய்ச் சாப்பிடுங்கள்; லாலுவின் ஆட்சியை அனுபவியுங்கள்" என்று சொல்லுவார்!


**லா**லுவின் ஆட்சியில் அதிரடியாக ஏராளமான சம்பவங்கள் நடக்கும். தான் பதவியிறங்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் தன் மனைவியை முதல்வராக்கியது இதன் சிகரம். மனைவிதான் மாநில முதல்வர் என்றாலும், லாலுவின் அதிகாரம் எப்படி இருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம் :

தேவானந்த் பிரசாத் என்பவர் ராப்ரி அமைச்சரவையில் அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர். திடீரென்று ஒருநாள், லாலுவின் அறிவுரையின் பேரில், அந்தத் துறை அவரிடமிருந்து பறிக்கப்பட்டு, அவர் சட்டத்துறை அமைச்சர் ஆக்கப்பட்டார். சட்டத் துறையில் பெரும் பணம் புழங்காது என்பதால், தேவானந்த் பிரசாத்துக்குக் கடும் கோபம். உடனே பாட்னாவின் சில பத்திரிகையாளர்களை அழைத்து, லாலு மீது குற்றச்சாட்டுகளைப் பட்டியலிட்டு, பரபரப்பூட்டினார்.

லாலு சும்மா இருப்பாரா? அவர் பத்திரிகையாளர் ஒருவரை அழைத்து, தேவானந்த் பிரசாத் சம்பந்தப்பட்ட சில ரகசியப் பைல்களைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அதன் அடிப்படையில், தேவானந்த் பிரசாத் பற்றி பரபரப்பான கட்டுரைக்கு விஷயம் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் தன் அலுவலகம் சென்றார். அன்று இரவு, அந்தப் பத்திரிகையாளரைப் போனில் கூப்பிட்டு, தேவானந்த் மீதான குற்றச்சாட்டுகளைப் பிரசுரிக்க வேண்டாம்" என்றார். "என்ன காரணம்?" என்று கேட்டார் பத்திரிகையாளர். "நாங்கள் இரண்டு பேரும் ராசியாகி விட்டோம். நீங்கள் மீறி பிரசுரித்தால், லாலுவைப் பிடிக்காத எதிர்க்கட்சிகளின் சதி என்று மறுப்பு அறிக்கை வெளியிட்டு விடுவேன்" என்று கூலாகச் சொன்னார் லாலு பிரசாத் யாதவ்!

**— எஸ். சந்திரமௌலி**

# கண்ணாடி



வகிடெடுக்கவும்
பொட்டு வைத்துக் கொள்ளும் போதும்
கை தவறி நழுவ விட்ட
கண்ணாடியின் பெரியதுண்டு,
வரும்போதெல்லாம்
சொல்லாமல் இருப்பதில்லை...
பக்கத்து வீட்டு மருமகள்:
''ஒடஞ்ச கண்ணாடியில
மொகம் பாத்தா குடும்பத்துக்காவாது''
ஆகாமல் போவதற்கு
ஒன்றுமில்லை என்பதறிந்தும்
சரி... என்னதான் இருக்கிறது...
எனக்கும்–அவளுக்கும் பேசிக் கொள்ள...
இருந்துவிட்டுப் போகட்டுமே...
ஒரு உடைந்த
கண்ணாடித்துண்டாவது...

— ச. இளம்பிறை

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

## வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...





**அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!**

அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

## YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)

402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636. Fax: 044-2344333

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesdebuilders.com

BUY & SELL

## All Foreign Currencies & Travellers Cheques

FOREX DIVISION
CREATORS
NOT JUST BUILDERS

- Authorised by RBI as Full fledged Money Changers
- Authorised Dealers for Travelers Cheques
- Open on all 7 days of the week.

**Forex Division**
**Yesde Associated Builders Ltd.**

105, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),
T. Nagar, Chennai - 600 017
Ph: 4340210, 4342667 Tele Fax: 91-44-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka





## தரணி ஆள கணினிக் கல்வி
## தயார் நிலையில் தமிழகப் பள்ளி



## கலைஞர் அரசில்
## பள்ளிதோறும் கணினிக் கல்வி

அனைத்து அரசு மேனிலைப் பள்ளிகளிலும்
கணினிப் பயிற்சி

கடந்த ஆண்டில் 660 பள்ளிகளில் ரூ.112 கோடி செலவில் கணினிப் பயிற்சி
இவ்வாண்டில் 565 பள்ளிகளில் ரூ.73 கோடி செலவில் கணினிப் பயிற்சி
16 மாநகராட்சி பள்ளிகளில் ரூ.1.85 கோடி செலவில் கணினி
60 கலை அறிவியல் கல்லூரிகளில் ரூ.25.22 கோடி மதிப்பீட்டில் கணினி
12 மருத்துவக் கல்லூரிகளில் ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் கணினி
5 சட்டக் கல்லூரிகளில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் கணினி